JL
Y15 m.XII N 24CM
N 25.2.5
207605

1925. VOL. II. No. 5.

சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய
மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர். சகோதரி வி. பாலம்மாள்.

மலர் II.] குரோதன—மார்கழி. [இதழ் 5.

பொருளடக்கம்.

பெண்மக்களும் தேச பாஷையும்.
(பத்திராதிபர்.)

பிள்ளை வளர்ப்பு.
(ஸ்ரீமான் V. நடராஜன், B.A., L.T.)

போட்டி.
(ஸ்ரீமதி சுசீலா.)

நம்மவரது பழக்க வழக்கங்கள்.
(ஸ்ரீமான் எல். ஆர். வேங்கடரமணன், பி.ஏ., பி.எல்.)

பாட்டியம்மாளின் சமூக ஊழியம்.
(ஸ்ரீமதி அன்னபூரணி.)

உமா—சிறு கதை.
(ஸ்ரீமதி P. மங்களாபாயி.).

இன்னும் பல சிறந்த வியாசங்கள்.

மார்கழி

DECEMBER

12 FEB

 All Rights Reserved.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
சுபோதராம சரிதம்—அர்த்தத்துடன் ... (சகோதரி வி. பாலம்மாள்.)	... 258	பிள்ளை வளர்ப்பு ... (ஸ்ரீமான் V. நடராஜன், B.A., L.T.)	... 282
பெண்களும் தேசபாஷையும் (பத்திராதிபர்.)	... 259	செந்தமிழ் நாட்டுச் சிறப்புக்கும்மி ... (ஸ்ரீமான் நா. கோவிந்தசாமி பண்டிதர்.)	... 285
பகவத்கீதையிலுள்ள சில போத வசனங்கள் (ஸ்ரீமதி P. மங்களாபாயி.)	... 261	போட்டி (ஸ்ரீமதி சுசீலா.)	... 286
மணித்திரள் (ஸ்ரீமான் எம். ஏ. பாலசுப்பிரமணிய முதலியார்.)	... 264	சம்சார சந்நியாசியின் விசாரம் (Zero.) ...	... 288
		மார்க்கோ போலோவின் யாத்திரைகள் ... (ஸ்ரீமான் S. R. அனந்தநாராயண அய்யர்.)	... 291
செலிமா பேகம் அல்லது மொகல் மன்னரின் அந்தப்புரம் (ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்.)	... 265	மோரிட்ஸ்பர்க் இந்து வாலிபர் சங்கத்திற்கு சகோதரி வி. பாலம்மாள் விடுத்த செய்தி—(விவேகபாநு.)	295
செய்நன்றி மறவேல் (ஸ்ரீமான் G. S. ராஜநாயகம்.)	... 269	நம்மவரது பழக்க வழக்கங்கள் ... (ஸ்ரீமான் எஸ். ஆர். வேங்கடரமணன்.)	... 297
பர்வதகுமாரி ... (ஸ்ரீமான் மகேச குமார சர்மா.)	... 271	பாட்டியம்மாளின் சமூக ஊழியம் ... (ஸ்ரீமதி அன்னபூரணி.)	... 301
என்ன எழுதுவது ?—பதிலுரை ... (ஸ்ரீமதி ராதாபாய்.)	... 274	எதற்காக மானிட ஜன்மம் எடுத்தோம் ? ... (ஸ்ரீமதி மைதிலீ)	... 305
நூர்ஜஹான் அல்லது பாதகண்டத்துச் சௌந்தரியக் கொடி. (ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்.)	... 277	உமா—சிறுகதை (ஸ்ரீமதி P. மங்களாபாயி.)	... 307

பத்திராதிபர் அறிவிப்பு.

1. வியாச மெழுதுவோர் தயவு செய்து ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதி யனுப்புவதுடன் பெண்மக்களின் முன்னேற்ற விஷயமாகவே பெரும்பாலும் எழுத வேண்டு மென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. வியாச மெழுதுவோர்களின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதி யல்லர்.

3. ஓரணா அனுப்பினால் பிரசுரிக்கப்படாத வியாசம் திருப்பியனுப்ப சௌகரியப்படும்.

4. வியாசங்கள், மதிப்புரைப் புத்தகங்கள் இவைகளை பத்திராதிபர், "சிந்தாமணி," "விவேகாச்ரமம்," சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை, என்று எழுதவும்.

5. மாதிரிக் காபி வேண்டுவோர் எட்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.

6. நிருபம் எழுதுவோர் அவைகளில் வரக்கூடிய பாடல்களைப் பிழையின்றி கவனித்து எழுதுதல் முக்கியம்.

7. நிருபங்களில் விசேஷமாகப் பாடல்கள் போட்டு நிரப்பிவிடாமல் விஷயத்தைத் தெளிவாயும் சுருக்கமாகவும், தொடர்ச்சியாய் வரக்கூடிய வியாசத்தை முழுவதும் ஒரே தடவையிலும் எழுதியனுப்பும்படி விஷயதானம் செய்வோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8. எட்டணா முன்பணமனுப்பிச் சிந்தாமணி மாதிரிக் காபி பெற்றுக் கொண்டவர் சந்தாதாராகும் பக்ஷத்தில் மாதிரிக் காபி விலை எட்டணா வருஷ சந்தாவில் கணக்கிட்டுக் கொள்ளப்படும்.

9. சிந்தாமணியின் நிர்வாக விஷயங்கள், விளம்பர சம்பந்தமான கடிதங்கள் முதலியவைகளுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,

சிந்தாமணி ஆபீஸ்,

சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.

CHINTHAMANI.

A HIGH CLASS TAMIL MONTHLY.

(Devoted mainly to the cause of Indian Women.)

EDITOR SISTER V. BALAMMAL.

12 FEB 1926

Vol. II.] December 1925. [No. 5.

श्रीशारदायै नमः ।

श्रीरामचन्द्र परब्रह्मणे नमः

சிந்தாமணி

சுபோத ராம சரிதம்.

COMPOSED AND ANNOTATED BY

SISTER V. BALAMMAL

DAUGHTER OF

Late Dr. R. VAIDYANATHA SASTRIAR, M. A., M. B. & C. M.

(All Rights reserved by the Authoress.)

207605

सुबोधराम चरिते

॥ अयोध्याकाण्डः॥

सुमन्त्रानीतमारुह्य स्यन्दनं रघुसत्तमः ।

तमसायास्तटं सायं प्राप पौरैरनुद्रुतः ॥ १८॥

रघुसत्तमः ரகுச்ரேஷ்டரான ஸ்ரீராமரானவர் सुमन्त्रानीतं சுமந்திரரால் கொண்டு வரப்பட்ட स्यन्दनं ரதத்தை आरुह्य ஏறி पौरैः பட்டணத்து ஜனங்களால் अनुद्रुतः (सन्) பின் தொடரப்பட்டவராக सायं சாயங்காலத்தில் तमसायाः தமஸா நதியின் तटं கரையை प्राप அடைந்தார் ॥ १८ ॥

निद्राणान्निशि रामस्तान्वञ्चयित्वा जनान्द्रुतम् ।

निर्ययौ रथमारुह्य रहितं नेमिघोषतः ॥ १९ ॥

रामः ஸ்ரீராமர் निशि நடு இரவில் निद्राणान् தூங்கிக்கொண்டிருக்கும் जनान् ஜனங்களை वञ्चयित्वा வஞ்சித்து नेमिघोषतः சக்கரம் சுழலும் ஓசையின் நின்றும் रहितं இல்லாமலிருக்கும் रथं ரதத்தை आरुह्य ஏறி द्रुतं சீக்கிரமாக निर्ययौ சென்றார் ॥ १९ ॥

शृङ्गिबेराभिधं गत्वा गुहेनाधिष्ठितं पुरम् ।

सुहृदा सङ्गतस्तेन सुमन्त्रमिदमब्रवीत् ॥ २० ॥

सः ஸ்ரீராமர் गुहेन குகனால் अधिष्ठितं ஆளப்பட்ட शृङ्गिबेराभिधं சிருங்கி பேரமென்ற பெயருடைய पुरं நகரை गत्वा சென்று तेन அந்த सुहृदा நண்பனோடு सङ्गतः (सन्) சேர்ந்தவராக सुमन्त्रं சுமந்திரரை इदं இவ்வாறு अब्रवीत् சொன்னார் ॥ २० ॥

गत्वा त्वं नगरं भूपं समाश्वासय दुःखितम् ।

मद्वियोगासहान्पौरानपि मातृगणानिति ॥ २१ ॥

त्वं நீர் नगरं அயோத்தியை गत्वा சென்று दुःखितं துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் भूपं அரசனையும் मद्वियोगासहान् என் பிரிவை ஆற்றாதவர்களான मातृगणान् தாய்மார்களையும் पौरान् अपि நகரவாசிகளையும் समाश्वासय சமாதானப் படுத்தும் इति என்று अब्रवीत् சொன்னார் ॥ २१ ॥

(To be continued.)

ஸ்ரீராம ஜயம்.

சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய

மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர். சகோதரி வி. பாலம்மாள்.

மலர் II.] குரோதன—மார்கழி. [இதழ் 5.

பெண்களும் தேச பாஷையும்.

பத்திராதிபர்.

தற்சமயம் மாணவர்க்குத் தேச பாஷையிலேயே கல்வி புகட்டப்படல் வேண்டுமெனப் பெரியதோர் கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. ஆரம்பகாலம் முதல் தேச பாஷையிலேயே போதனைகளுடன் தேசபாஷையிலேயே புத்தகங்களும் அமைக்கப்பெற்று இருந்திருக்குமாயின் தற்சமய மேற்பட்டுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் என்ற நோய் ஒன்று நம்மில் தலை காட்டியிராது என்பது நிச்சயம். கல்வி என்பது அறிவின் வளர்ச்சிக்கும் ஆன்ம ஞானத்திற்கும் நல்லொழுக்கத்திற்கும் அவரவர்களின் ஜீவனோபாயதத்திற்கும் ஏற்றதாக இருந்த முன்னாளில் இவ்வாறு இந்தியாவில் ஏழ்மை குடி கொண்டிருந்ததில்லை. கலாசாலைகளிற் சென்று கல்வி பயில்வது ஓர் உத்தியோகம் அடைவதின் நிமித்தம் என்ற முறை நம் நாட்டில் ஆரம்பித்ததிலிருந்து உத்தியோகம் செய்வதற்கு அனுகூலமான ஆங்கிலப் பயிற்சியே நம் நாட்டில் தலையெடுத்தல் அவசியமாயிற்று. அரசாங்கத்தின் நடைமுறைகளைக் கவனித்து அரசியல் நிர்வாக சாலையில் அமர்ந்திருக்கும் ஐந்து முதல் ஐயாயிரம் ரூபாய் உத்தியோகஸ்தர் உள்பட அனைவர்க்கும் ஆங்கில பாஷையொன்றே அத்தியாவசியமாயுள்ளதுபற்றி தேச பாஷைகள் புறக்கணிக்கப்பட்டன. தேச பாஷை மங்கியதிலிருந்து தேச ஆசாரங்கள் குறைவுற்றன. இதிலிருந்து சகோதரப்பான்மையும் சமத்துவமும் மெலிவுற்றன. இதனால் தேசாபிமானம் இருந்தவிடந் தெரியாது பறந்தோடியது. இத

Y15 m 211, N24 (M)
N 24:2 5

னால் பண்டைய இந்தியர்க்கும் பழிப்பை விளைவிக்கக்கூடிய பல புதிய ஆசார அனுஷ்டானங்கள் தாண்டவமாடத் தலைப்பட்டன. இதனால் பூர்வீக வாழ்க்கையில் பதிந்தவர்களான பெண்மணிகள் தங்கள் கணவரால் இகழ்ந்துரைக்கப்பட்டார்கள்/இதனால் புதிய முறைகளில் பெண் பள்ளிக்கூடங்கள் தோன்றலாயின. இதன் அபிவிருத்தியில் விவாகமென்பது பெண்மணிகளின் கல்விப் பயிற்சிக்குப் பெரிதும் பாதகம் விளைவிப்பதாயிருக்கின்றதென்ற நவீன உணர்ச்சியும் நமது பெண்மணிகளில் சிலரிடத்தும் உண்டாகத் தலைப்பட்டிருக்கிறதென்றால் இதைக் காட்டிலும் நவநாகரிக வாழ்க்கையின் தீவிர வேலையையும் அபிவிருத்தியையும் நாம் எடுத்துக் கூறல் அனாவசியமே. ஆனால் இந்தியப் பெண்மணிகளினிடையே சிறிதேனும் நடமாடிவரும் பூர்வீக வாழ்க்கையின் அதிருஷ்ட வசத்தால் நமது தற்கால விற்பன்னர்களாகிய ஆடவர்களினிடையே வேலையில்லாத் திண்டாட்டமென்ற நற்காலம் உதித்திருக்கின்றதென்றே சொல்வோம். உத்தியோகமென்ற ஒரு லக்ஷியத்தையே தற்காலக் கல்வி தன்னிற் கொண்டிருத்தலினாலும் நம்மவருக்கு சுயமாகவே தேசபாஷையில் ஆதரவற்றிருந்தமையாலுமே வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படக் காரணமாயிற்று. இத்தகையக் கல்வியையே பெண்மணிகளுக்கும் போதிப்பதில் விளையும் பயன் என்ன? அறிவிற் சிறந்த தாயாகவும் அன்பு மிக்க உடன் பிறந்த சகோதரியாகவுமுள்ள பெண்களுக்குத் தற்காலக் கல்வி எவ்விதத்தேனும் பயனை யளிக்குமா? பொருளீட்டலுக்காக உத்தியோகமென்றும், உத்தியோகத்திற்காகப் பட்டப் பரீக்ஷைகளென்றும், பட்டப் பரீக்ஷைகளுக்காக உயர்தரக் கலாசாலைகள் என்றும், உயர்தரக் கல்விக்காகப் பல வருஷங்களைக் கலாசாலையிலே கழிப்பதென்றும், இத்தகைய கல்விப் பயிற்சிக்கு மட்டற்ற பொருட் செலவு அவசியமென்றும் ஏற்பட்டு உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கும் தற்காலக் கல்வி முறையில் நமது பெண்மணிகள் அபிவிருத்தி யடையமுடியுமா? பரோபகாரமும் ஒற்றுமையும் பொறுமையும் சிக்கனமும் ஒருங்கே பெற்று கிருகதேவதைகளாக விளங்க வேண்டிய நமது பெண்மணிகளுக்குப் பயிற்றுவிக்கக்கூடிய கல்வி தேசபாஷைதான் என்பதை இனியேனும் உணர்வார்களா? இதை யுணர்ந்த காலையிலன்றோ நம்மில் பெண் கல்வி சர்வ சாதாரணமாகப் பரவக்கூடும். ஆனால் தற்காலக் கல்விமுறையைப் பற்றி சிலர் கொண்டுள்ள அபிப்பிராயமென்னவென்றால் பெண்கள் என்றால்மட்டும் இளப்பமா? அவர்களுக்கு மூளையில்லையா? ஆடவர்களைப் போல உயர்தரக் கலாசாலைகளிற் படித்துப் பட்டப் பரீக்ஷைகளில் தேறிப் பட்டதாரிணிகளாக ஏன் ஆகக்கூடாது? பெண்களுக்குமட்டும் உயர்தரக் கல்வி புகட்டுவதற்கு முன்னம் 'கலியாணம், கலியாணம்' என்று ஏன் அவசரப்பட வேண்டும்? பெண்கள் என்றால் வீட்டு வேலைகளைச் செய்து குடும்ப நிர்வாகத்தில் ஈடுபட வேண்டுமென்றே தீர்மானித்துவிடவேண்டுமா? உயர்தரக் கல்வி கற்று, பிறகு அவர்கள் இஷ்டம்போல் விவாகத்தை முடித்துக்கொள்வதே பெண் கல்வியைப் பரவச் செய்வதற்கான உபாயமாகும் என்பனவாம்.

(தொடரும்.)

பகவத்கீதையிலுள்ள போத வசனங்கள்.

(ஸ்ரீமதி P. மங்களாபாயி.)

(248-ம் பக்கத் தொடர்ச்சி.)

மனிதன் மிகவும் இழிவான ஜாதியினனாயிருந்தபோதிலும் அவன் ஒருதரம் பகவானுடைய நாமஸ்மரணை செய்வானாகில் அவன் உடனே சம்சார பந்தத்தினின்றும் முக்தனாவான்.

* * *

எதுவரையில் ஒருமனிதனுக்கு சற்புருஷர்களுடைய பாதசேவை கிடைக்கவில்லையோ அதுவரையில் அவனுடைய புத்தியில் பிரம்மஞானத்தின் பிரகாசம் விழுவதில்லை. அதனால் சிற்றின்பங்களின் விஷத்தன்மை அவனுடைய அநுபவத்திற்கு வருவதில்லை.

* * *

மானிடதேகத்தின் ஸார்த்தகம் சிற்றின்பங்களை அனுபவிப்பதில்லை. சிற்றின்பங்களால் கடைசியில் துன்பம் அனுபவிக்கவேண்டியதாயிருக்கின்றது. விஷ்டையைத் தின்று வயிற்றை நிறப்பும் கிருமிகீடகங்கள்கூட சிற்றின்பத்தை அனுபவிக்கின்றன. அது அனுபவிக்கக் கிடைத்தால், மனிதன் பெரும் புருஷார்த்தத்தைச் சாதித்துவிட்டான் என்கிற அர்த்தமல்ல. இதற்காக மனிதன் ஏதாவது நிகாற்ற காரியத்தை(சற்காரியத்தை) செய்யத்தலைப்பட வேண்டும்.

* * *

சற்புருஷரை அறிவதெப்படி என்று கேட்பீர்களானால் அவர்களுடைய குறிகளை (லக்ஷணங்களை) ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். சற்புருஷர்களுக்கு சகலப் பிராணிகளிடத்திலும் ஸமபாவம் இருக்கும். அவர்களுடைய உள்ளத்தில் காமக்குரோதாதி மனோ விகாரங்களும் ஒருபோதும் மேலிடுவதில்லை. எல்லோருக்குமே கலியாணமுண்டாகவேண்டுமென்கிற எண்ணம் அவர்களுடைய உள்ளத்தில் சதாகாலமும் வசித்துக்கொண்டிருக்கிறது. அவர்களுடைய ஆசரணமும் (நடத்தை) என்றைக்கும் மேன்மை வாய்ந்ததாயிருக்கின்றது. அவர்களுக்கு மனதைக் கடவுளிடத்தில் இலயப்படுத்துவதுதான் பரம புருஷார்த்தமென்று தோன்றுகிறது.

* * *

புலன்களுக்குத் திருப்தி செய்து எந்த தேகத்தின் சுகத்திற்காகப் பாடுபடவேண்டியதாய் இருக்கின்றதோ, அந்த தேகம் எப்படி இருக்கின்றது என்பதை நன்றாக யோசித்துப் பாருங்கள். முதலாவது நீங்கள் எவ்வளவு இரக்ஷித்தபோதிலும் அது நஷ்டம் அடையத்தான் போகிறது. இரண்டாவது அது நஷ்டமடைந்தபோதிலும், அதனுடைய சுகத்திற்காக நீங்கள் செய்த பாபத்தின் பயன் அனுபவித்தாலன்றி வேறு வழியில்லை.

* * *

வீண் அனுமானம் விடுவதற்கு உபாயம் ஹம்ஸரூபியான குருவாகிய நான் (கடவுள்); அந்த என் பேரில் பக்தி வையுங்கள். என்னுடைய சேவையில் தற்பராயிருங்கள். சிற்றின்பம் அனுபவிக்கவேண்டுமென்கிற இச்சையை விடுங்கள். சீதோஷ்ணாதி த்வந்த்வங்களைப் பொறுமையுடன் சகித்துக் கொள்ளுங்கள். தபஸ் புரியுங்கள். காமியகருமம் (பலனை இச்சித்துச் செய்யும் கருமம்), செய்யாதீர்கள். செய்த கருமங்களை எனக்கு அர்ப்பித்து விடுங்கள். என்னுடைய கதைகளைப் பாடுங்கள். என் பக்தர்களுடன் சத

வாசம் செய்யுங்கள். யாருடனும் பகைமை பாராட்டாதீர்கள். சகல ஜீவராசிகளிடத்திலும் சமமான திருஷ்டியை வையுங்கள். சாந்தியைக் கைப்பிடியுங்கள். சரீரம், வீடு இவ்விரண்டின்கண்ணுள்ள பற்றை அறுக்க இச்சை கொள்ளுங்கள். அத்யாத்ம சாஸ்திரத்தை அப்பியசியுங்கள். ஏகாந்த வாசத்தை ஸ்வீகரியுங்கள். பிராணன், புலன், மனம் இவைகளை நன்றாக அடக்கி ஆளுங்கள். குருவினுடையவும் வேதத்தினுடையவும் ஆக்கினைகளைப் பிரமாணமாக நினையுங்கள். பிரம்மசரியத்தைக் காத்துக் கொள்ளுங்கள். கடமையை நிறைவேற்றத் தவறாதீர்கள். பொய் பேசாதீர்கள். கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார் என்கிற அநுபவம் உண்டாகும் வரையில் ஞானத்தைத் தேடுவதை விடாதீர்கள். சமாதி நிலையில் இருக்க அப்பியசியுங்கள். புத்திரர்களே! நீங்கள் இவ்வாறு செய்வீர்களாகில் உங்களிடத்தில் தைரியத்துடனிருந்து முயற்சி செய்யும் சக்தி உண்டாகும்.

* * *

புத்திமான்கள் சஞ்சலமான மனதைக் கொஞ்சமும் நம்புவதில்லை. மிருகங்கள் வலையிற் சிக்கிக் கொண்டிருந்தாலும் புத்திமானான வேடன் அவைகள் ஒருகால் தப்பித்துக் கொண்டு ஓடிப்போனாலும் போகும் என்று நினைக்கிறான். அதைப்போல் ஞானிகள் மனம் எப்போது மிரளும் என்று சொல்ல முடியாது என்று நினைக்கிறார்கள். மனமானது சற்றும் ஸ்திரமில்லாததாயிருக்கிறது. யாரும் இத்துடன் சிநேகம் பாராட்டலாகாது. ஜாரிணியான ஸ்திரீ ஜார புருஷர்களுக்கு இடங்கொடுத்து, அவர்களைக்கொண்டு தன பேரில் விச்வாசத்தை வைத்திருக்கும் பதியின் காதகம் செய்வது போல் இந்தப் பொல்லாத மனமானது காமக்குரோதாதி சத்துருக்களுக்கு இடங்கொடுத்து அதன் மூலமாய் யோகியை நாசம் செய்கிறது. அதனால் காமம், குரோதம், மதம், லோபம், சோகம், மோகம், பயம் முதலிய சத்துருக்களுக்கும் கர்மபந்தங்களுக்கும் ஆதிகாரணமான மனம் ஒருதரம் ஸ்வாதீனமாய் விட்டால் மறுபடியும் அதைத் தலை எடுக்க விடாமல் யார் கார்க்க மாட்டார்கள்?

* * *

பிராயச்சித்தம் செய்து கொண்டதனால் பாபம் நிர்மூலமாகி விடுமென்பதில்லை. ஏனெனில் பிராயச்சித்தம் கொடுப்பவர் கர்ம மார்க்கத்தில் ஆசக்தியுள்ளவர்களாயிருப்பதினால் அவர்களுடைய அஞ்ஞானம் நீங்கியிருப்பதில்லை. உண்மையான பிராயச்சித்தம் என்னவென்றால் தாம் செய்த பாப கருமத்தின் அறிவு (உணர்ச்சி) உண்டாகுதல். ஆகையால் மானிடர் தத்தம் தர்மத்தைத் தழுவி நடக்கவேண்டும். அப்படியானால் அவர்களுக்கு மெல்ல மெல்ல ஞானாதிகாரம் பிராப்தமாகும். நியமமாக அன்னத்தை சேவிப்பதனால் மனிதனுக்கு வியாதி வாராமலிருப்பதுபோலத் தர்ம நியமத்தின்படி நடந்து கொண்டால் அம்மனிதனால் அதர்மம் நேருவதில்லை.

* * *

வைகுண்ட வாசியாகிய பகவானுடைய நாமம் எந்தக்காரணத்தினால் மனிதனுடைய வாயினின்றும வெளி வந்தாலும், எப்படித் தவறுதலால் அமிர்தம் வயற்றிற போனாலும் சகல வியாதிகளும் பரிகாரமாய் அமரமாகின்றதோ அவ்வாறு அம்மனிதனுடைய சகல பாபங்களும் அழிந்து அவன் புண்ணிய புருஷர்களுள் அக்ரகண்யனாவான்.

* * *

அமிர்த சஞ்சீவினியை அறியாத வைத்தியர்கள் கண்ட மருந்துகளை எல்லாம் கொடுத்துக் கொண்டு உட்காருவதுபோல், பாபநாசனத்திற்குத் தகுதியான உபாயத்தை அறியாதவர்கள் நானாவிதமான பிராயச்சித்தங்களைப் பண்

ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் புத்திமானானவர்கள் இத்தகையதொன்றும் செய்யாமல் ஷட்குண ஐசுவரிய (ஷட்குணைச்வர்யம்) சம்பன்னனான பகவானுடைய பக்தியை மனப்பூர்வமாய்ச் செய்கிறார்கள்.

* * *

தாய் தந்தையர்கள் மக்களையும், கணவன் மனைவியையும், க்ருஹஸ்தாச்சிரமிகள் துறவிகளையும், பிரஜாபதிகள் பிரஜைகளையும் இரக்ஷிக்கவேண்டும்.

* * *

இந்த அசாசுவதமான சரீரத்தைக்கொண்டு தர்மம் சாத்தியமாய்ப் புகழ் அடைவதாய் இருந்தால், எவன் அதை சாதித்துக்கொள்ளாமலிருக்கிறானோ, அவன் மூர்க்கனென்று நினைக்கவேண்டும். இத்தகைய மனிதனைவிட ஜடபதார்த்தங்கள் எவ்வளவோ மேல்! காரணம்: மரம், சிலை முதலிய ஜட பதார்த்தங்கள் எப்போதும் மனிதர்களுக்கு உபயோகப்படசித்தமாயிருக்கின்றன. வாஸ்தவமாகப் பார்த்தால் பொருள், மனைவி, மக்கள், ஆப்தர் இவைகளும் நம் சரீரமும், இவையெல்லாம் அழிவுடையன. இவைகளெல்லாம் எப்பொழுது நஷ்டமாகுமென்பது சொல்லவே முடியாது. ஆகையால் இவைகளால் பரோபகாரம் நேரும் சமயம் வாய்ந்தால் மனிதன் சற்றும் தயங்கலாகாது.

* * *

விருத்திராசுரன் தைத்தியர்களுக்கு உபதேசிக்கிறான்—பிராணி ஜன்மமெடுத்தால், அவனுக்கு மிருத்யு இருக்கத்தான் இருக்கிறது. அது எந்த உபாயத்தினாலும் தவறப்போவதில்லை. ஆகையால் நான் உங்களுக்குச் சொல்லுவதென்னவென்றால், எந்த இடத்தில் மரணம் வந்தால் புகழ்கிடைத்து முக்தி பிராப்தமாகிறதோ, அங்கிருந்து பின்வாங்கித் தம் ஜீவிதத்தை வீணாக்கிக்கொள்ளாதீர்கள். இவ்வுலகில் மரணத்தின் சர்வமான்யமான விதங்கள் இரண்டே இருக்கின்றன. ஒன்று யோகாப்பியாசத்தினால் பிராணவாயுவை ஜயித்து ஆத்மாவை ஸ்வஸ்வரூபத்துடன் சேர்த்து தேகத்தைத் தியாகம் செய்வது; இரண்டாவது, போர்க்களத்திற்குப் புறங்காட்டாமல் பராக்கிரமம் செய்துகொண்டே வீரமஞ்சத்தின்மீது தேகத்தை வைப்பது.

* * *

உண்மையான சூரர்கள் பயமடைந்தவர்கள் பேரில் சஸ்திரத்தைப் பிரயோகிப்பதில்லை.

* * *

பொம்மலாட்டத்தில் மரப்பொம்மைகளை ஆட்டி வைக்கும் சூத்திரதாரனைப்போல் இந்த சர்வ பூதங்களுடைய சூத்திரங்களும் அந்த ஈச்வரனுடைய ஆதீனத்திலிருக்கின்றன.

* * *

இவ்வுலகில் பிராணிகள் ஒருங்கு கூடியிருப்பதானது தண்ணீர்ப் பந்தலில் வழிப்போக்கர்கள் சந்திப்பதுபோல் க்ஷணிகமாயிருக்கிறது. கடவுள் செயலால் எப்பொழுதாவது ஒருவருக்கொருவர் கலந்து இருக்கின்றனர்; பிரிந்தும் போகின்றனர். சரீரமானது நீரினுண்டாகும் குமிழியைப்போலிருக்கின்றது. அக்குமிழி எப்பொழுது உடையும் என்று சொல்லமுடியாததுபோல் இந்த சரீரம் எப்பொழுது விழும் என்று சொல்ல முடியாது. எந்த சைதன்னிய சக்தியினால் இந்த தேகம் நடக்கிறதோ அந்த சரீரம் விழுந்துவிடுகிறது. அந்த சைதன்ய ரூபமான ஆத்மா என்றும் சாவதில்லை, என்றும் குறைவதில்லை, என்றும் வளர்வதில்லை. எப்பொழுதும் ஒரேமாதிரியாயிருந்து நிர்மலமாயிருக்கிறது. அதற்கு எவ்விதமான உபாதியும் கிடையாது. ஜலத்தில் மரத்தின் பிரதிபிம்பம் விழுந்திருந்தால் அது அசைவுற்றால் விருட்சமும் அசைவுறுவது போல்தோற்றுகிறது. ஆனால் அவ்விருட்சம் உண்மையாக அசைவுறுவதில்லை. அதுபோல் ஆத்மா ஸ்திரமாயிருக்கின்றது.

"மணித் திரள்."

ஸ்ரீமான் எம். ஏ. பாலசுப்பிரமணிய முதலியார்.

எல்லா நூல்களையும் ஒழுங்காகக் கற்று, உண்மைப் பொருளின் தாளைவணங்கானாகில் அவன் ஒழுங்காகக் கற்ற கல்வி யனைத்தும் பயன்படா.

* * *

எந்த விதத்தும் தனக்கு நிகரில்லாதானது தாளை வணங்கினார்க்கு மனக்கவலை எள்ளள வும் கிடையாது.

* * *

மழை வேண்டிய காலத்திற் பெய்வதனால் அது தேவாமிர்தத்தினுக் கொப்பாகும்.

* * *

மழை என்னும் வருவாய் உலகிற் கில்லை யேல், உலகத்தில் ஏர் உழுபவர்கள் உழார்கள்.

* * *

திண்மை என்னும் அங்குசத்தால் ஐம் பொறிகளை எவன் அடக்கி ஆளுகிறானோ அவன் தான் மோட்ச உலகத்திற்கு ஒரு வித்தாவான்.

* * *

அறம் செய்வோன் மனத்தில் மாசில்லா திருத்தல் வேண்டும்.

* * *

அறத்தால் வருவதே இன்பம். மற்றக் காரி யங்கள் செய்வதினால் வரும் இன்பங்கள் இன் பங்களாகாது.

* * *

ஒருவனுக்கு நாம் செய்யவேண்டியது நல் வினையே. ஆனால் நாம் ஒருவனுக்குச் செய்யக் கூடாதது தீவினையே.

* * *

இறந்தவர்களின் இல்லாமையைக் கருதிக் கண்ணீர் விடுபவன் மூடனென யாவராலும் இகழப்படுவான்.

* * *

ஒவ்வொரு நற்காரியங்களும் ஆரம்பிக்குங் காலத்து மிகவும் கஷ்டத்தைக் கொடுத்துப் பின் சுகத்தைக் கொடுக்கும்.

* * *

மனதை அடக்கி ஆள்வதற்கு முதலில் சரீ ரத்தை சுகமான வழியில் வைத்துக் கொள்ள வேண்டும்.

* * *

ஜனங்களிடம் உண்மையான விசுவாசங் கொண்டவன் யாவரிடத்தும் எள்ளளவேனும் பொறாமை கொள்ளமாட்டான்.

* * *

இவ்வுலகத்திலுள்ள பொருள்களனைத்தும் மானிட இனத்தினுக்குச் சொந்தமல்ல. ஆனால் அப்பொருள்கள் யாவும் பரம்பொருள் ஒன்றிற்கே சொந்தமானவை.

* * *

முதலில் பகவானை நேசித்து, பின்பே உல கத்தை நேசிக்க முயலவேண்டும்.

* * *

அறிவுள்ளவன் தன் உயிரையும் செல்வத் தையும் பிறனுடைய உபயோகத்திற்காகவே வைத்தற்கு எண்ணங் கொள்வான்.

* * *

நம்முடைய உயிர் வேறு என்றும் பிராணி யினுடைய உயிர் வேறு என்றும் நினைப்பது கூடாது.

* * *

கடவுளை விட அதிக அழகுடையவர்கள் இல்லை யென்பது வெளிப்படை யாகையினாலே யாவரும் கடவுளை வணங்க வேண்டுவது அவ சியம்.

* * *

செலிமாபேகம் அல்லது மொகல்மன்னரின் அந்தப்புரம்.

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்.)

(210-ம் பக்கத் தொடர்ச்சி.)

பத்தாவது அத்தியாயம்.

செலிமா விண்ணுலகமடைந்த பதினைந்தாம் நாள் பாதுஷா ஷாஜஹான் ஏகாந்தமாய் உட் கார்ந்திருந்தனன், விசேஷமாய் ஒருவருடனும் பேசாமலேயே சிந்தாக்கிராந்தனா யிருந்தான். இதுவரை செலிமாவின் மோத்தி மஹாலுக் குள் அவன் அடியெடுத்து வைத்தவனல்ல. செலிமாவின் மரணத்திற்குத் தானே காரணம் என்ற விசாரமே அவனை அல்லும் பகலும் வருத்தி வந்தது. அவளது அழகிய உருவத் தைத் தனது இருதயத்தில் ஸ்தாபனஞ் செய்து, ஒவ்வொரு க்ஷணமும் சிந்தை செய்த வண்ணமே யிருந்தனன். இதுவரை ஆனந்த உற்சவத்துடன் காலத்தைக் கழித்த சுவர்ண மஹாலில் செலிமாவை இழந்த சோகத்தால் நாட்களைக் கழித்து வந்தான்.

பாதுஷாவின் முகத்திற்சந்தோஷக்குறிகளே காணப்படவில்லை. நேத்திரங்கள் எப்பொழு தும் நீரால் நிறைந்திருந்தன. அடிக்கடி சிரு ஷ்டி சுந்தரியின் கம்பீர ரூபத்தைப் பார்த் திருப்பான். ஆனால் அச்சௌந்தரியம் இவன் மனதிற்குச் சாந்தியை யுண்டு செய்யவில்லை. மற்றும் இரவு முழுதும் நீலநிற ஆகாயத்தைக் கண்கொட்டாது பார்த்திருப்பான். ஆனால் நக்ஷத்திரங்கள் நிறைந்த நீல ஆகாயம் இவனது சூனிய மனதிற்குத் திருப்தியை யுண்டாக்க வில்லை. கடைசியாக நிராசையுடன் தனது நேத்திர நீரால் படுக்கை முழுவதையும் நனைப் பான். அன்பிற்குரிய செலிமாவிற்காகக் கண் ணீரைப் பெருக்குவதிலேயே இவனுக்கு வாஸ் தவமான சமாதான மிருந்தது. செலிமா சுவர்க்கத்தில் வசிப்பவளென்று ஷாஜஹான் எப்பொழுதும் ஆகாயத்தையே உற்று நோக்கிய வண்ணமிருந்தனன். ஆகாயத்தி லெவ்வளவு நக்ஷத்திரங்கள் ஜ்வலித்துக் கொண்டிருந்த போதிலும், செலிமா நக்ஷத்திரம் ஷாஜஹானது கண்களுக் ககப்படவில்லை. செலிமா அங்கி ருந்தபோதிலும், தன்னை யொத்த பாவிகளு க்கு எப்படித் தரிசனங் கொடுப்பாளென நினைப்பான்.

அந்த சூனிய மஹாலில் செலிமாவின் ஒவ்வொரு வஸ்துக்களும் அப்படியே யிருந் தன. அவளது வீணை, சதார் எல்லா மிருந்த

இடத்திலேயே யிருந்தன. ஆனால் செலிமா மாத்திரமில்லை. அவளது முத்துமாலை, ரத்தின கசித ஜடை சிங்காரம் முதலிய நகைகளிருந்தன. ஆனால் செலிமா தென்படவில்லை. அன்பிருந்தது, ஆனால் ஆசாமியில்லை. சங்கீதத்திற்கு வேண்டியவைகளிருந்தன. ஆனால் சங்கீதமில்லை. வாசனையிருந்தது, ஆனால் புஷ்பங்கள் வாடி வதங்கி யிருந்தன. சௌந்தரியம், குணம் இவை யாதொன்றுந் தங்கவில்லை. ஆனால் சோகம், பெருமூச்சு, கண்ணீர்ப் பெருக்கு இவைகளே நிலைத்திருந்தன.

ஜின்னத் பேகத்தின் பெயரைக் கேட்ட மாத்திரத்திற் பாதுஷாவிற்குக் கோபம் பொங்கி யெழும். ஒரு நாள் ஜின்னத் பாதுஷாவைப் பார்க்கக் கருதி, அனுமதி வேண்டுமெனச் சொல்லி யனுப்பினாள். இச்சங்கதியை யறிந்த ஷாஜஹான் சந்தாபத்தோடு, 'அவளை நாய் நரிகளுக்கு வெட்டிப்போடு,' என்றாக்ஞாபித்தனன். இதை யறிந்த ஜின்னத் பீதியடைந்தாள். தானுயிருடனிருப்பது சந்தேகமெனக் கண்டு, காஷ்மீரத்தை விடுத்து, டில்லிக்கு ஒருவருமறியாது ஓடி விட்டாள்.

"செலிமாவின் அநியாய மரணத்திற்கு நானே காரணம். அவளிடம் வீணாகச் சமுசயங்கொண்டு அவளை யிழந்தேன். என்னைப்போல் ஸ்திரீகாதகன், பாவி, சண்டாளன் இவ்வுலகிலெவனு மில்லை" என்ற விசாரம் ஷாஜஹான் பாதுஷாவை சதா வருத்திக்கொண்டே யிருந்தது. இத்துக்கத்தை மறக்க வேண்டிப் பாதுஷாவின் நன்மையை நாடியிருந்த அதிகாரிகள் எவ்வளவோ முயன்றார்கள். ஆயினும் எல்லாம் வியர்த்தமாயின.

செலிமாவை யிழந்த சோகத்தின் வேகத்தால், மாஹரூன் சிறையிலடை பட்டிருந்ததையும் ஷாஜஹான் மறந்திருந்தான். சில நாட்கள் சென்றபின் அத்துர்ப்பாக்கியனது ஞாபகம் வர, சிறையினதிகாரியை யழைத்து விசாரிக்கவே அவன், 'குற்றவாளி ஆகாரத்தை வெறுத்து இறந்தான்' என்றனன். வாஸ்தவமான சங்கதி பாதுஷாவின் காதுகளுக்கெட்டவேயில்லை.

பாராக்காரனைக் கொன்று, காராக்கிருகத்திலிருந்த கைதி ஓடிய சங்கதியை மறுநாள் சிறையினதிகாரி அறிந்தனன். ஆனால் பாதுஷாவிற்கு இச்சங்கதி தெரியும் பக்ஷத்தில் தன்னையும் தனக்குக் கீழ் வேலை செய்பவர்களையும் கொல்லாது விடமாட்டானெனப் பீதிகொண்டு, கைதி உணவை வெறுத்து இறந்தனன் என்ற வதந்தியைக் கிளப்பினான். சோக வியாகூலத்திலிருந்த ஷாஜஹான் அதை வாஸ்தவமென நம்பியிருந்தான். இதைப்பற்றி மறுபடியும் விசாரிக்கவே யில்லை. அநேக நாட்கள் ஷாஜஹான் தன் பிரிய பேகத்தை நினைத்து நினைத்துக் கண்ணீர் சொரிந்தான்.

பதினொன்றாவது அத்தியாயம்.

மனிதன் சுகத்திலிருந்தாலும், கஷ்டத்திலிருந்தாலும் நாட்கள் கழிந்துகொண்டேயிருக்கின்றன. செலிமா இறந்து இருபது இருபத்தைந்து வருஷங்கள் சென்றன. ஷாஜஹான் சிருஷ்டிக்கிரமப்படி இப்பொழுது தனது நித்திய காரியங்களைச் செய்துகொண்டிருந்தானென்பது வாஸ்தவமேயாயினும், செலிமாவின் ஞாபகம் அவன் மனதை விட்டகலவில்லை. அநேக வருஷங்களுக்குப் பிறகு கோடைநாட்களுக்காக டில்லியை விடுத்துக் காஷ்மீரஞ் சென்றிருந்தனன். தனது பிரியையின் சமாதியைத் தரிசித்துத் தனது மனதைச் சாந்தி செய்துகொள்ள இச்சை கொண்டு, தனியாய் அந்தப்புரத்தை விட்டு, சாந்தமாய்ப் போய்க்கொண்டிருந்த நதி தீரத்தை யடைந்தான்

ஜனசஞ்சாரமில்லாத அம்மலைப் பிரதேசத்திற்குட்செல்லும்பொழுது, ஷாஜஹானது துக்கம் அதிகரித்துக்கொண்டே வந்தது.

அசோக விருட்சத்தினின்று ஒரு பெண் குயில், "இதோ பார்! ஸ்திரீகாதகன் இங்கு வந்துகொண்டிருக்கிறான்" என்று தன் நாதனை நோக்கிச் சொல்லிக்கொண்டிருந்தது. நக்ஷத்திர மண்டல வாசியான செலிமா, "பிராணநாதா! வாருங்கள். இங்கே உயர சுவர்க்கத்திற்கு வந்தால் என்னைப் பார்க்கலாம். என் சமாதிக்குச் சென்று பலன் யாது? என்னை வாஸ்தவமாகப் பார்க்கவேண்டுமாயின் தாங்கள் இங்கே வரவேண்டும்" என்றனள். பாதுஷாவைக் கண்டு கோபங்கொண்ட மந்தமாருதம், "சீ! சீ! நீ விசுவாச காதகன். உனக்கிப்பொழுதிருக்கும் பிரேமை முன்னாளெங்கே போய்விட்டது?" என்று சொல்லித் திரஸ்காரஞ் செய்தது.

சுக்கிலபக்ஷம் இரவு. விருக்ஷங்களின் இலைகள், கொடிகள், சலசலவென ஓடிக்கொண்டிருந்த மலை நதியின் பிரவாகம், சமீபத்தில் வெண்மையான சலவைக் கற்களாற் கட்டப்பட்ட செலிமாவின் சமாதி, இவைகளின்மேற் சந்திரனது பிரகாசம் விழுந்தது.

இக்காட்சியைக் கண்ட பிறகே ஷாஜஹானது சோகங் கொஞ்சங் குறைந்தது. சந்திரனது ஒளியைக் கண்டு யார் தான் சந்தோஷப்படாதிரார்?

இதற்குள் இரவின் நிச்சத்தத்தைப் பங்கஞ் செய்து, ஜனசஞ்சாரமில்லாத அம்மலைப் பிரதேசத்தில் புல்லாங்குழலின் இனியகுரல் ஷாஜஹானது காதில் விழுந்தது. மனதை ரஞ்சிக்கச்செய்யும் சங்கீதத்தைக் கேட்ட பாதுஷா மிக்க வியாகூலமடைந்தான். சுருதி மனோஹரமான நாதத்தைக் கேட்டுக்கொண்டே மெதுவாகச் செலிமாவின் சமாதியை நோக்கிச் சென்றான்.

இலைகள் நிறைந்த ஒரு வன விருட்சம் சமாதியை மறைத்து வளர்ந்திருந்தது. அம்மரத்தின் இலைகளினிடையிற் பாதுஷா நோக்க ஓர் ஆச்சரியமான காட்சியை அங்கே கண்ணுற்றனன். செலிமாவின் சமாதியின்மேல் ஒரு மனிதனது மூர்த்தி தென்பட்டது.

ஷாஜஹான் பாதுஷாவின் சரீரத்திலுள்ள உரோமங்களெல்லாம் சிலிர்த்தன. இந்த ஜனசஞ்சாரமில்லாதஇடத்தில், நள்ளிரவில் சமாதியின்மேல் யாருட்கார்ந்திருப்பதெனத் தெரிந்துகொள்ள ஆவல்கொண்டான். மனத்தைத் தைரியப்படுத்திக்கொண்டு சமாதியைக் கிட்டினான். மழை நீர் விழுந்து விழுந்து நிலத்தில் ஒரு பெரிய பள்ளமுண்டாயிருந்தது. அதைத் தாண்ட முயன்று, ஷாஜஹான் கீழே பார்க்க அவன் காலடிகளின் கீழ் ஒரு கல் உருளப் பெருத்த சத்தமுண்டாயிற்று. ஆனால் உடனே மேல்நோக்க, என்ன ஆச்சரியம்! சமாதியின்மேல் உட்கார்ந்திருந்த உருவம் அங்கேயில்லை. ஷாஜஹான் ஆச்சரியமுற்று பிரமித்தான். நேத்திரங்களை நன்றாய்த் திறந்து நாலா பக்கங்களிலும் நோக்கினானாயினும், ஒருவருந் தென்படவில்லை. மொகலாயமன்னன் சமாதியினருகிற் சென்றான். சமாதியின் இருபுறங்களிலும் சந்திரப் பிரகாசத்தில் நோக்க, அங்கே "செலிமா" "மாஹரூன்" என்ற அட்சரங்கள் ஒன்றின்பின்னொன்றாக வரையப்பட்டிருந்தது.

சமாதியின்மேல் வனப்புஷ்பங்களாற் புதிதாகத் தொடுக்கப்பட்ட மாலைகளிருந்தன. இதைக்கண்ட பாதுஷா ஆச்சரியத்தாலும் பயத்தாலும் ஸ்தம்பித்தான்.

அம்மலைப் பிரதேசத்தில் நின்றவண்ணம், மிக்க உரக்க, "மாஹரூன்! மாஹரூன்!! நீ எங்கிருக்கிறாய்? ஒரு முறையாவது எனக்குத் தரிசனங் கொடுக்கக்கூடாதா? நானுன்னைத் தெரிந்துகொள்ளவில்லையே. நீ இப்பொழுது சுவர்க்கத்திலா யிருக்கிறாய்? எனது பிரிய செலிமாவின் சங்கதி எனக்குச் சொல்லக்கூடாதா? விரஹத்தால் வருந்தும் ஷாஜஹானுக்கு, சுவர்க்க சுந்தரியின் வர்த்தமானத்தைச் சொல். மாஹரூன்! என்மீது இவ்வளவு கிருபைகாட்டக்கூடாதா? நான் சக்கரவர்த்தியென்பது வாஸ்தவமே. ஆயினுமிதை நானுன்னிடம் யாசிக்கின்றேன். என் வேண்டுகோளைத் தயவு செய்து நிறைவேற்றக்கூடாதா?" என்றலறினான்.

யாரும் வரவில்லை. பாதுஷாவின் கேள்விகளுக்கு யாரும் பதிலும் பேசவில்லை. பாதுஷாவின் குரலே எதிரொலித்தது. மறுபடியும் அப்பர்வதப் பிரதேசத்தில் நிச்சத்தம் நிலைத்தது. அரசனும் தன்னிருப்பிடத்தைநோக்கித் திரும்பினான்.

பாதுஷா கொஞ்சதூரஞ் சென்றபின், மறுபடியும் சமாதியிருக்குமிடத்திலிருந்து சங்கீதக் குரல் அவனது காதில் விழுந்தது. ஆனால் புல்லாங்குழலின் தொனி யுண்டாகவில்லை. குயிலைப் பழிக்கும் குரலிற் பாடும்தொனியே கேட்டது.

ஷாஜஹான் நின்று கேட்கலானான். பாட்டின் ஒவ்வொரு அட்சரமும் நன்றாய் இவனது காதில் விழுந்தது. அப்பாட்டும் இவன் முன்னாற் பன்முறை கேட்டதாகவே யிருந்தது.

மோத்திமஹாலை யடைந்து, பாதுஷா படுக்கையிற் படுத்தான். சாந்தமோ உண்டாகவில்லை. திறந்திருந்த ஜன்னலின் வழியாகச் சங்கீதத் தொனி வந்துகொண்டே யிருந்தது. இவ்விதமாகவே ஒவ்வொரு இரவிலும், நதி தீரத்திலிருக்கும் சமாதியிலிருந்து இனிமையான குழல் தொனியாவது அல்லது மதுரமான சங்கீதத் தொனியாவது வந்துகொண்டே யிருந்தது. செலிமாவை யிழந்த துக்கத்தால், ஷாஜஹான் காஷ்மீரத்தை விடுத்துச் சீக்கிரம் டில்லி போய்ச் சேர்ந்தான்.

அநேக வருஷங்கள் அம்மலைப் பிரதேசங்களில் வசித்துவந்தவர்கள் செலிமா பேகத்தின் சமாதியினின்றும் வரும் குழல் தொனியையும், மதுர சங்கீதத்தையும் நிதமுங் கேட்டுவந்தார்கள். ஆனால் அதன் இரகசியத்தை யாராலுமிதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை.

(முற்றிற்று.)

EVERY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
AMRUTANJAN
THE BEST PAIN BALM.
Price As. 10 a bottle.

செய் நன்றி மறவேல்.

ஸ்ரீமான் G. S. ராஜ நாயகம்.

"செய் நன்றி மறவேல்" என்னும் வாக்கியத்திற்கு ஒருவர் பிறர்தமக்குச்செய்தநன்மையை ஒருக்காலும் மறக்கக் கூடாதென்பது பொருள். செய் நன்றிமறத்தல் பெரிய பாதகங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. "உப்பிட்டாரை உள்ளளவும் நினை" என்பது நன்றி செய்தவர்களுக்கும் நன்றியை ஏற்றுக் கொண்டவர்களுக்கு முள்ள பிரமாணத்தைக் காட்டுவதாகும். இப்பிரமாணத்தை மீறுபவர்களுக் கேற்படுந் தண்டனையை விளக்குவதாகும்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை
செய்நன்றி கொன்றமகர்க்கு"

என்னும் முதற் பாவலராகிய திருவள்ளுவரின் திருக்குறள். ஒருவர் செய்த உபகாரத்தை நாளடைவில் மறந்து போவது மனிதர் இயற்கை. இவ்விதம் மறப்பவருக்கு வருந் தண்டனையை 'உய்வில்லை' என்று கடுமையாய்க் காண்பித்திருக்க, செய் நன்றி மறப்பதோடும் அதற்குப் பதிலாய்த் தீமையுஞ் செய்பவர்களுக்கு வருந் தண்டனையை அறிய வல்லார் மிகச் சிலரே யாவர். நன்மைக்குத் தீமை செய்பவர்களை மிருகத்திற்கு ஒப்பிடலாம். மிருகத்திலும் நாய் முதலிய நன்றி மறவாத ஜந்துக்களுக்கு அவர்களை ஒப்பிடாமல் துஷ்ட குணமுள்ள யானையோடு ஒப்பிடவேண்டும். மாவுத்தன் தன் யானைக்கு ஆயிரம் நன்மைகள் செய்திருந்தாலும், கோபத்தினாலோ அல்லது தன் யானையின் நன்மையைக் கருதியோ ஒரு தரம் சிறிது தண்டித்தாலும், அவ்யானை மாவுத்தன் தனக்குச் செய்த சகல நன்மைகளையும் மறந்து மனதில் மர்மம் வைத்துச் சமயம் வாய்க்கும் போது அவனைக் கொன்று விடுகிறது. இத்தகைய குணமுடைய ஆன்மாக்களை விசாரித்துத் தண்டனை செய்யவல்ல பரம்பொருள் ஒன்றுண்டென்பதைக் கனவிலும் மறக்கக் கூடாது.

நன்மை செய்வதாலும் நன்றி மறவாமையினாலும் வரும் நன்மைகளையும், நன்றி மறப்பதாலும் நன்மைக்குத் தீமை செய்வதாலும் வரும் தீமைகளையும் பற்றிக் கவனிக்கவேண்டியது பிரதானம்.

மிருகங்களையும் மனிதரையு முண்டாக்கின கடவுள் மிருகங்களுக்கு இல்லாத ஓர் உன்னத வஸ்துவை மனிதர்களுக்கு மட்டுங் கொடுத்திருக்கிறார். அவ்வஸ்துவே ஆத்மா வாகும். பரமாத்மா ஆன்மாக்களுக்கு ஆத்மாவைக் கொடுத்ததின் நோக்கத்தை அறிந்தவர்கள் 'செய் நன்றி மறத்தல்,' 'நன்மைக்குத் தீமை செய்தல்' முதலிய பெரும் பாதகங்களைச் செய்யார்கள். அவ்விதஞ் செய்யாமலிருக்க மனிதருக்குள்ள ஆத்மாவே அவர்களுக்கு உதவி புரிகின்றது. அப்படியாயின் அப்பாதகஞ் செய்கிறவர்கள் தங்களுக்குள்ள ஆத்மாவிற்கு விரோதமாகவே அங்ஙனஞ் செய்கிறார்கள். ஆத்மாவிருந்தும் அதற்கு விரோதமாய்த் தீமை செய்கின்ற காரணத்தால் அவர்கள் ஆத்மா அற்றவர்களாகவே எண்ணப் படுகிறார்கள். ஆத்மா அற்றவர்களாக எண்ணப்படுங் காரணத்தினாலேயே அவர்களை மிருகங்களுக்கு ஒப்பிடுவது ஒவ்வும். நன்மை செய்கின்றவர்கள் இருவிதப் பயனையடைகின்றனர். ஒன்று இம்மைக்குரியது, மற்றொன்று மறுமைக்குரியது. இம்மையில் மனிதரின் மதிப்பையும் மேலான வாழ்க்கையையும் பெறுகிறார்கள். மறுமையில் கடவுளின் மதிப்பையும் நித்திய வாழ்வையும் அடைகின்றனர். செய் நன்றி மறவாதவர்கள்

ஒருநவீன பாடத்தைக் கற்றுக்கொள்கிறார்கள். அப்பாடத்தின் பயனாய் அவர்கள் இருவித நன்மைகள் அடைகின்றனர். செய்நன்றி மறவாதவர்கள் தாங்கள் பெற்ற நன்மையை எப்போதும் நினைப்பதால், தங்கள் ஆத்மாவின் சக்தியால் தாங்களும் மற்றவர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்கிற பாடத்தைக் கற்றுக்கொள்கிறார்கள். கற்ற பின் அதற்குத்தக நிற்கவே நன்மை செய்கின்றவர்கள் பெறுகின்ற முற்கூறிய இருவிதப் பயனையும் பெறுகின்றனர். தருமஞ்செய்யத் தயங்காத தருமபுத்திரர் நமக்கு இவ்விஷயத்தில் சிறந்த ஆசிரியராயிருக்கின்றனர். நன்மை செய்பவர்களைத் தருமபுத்திரருக்கு ஒப்பிட்டுப் பேசுவது மரபு. 'தர்மம் தலைகாக்கும்' என்பது திருவாக்கு. 'அறஞ்செய விரும்பு' என்பது ஔவை வாக்கு. 'நன்றி மறவேல்' என்பதும் அவள் வாக்கே. 'நன்மை கடைப் பிடி' என்பதை மறக்கக்கூடாது.

செய்நன்றி மறப்பவர்களுக்கு உய்வில்லை. செய்நன்றி மறப்பவர்கள் தருமஞ் செய்வது அருமை. அவர்கள் சுயநலங்கருதுபவராவர். ஒருக்கால் அவர்கள் தங்களுக்குள்ள செல்வச் செருக்கால் இம்மையில் சுகவாழ்வு பெற்றிருந்தாலும் மறுமையிற் பேரின்ப வாழ்வு பூச்சியமே. ஆனால் நன்மைக்குத் தீமை செய்பவர்கள், நன்மை செய்யாதவர்களிலும் நன்றி மறப்பவர்களிலுங் கடையராவர். இவர்கள் யானை யனையவர்கள். தீமையையே மேற்கொண்டொழுகும் புல்லியர்கள். இவர்களை இம்மையில் உலகம் பழிக்கும்; மறுமையிற் தெய்வம் இகழும்.

"தினைத்துணை நன்றி செய்யினு மதனைப்
பனைத்துணையாகக் கொள்வர் பயன்றெரிவர்."

"நன்றிமறப்பது நன்றன்று" என்னுஞ் சிறந்த வாக்குகளை நாம் உணர்ந்து அவற்றின்படி ஒழுகுவோமாயின், இம்மை மறுமை இரண்டிலும் ஈசனும், தேவர்க்கெல்லா மிறைவனும், திகழ் வைகுந்த வாசனும், அடியார்க்கென்றும் வரதனும், அனந்த வெய்யோன் தேசுள்ள வடிவோனும், சிந்தையில் தரிசிப்போர்க்கு மாசில்லாப் பதவி நல்கும் மாயனும் நமக்கு நற்பதவி கிடைக்கப் பண்ணுவார்.

சுபம்.

ஜோ தி ட ம்.

(மகாத்மாவின் விடுதலையைத் தெரிவித்த ஜோஸ்யர்).

தர்ம நியாயமான 5 கேள்விகள் எழுதியனுப்பினால் எதிர்காலப் பலனைத் தெரிவிப்போம். லெட்டர் எழுதும் நேரத்தையும் குறித்தனுப்பவேண்டும். 5 கேள்விகளுக்கு ரூ. 1-0-0. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் ரூ. 0-4-0. ஒரு வருஷம் மாதவாரி பலன் ரூ. 2-0-0. (8-2-24 சென்னை ஆந்திரபத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது:—திருத்தணி ஹனுமதுபாஸி சடகோபாசாரியார் ஸ்வாமி மகாத்மா காந்தியடிகள் 5—2—24ல் விடுவிக்கப் படுவாரென்று 12—11—23ல் எங்கள் பத்திரிகையில் பிரசுரம் செய்திருந்தார். அதன்படியே மகாத்மா விடுவிக்கப்பட்டார். இவரது ஜோதிடத் திறமையை மனப்பூர்வமாக விக்கியாபனம் செய்துகொள்ளுகிறோம்). மற்றும் விவரத்திற்கு எழுதவும்.

ஆஞ்சனேயஸ்வாமி ஜோதிடாலயம்,
திருத்தணிகை, சித்தூர் ஜில்லா.

பர்வத குமாரி.

இரண்டாம் பாகம்.

ஸ்ரீமான் மகேசகுமார சர்மா.

(225ம்-பக்கத் தொடர்ச்சி.)

ஆறாம் அத்தியாயம்.

கலக்கம்.

பூபேந்திரநாதன் மனதில் ஒரு மிகப் பெருங் கலக்கம் உண்டாகத் தலைப்பட்டது. பிரதிபையின் குண நலத்தை நன்றாய் அறிந்துகொள்ளக்கூடாமையால், பிரதிபை கர்வம்கொண்டிருக்கிறாளென்று சிற்சில சமயங்களில் அவனுக்கு மயக்க வுணர்ச்சி உண்டாவதுண்டு. ஆகையால் அப்படிப்பட்டவளை விவாகம் செய்துகொண்டால் தனக்கும் தாம்பத்திய சுகத்திற்கும் வெகு தூரமாய்விடுமென்று சில சமயம் எண்ணுவான். ஆனால் இந்தக் கற்பிதமான கர்வம் ஒன்று தவிர அவனுக்குப் பிரதிபையின் ஒழுக்கத்தில் வேறு குற்றம் எதுவும் காணமுடியவில்லை. பிரதிபையின் சௌந்தரியம் அபூர்வமாயிருந்தது. அவள் பவித்திரத் தன்மையே வடிவெடுத்ததுபோல் விளங்கினாள். அவளுடைய இருதயத்தை ஒருபோதும் பாபத்தின் நிழல்கூடத் தீண்டமுடியாதென்று பூபேந்திரநாதனுக்கு நம்பிக்கை உண்டாயிருந்தது. பிரதிபையை அவன் ஒருபோதும் தன் கண்களாற் காணாதிருந்திருக்கும் பக்ஷத்தில், ஒருவேளை திவான்ஜியின் இழிந்த சூசனையில் அவனுக்கு விசுவாசம் உண்டாயிருக்கலாம். ஆனால் அவளோ அவனுக்கு இளமைத் தோழியாய் இருந்தவள். இளம்பிராயத்தில் அவர்களிருவருக்கும் இடையே இருந்த தூய்மையான அன்பே இப்பொழுது ஆழ்ந்த காதலாய் மாறி முதிர்ந்துவிட்டது. பூபேந்திரநாதன் பிரதிபையை யுவதியாகிய பின்னும் சில தடவை பார்த்திருக்கிறான்; பார்த்து அவளது வடிவழகிலும் குண நலத்திலும் முன்னிலும் அதிகமாய் ஆர்வம்கொள்ளலானான். அப்படியிருக்க, திவான்ஜியின் இழிந்த சூசனையினால் அவனுள்ளத்தில் வேறு பாவனை எங்ஙனம் தோன்றுதல்கூடும்? திவான்ஜிக்கும் இது தெரியும். ஆகையாலேயே 'பிரதிபையை விவாகம் செய்துகொள்வதனால் சமூக சம்பந்தமான பதிதத் தன்மை உண்டாகும். எனவே இந்த விவாகம் செய்வதனால் சமூகம் இராஜகுமாரனைப் பதிதனென்று பகிஷ்கரித்துவிடும்' என்று அவர் வற்புறுத்தத் தொடங்கினார்.

இராஜகுமாரனுக்குத் திவான்ஜீ பிரஸ்தாபித்த சமூக பகிஷ்காரத்தின் இரகசியம் இன்னதென்று விளங்கவில்லை. அவன் இவ்வாறு யோசிக்கலாயினான். "பிரதிபையோ பிராம்மணக் கன்னிகை, உத்தம வம்சத்திற் பிறந்தவள். அவளது ஒழுக்கம் மாசற்றது. எனக்கு அவளை விவாகம் பண்ணிக் கொள்ளுகிறதென்று நிச்சிதார்த்தமாகிவிட்டது. இவளே இனி இராஜ பத்தினியாகப் போகிறவளென்று எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. இரண்டு குடும்பத்தாரும் ஒருவர் வீட்டிற்கொருவர் வந்து போய் அளவளாவுவது எத்தனையோ தடவை நிகழ்ந்திருக்கிறது. இப்பொழுதும் நிகழ்ந்து வருகிறது. பிரதிபை என்னைத்தன் பதியென்றே கருதுகிறாள். நானும் அவளை இதுவரை என் பத்தினியென்றே பாவித்து வந்திருக்கிறேன். அப்படியிருக்க, நான் அவளை விவாகம் பண்ணிக் கொண்டால் பிராம்மண சமூகம் என்னை

ஏன் பதிதனாக்கவேண்டும்? பாதித்தியம் அல்லது பதிதத்தன்மை பாபத்தினாலேயே உண்டாவது. ஆனால் இந்தக் காரியத்தில் எவ்விதமான பாபமும் இருக்க நியாயமில்லை. பின்னை இந்தக் கலியாணம் பண்ணுவதனால் என்னை சமூக சம்பந்தமான எவ்வகைப் பாபமாவது எப்படி அணுகும்?"

இப்படி எவ்வளவோ சிந்தித்து யோசித்துப் பார்த்தும் இராஜ குமாரனுக்கு இந்தப் பாதித்திய இரகசியத்தை அறிந்து கொள்ளக் கூடவில்லை. பிரதிபையின் பேரில் அவனுக்கிருந்த அநுராகமாகிய நீரோட்டம் சுபாவகதியிற் பாய்ந்து கொண்டிருந்தால், இது வரையில் அது எந்தப் பக்கமாய்ச் சென்றிருக்குமோ தெரியாது; ஆனால் திவான்ஜீ போட்ட தடையினால் அது திடீரென்று வலிமை பெற்றெழுந்து எல்லாத் தடைகளையும் தாண்டும் பொருட்டுத் தன்னுடைய சலசல வென்னும் ஓசையால் நாற்றிசைகளையும் ஒலிக்கச்செய்யத் தலைப்பட்டது. பூபேந்திரநாதன் இப்பொழுது தனக்குள்ளேயேஇவ்வாறுஉறுதிசெய்துகொண்டான். "பிராம்மண சமூகம் எதை வேண்டுமானாலும் செய்யட்டும், என்னைப் பதிதனாகவாவது செய்யட்டும், வேறு எதையாவது செய்யட்டும். பிரதிபை எனக்கே உரியவள், அவளை நான் அவசியம்மணம் புரிவேன். எனக்குஅவள் கிட்டா விட்டால், இந்த தனத்தாலும் வைபவத்தாலும் யாதொரு பிரயோஜனமும் எனக்கு உண்டாகப் போவதில்லை."

இவ்வாறு பிரதிக்ஞை செய்துகொண்டு இராஜகுமாரன் அந்தப்புரத்தில் பிரவேசித்தான். இராஜகுமாரனுடைய தாயார் பரகதியடைந்து விட்டமையால், இப்பொழுது அந்தப்புரம் ஒரு விதத்தில் பாழடைந்திருந்ததென்றால் மிகைபடக் கூறுவதாகாது. ஒரு கிழப் பாட்டியைத் தவிர இராஜகுமாரனுடைய குடும்பத்தில் வேறொருவருமில்லை. கிழவிக்குப் பூபேந்திரநாதன் பேரில் அளவு கடந்த அபிமானம் இருந்தது; பூபேந்திரநாதனும் அவளிடத்தில் அத்தியந்த பக்தி பாராட்டி வந்தான். இராஜகுமாரன் இந்த விவாக விஷயமாய் அவளுடன் பேசவேண்டி அங்கே வந்தான். ஆனால் அவள் பூஜை செய்து கொண்டிருந்ததைக் கண்டு தன் தாயாரின் படுக்கை யறைக்குள் நுழைந்தான்.

இராஜகுமாரன் இந்த அறைக்குள் வழக்கமாய் வருவது நின்றுபோய் எவ்வளவு காலமாயிற்றோ தெரியாது. இப்போது அவன் இதில் பிரவேசித்தவுடனே அவனுக்குத் தன்னுடைய இளம்பிராயத்தின் நினைவு வந்து விட்டது. கண்ணினின்று நீர் ஆறாய்ப் பெருகியது. இன்று பூபேந்திரநாதன் நெஞ்சம் நிலை கொள்ளாது கிடைந்தலைந்தது. அவன் அறைக்குட் சென்று கட்டிலில் உட்கார்ந்து யோசிக்கலானான். எதிரிலுள்ள சுவரில் அவனுடைய தாய் தந்தையரின் இரண்டு தைலசித்திரப் படங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. அவற்றின்மேல் திடீரென்று அவன் பார்வை சென்றது. அந்தப் படங்களிலிருந்து அவன் தாய்தந்தையர் இருவரும் தன் மேல் அன்பும் கருணையும் நிறைந்த பார்வையைச் செலுத்துவதாகத் தோற்றியது. இராஜகுமாரன் விழிகளில் நீர் ததும்பியது. தாய்தந்தையரின் அன்பை இழந்து இராஜகுமாரன் இப்பொழுது தன்னந் தனியனாய்த் தவிக்கிறான். அவர்களைப்போல் ஒருவரும் அவனிடம் அன்பு பாராட்டுவார் இல்லை. ஒருவரும் இன்சொல் கூறுவார் இல்லை. ஒருவரும் அவன் இன்புறுவதைக்கண்டு இன்புறுவாரும் துயருறுவதைக் கண்டு துயருறுவாரும் இல்லை. ஏற்கெனவே திவான்ஜியுடன் வார்த்தையாடினதிலிருந்து அவனது நெஞ்சம் சிந்தாகுலமாயிருந்தது; அதோடு இப்பொழுது தாய்தந்தையரின் நினைவும் சேர்ந்து கொண்டது. இதிலிருந்து அவனுக்குப் பெருங்கஷ்டம் உண்டாகத் தலைப்பட்டது. மாதா பிதாக்களை இழந்த துயரம் புத்துயிர்பெற்று அவன் நெஞ்சத்தைப் பிளந்தது. அவன் வெகு நேரம் வரையில் அடிக்கடி கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தான்.

துயரத்தின் வேகம் சிறிது குறைந்ததும், இராஜகுமாரன் எழுந்து அறைக்குள்ளே மெல்ல மெல்ல இப்படியும் அப்படியும் நடக்கலானான். இவ்வளவில் இன்னொரு சுவரில் மாட்டியிருந்த இரண்டு படங்களின் மேல் அவன் பார்வை பாய்ந்தது. அவ்விரண்டு படங்களில் ஒன்று தன்னுடையதும் மற்றது பிரதிபை யுடையதுமாயிருக்கக் கண்டான். அவன் தாயாரே அவ்விரண்டு படங்களையும் தன் கையால் அங்கே மாட்டி அவற்றின் கீழ் 'இராஜகுமாரன் ஸ்ரீமான் பூபேந்திரநாதன்— இராஜவதூ ஸ்ரீமதி பிரதிபா' என்று தன் கைப்படவே எழுதியிருந்தாள். படங்களைப் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே இராஜகுமாரனுக்கு ஒரு பழைய செய்தியின் நினைவு வந்தது. ஒரு சமயம் இராஜகுமாரனுக்குப் பிரதிபையை மணஞ் செய்து கொள்ளவேண்டுமென்று அவன் தாயார் அதிகமாய் வற்புறுத்தினாள். ஆனால் அவன் தகப்பனார் வதூவார்களின் இள வயதைக் குறிப்பிட்டு அவளைச் சாந்தப்படுத்தி விட்டார். அப்பொழுது புருஷனுக்குச் சம்மதமில்லாமையால் அவள் சும்மா இருந்து விட்டபோதிலும், அவள் நெஞ்சம் மட்டும் அதிக துக்கத்தினால் தவித்துக் கொண்டிருந்தது. இந்தச் செய்தி இராஜாபஹாதூருக்குத் தெரிந்தபொழுது, அவர் தம் பத்தினியைத் திருப்தி செய்யும்பொருட்டு விவாகத்திற்குப் பதிலாகப் பிரதிபையின் நிச்சிதார்த்த முகூர்த்தத்தை வெகு விமரிசையாக நடத்தி வைத்தார். இவ்விதமாக, விவாகம் நடக்காவிட்டாலும், நிச்சிதார்த்தம் நடைபெற்றதனால் இராஜமாதா ஒருவாறு சந்தோஷமடைந்தாள்.

இராஜகுமாரனுக்கு அக்காலத்திய இன்னொரு செய்தியும் நினைவுக்கு வந்தது. பிரதிபை அந்த சமயம் பதினோரு வயது நிறைந்தவளாய் மலர்வதற்கு ஆயத்தமாய்க் கொண்டிருக்கும் பூவின் அரும்புபோல் மிக்க எழில் வாய்ந்த பாலிகையாய் விளங்கினாள். நிச்சிதார்த்த முகூர்த்தத்தன்று அவள் அழகிய வஸ்திராபரணங்களால்அலங்கரிக்கப்பெற்று அரண்மனைக்குள்வந்தபொழுது, அவளது சௌந்தரியத்தினால் அரண்மனை ஜாஜ்வல்ய மானமாய்ப் பிரகாசித்தது. இராஜமாதா அவளை மடியில் உட்காரவைத்துக்கொண்டு ஆநந்த மேலீட்டினால் பரவசமாகி விழிநீர் வடித்தாள். அதன் பிறகு அவள் பிரதிபையையும் இராஜ குமாரனையும் ஒருவர் பக்கத்தில் ஒருவராய் நிற்கச் செய்து படம் பிடிக்கவேண்டுமென்று விரும்பினாள். ஆனால் பிரதிபை நாணத்தினால் கழுத்தையும் தலையையும் அதிகமாய்த் தொங்க விட்டுக்கொண்டே யிருந்தபடியால், இரண்டு மூன்று தரம் முயன்று பார்த்தும் அவளுடைய முகத்திற்குப் பூர்த்தியான படம் எடுக்க முடியாதுபோயிற்று. அப்பொழுது இராஜமாதா இராஜகுமாரனையும் பிரதிபையையும் தனித்தனியே நிறுத்திப் படமெடுத்துப் பிறகு அப்படங்களை ஒன்றாய் வைத்து அவற்றின் கீழ் தன் கையாலேயே அவ்விருவருடைய பெயர்களையும் எழுதினாள். இராஜகுமாரன் அவ்விரு படங்களையும் அவற்றின் கீழுள்ள தன் தாயாரின் கையெழுத்தையும் பார்த்துக் கருதலானான்:—"நம் மாதா பிதாக்களே நம்மை ஒன்று படுத்தியிருக்கும்போது நம்மைப் பிரித்து வைக்கத்தக்க சக்தி யாருக்கு உண்டு?

பிரதிபையின் குணம் எவ்வளவு தான் மாறினாலும், அவளுடைய வாழ்க்கையுடன் என் வாழ்க்கை அவிழ்க்க முடியாத பந்தத்தால் கட்டுண்டு போயிருக்கிறது. அந்தக் கட்டை இனி அறுக்கொணாது."

இராஜகுமாரன் இவ்வகையான சிந்தையில் மூழ்கியிருக்கையில், ஒரு சேவகன் வந்து, "தங்களைப் பாட்டியம்மா அழைக்கிறார்கள்," என்று சொல்லவும், இராஜகுமாரன் அப்பொழுதே அவ்வறையினின்று புறப்பட்டுச் சென்றான்.

(தொடரும்.)

என்ன எழுதுவது?—பதிலுரை.

ஸ்ரீமதி ராதாபாய்.

சகோதரி வி. பாலம்மாள் பதிப்பிக்கின்ற சிந்தாமணி யென்னும் மாதாந்தப் பத்திரிகை, இரண்டாவது மலர் மூன்றாம் இதழில் 177-178 இவ்விரு பக்கங்களில் பிரசுரமாயிருக்கும் வியாசத்திற்குப் பதிலுரையொன்று அவசியமென்று எனது சில சகோதரிகளின் விருப்பத்திற்கிணங்கி ஒரு பதில் அளிக்கின்றேன்.

என்ன எழுதுவது? எதைப்பற்றி எழுதுவது? இவ்விரண்டு கேள்விகளும் ஒரே பொருளுணர்வே தருவதுபற்றி இரண்டிற்குஞ் சேர்ந்தே பதிற்கூறிவிடலாம். கேட்கப்படும் எவ்வினாவிற்கும் பொதுவாகவும் சிறப்பாகவும் விடை பகர்தல் மிகுந்த அவசியம். இவ்வினாவிற்குப் பத்திராதிபரவர்களே தகுந்த பதிலளிக்கவோ, அன்றி முடிவில் ஒரு குறிப்பையாவது எழுதித் தமது அபிப்பிராயத்தைக் கூறாதுவிட்டதனால் இச்சிற்றுரை எழுதி அதைத் தமது பத்திரிகையிலேயே பிரசுரிக்குமாறு விருப்பமுற்றேன்.

பொதுவாய்க்கூறுமிடத்து இப்பத்திரிகையின் முழுநோக்கம் தமிழ்நாட்டுப் "பெண்மணிகளின் முன்னேற்றமே" என்று பத்திராதிபரவர்கள் பகர்ந்திருக்கிறார்களே! வேறு விடை பகர்வதும் அவசியமோ என ஐயமுறுதீர்கள். அன்னாரின் முன்னேற்றத்திற்குக் பல உறுப்புகளில் தற்கால நிலைமையினின்றும் உயர் நிலை யெய்துவதற்கு வேண்டற்பாலதாகிய கல்வி, ஒழுக்கம், நாகரிகம், நடையுடை பாவனை, மகளிர்க் குரித்தான நற்குணங்கள், ஒவ்வொன்றாய் ஏழு பக்குவங்களிலும் இயற்றவேண்டுங் கருமங்கள் இவைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்து போற்றவேண்டியவைகளைப் போற்றிப் பொருளுணர்த்தும், விலக்கவேண்டுவதான பாகங்களை அறவே விலக்கியும் நெறிபிறழாத இனிய மொழிகளாலேயே நமது முன்னேற்றங் கருதலாகும்.

மகளிரோ ஆடவரின் ஒருவாறேனும் தாழ்ந்தோரல்லர். மக்களது சிசுப்பருவம் முதல் இளமை, மூப்பு, சாக்காடுவரையும் அவரை ஆதரித்து, அமுதூட்டி, நல்லமைச்சர்க்கொப்ப நன்னெறிக்குய்வித்தும் இல்லற வாழ்க்கையை இனிதாய் முடிப்பவர் மகளிரேயாவர். இதற்கு உதாரணங்களும் இதனை மறுத்துக் கூறும் சகோதரிகளுக்குச் சமாதான மொழிகளும் அவசியமில்லை. தொட்டிலாட்டுகின்ற கைதான் அரசாட்சி புரிகின்றதென்ற ஆன்றோர் வசனமும் பொய்யாகுமோ? இஃதின்னமாக ஆடவர்களும் மகளிரை இல்லற கர்த்தாவாகவும் தம்மை இல்லறக் கருவியாகவுமே மதிக்கின்றார்கள்; மகளிர்த் துணையின்றி இல்லறமாகிற சகடத்தை இழுத்துச் செல்லவும் முடியுமோ? வாழ்க்கைத் துணை நலத்திற்கு ஆடவர்க்கொப்ப மகளிரும் உயர்ந்து சென்றாலன்றி நமது சமுதாய வாழ்க்கை அபிவிருத்தியடைய முடியாது.

இனி ஒவ்வொரு விஷயத்தையும் சிறப்பித்துக் கூறுமிடத்து ஒவ்வொன்றும் ஒரு பெரிய வியாசமாய் எழுதி முடிக்கலாமாயினும் தமது உயர்ப் பத்திரிகையில் அதிக விடத்தைக் கவர்ந்துகொள்ளாது வெகு சுருக்கமாகவே கூறுகின்றேன்.

பெண் மக்களது கல்வி எத்தன்மையாயிருக்கவேண்டும்? அவர்களுக்குத் தற்கால ஆங்கிலேய உயர்தரக் கல்வி மிகவும் அவசியமா? இவைகளைப்பற்றி நாம் பெரும் ஆலோசனை செய்யவேண்டியதிருக்க, 9-மணி ஆயிற்றே, 10 மணியாயிற்றே என்று மேனாட்டு மகளிரைப் பின்பற்றி மனங்கொதிக்க வேண்டியதில்லை. நமக்கு ஆங்கிலேய உயர்தரக்கல்வி அவசியம் இன்றியமையாதது என்று எனக்குச் சற்றேனும் புலப்படவில்லை. ஆங்கிலேய பாஷையை உப பாஷையாகக் கற்று, கட்டாய பாஷையாக அவரவர்க்குரிய தாய் பாஷையை வழுவறக்கற்பதே மிகவும் நன்மை தரும். நாம் நமது தமிழ்ப்பாஷையை நல்லறிவுடையாரிடத்துக் கற்று நமது தமிழ்த் தாய்க்கு அரும்பெரும் அணியாய் விளங்குகின்ற நூற்களைக் கற்றுணர்ந்து அறநெறி வழுவாது நிற்றல் வேண்டும். நமது காவியங்களையும் சமய நூற்களையும் நமது சாவகாசத்திற்கும் அறிவிற்கும் ஏற்ப ஆராய்ச்சி செய்தும், அந்நூற்களில் அருளால் அமைந்து பதிந்து என்றும் அழிவு தேய்வின்றிப் பிரகாசிக்கின்ற நவரத்தினங்களை நமது இருதயத்தினிடம் பதிப்பித்தால் நமக்கும் நமதினத்தார்க்கும் எம்மட்டு நன்மையுண்டாகும். நீதியை வழுவறக் கற்றுணர்வதற்காகப் பதினெண் கீழ்க்கணக்கை எழுதிய புலவர் பெருமையை என்னென்று கூறுவோம். பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்றன்றோ நமது திருவள்ளுவர் திருக்குறளும்? அதன் பெருமையை மனோன்மணீயம் என்ற நவீன நாடகத்தின் பாயிரத்தில் புரொபஸர் சுந்தரம்பிள்ளை அவர்கள் கூறியிருப்பதையுங் காண்க.

"வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற
நன்குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி யொரு குலத்துக்கொரு நீதி."

சமயக்கல்வியும் நமக்கு அவசியம் வேண்டும். நமது தேசத்தில் தோன்றி மாய்ந்த சமயங்கள் பல உண்டாயினும் இவ்வளவு காலத்திலும் அவைகளிலெல்லாம் சிறப்புற்று விளங்கும் நமது இந்துமதத்தின் பெருமையைப் புகட்டுகின்ற நூற்களை நாமும் கற்றுணரவேண்டியதவசியமன்றோ? "திருவாசகத்திற் குருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகாரே" என்று பெரியோர்களால் மகுடஞ்சூட்டியிருப்பதான அத்தமிழ் வேதத்தைக் கற்றுணராது விட்டால் நாம் தமிழ்மக்கள் என்று கூறுவதின் பெருமை என்ன? அப்பெரிய நூலினின்றும் ஒரு கவியை உதாரணமாய் எடுத்துக்காட்டுவோம்.

"தினைத்தனைத்தே யுள்ள பூவினிற்றேனுண்ணாதே
நினைத்தோறும் பேசுந்தோறும் காண்டோறும் எப்
பொழுதும்
அனைத்தெலும்பும் உள் நெகவே ஆனந்தத் தேன்
சொரியும்
குனிப்புடை யானுக்கே நீ சென்றூதாய்
கோத்தும்பீ!"

இதன் பொருள்:—ஏ! அரசவண்டே! இச்சிறு புஷ்பத்தில் அணுவளவாய்க் காணப்படும் தேன்றுளியினை விரும்பி ஏன் சுழன்று திரிகின்றாய்?

நாம் நினைக்கிறபொழுதும் பேசும்பொழுதும் காண்கிறபொழுதும் எப்பொழுதும் நமது எல்லுடம்பனைத்தும் ஆனந்தத்தில் மூழ்கி யுருகும்

படிச் செய்கின்றவரும் எந்த நேரத்திலும் தான் சந்தோஷமாயிருப்பதுடன் தன்னை யுன்னுவோர்க்கெல்லாம் நித்தியானந்தத்தைத் தரும் அச்சிவபிரானையன்றோ நீ சுழன்று வந்து ஊதல் வேண்டும் !"

இவ்வொரு பாட்டினின்றே மிகுந்த ஆராய்ச்சி செய்து ஒரு வியாசம் எழுதலாம். நமது தமிழ் வேதமாகின்ற தேவார திருவாசகத்தின் பாடல்களை நன்கே பண்ணுடன் கற்றுணர்ந்தால் எந்தச் சமயத்திலும் இவைகட்கொப்பான அறிவுதரும் பாக்களில்லையென்றே நன்குணர்வோம். ஆகலின் பெண்மக்களாயினும் சமயப் பயிற்சி இன்றியமையாததாகும். இனிப்பெண்கள் அவசியமாய்க் கற்றுணரவேண்டும் நூற்கள்பலவிருக்கத் திகைத்து நிற்பதிற்பயனில்லை. ஆரோக்கியநூல், செட்டுநூல், மட்கட் பயிற்சி நூல், சமையற்பாக நூல், சமுதாயநூல், சாஸ்திரத் தொகுதிகளில் சிலவைகள் எனக் கற்கவேண்டியவைகளும் எழுதவேண்டியவைகளும் பெரும் பான்மையாயுள.

இந்தியமாதர்கள் ஆங்கிலேயரின் நாகரிகத்தையும் நடையுடைபாவனைகளையும் பின்பற்றுவது தப்பிதமேயாகும். ஐரோப்பிய நாட்டிற்குகந்த உடைபாவனைகள் உஷ்ண பூமியாகின்ற நமது இந்தியாவுக்கு சற்றும் பொருத்தமாகுமோ ? அவர்களது நாகரிகத்தையும் நாம் பின்பற்றி நிற்பது தீமையே விளைவிக்கின்றது.

பெண்களுக்கு சுதந்திரம் அவசியமோ ? என்னென்ன சுதந்திரங்கள் நமக்களிக்கவேண்டும்? நாம் பயிற்சி செய்யவேண்டும் கல்வி நெறி எத்தன்மையானது ? இதரநாட்டுப் பெண்கள் கல்வியாலாய பயனை முற்றும் பெற்று சம உரிமைக்குச் சண்டையிடுவதை நாம் பின்பற்றவேண்டுமா, விலக்கவேண்டுமா ? நமது விவாகச் சடங்குகள், சீதனப் பொருள் இவைகளினால் எத்தனை குடும்பங்கள் பாழ்பட்டுப் பரிதபிக்கின்றன ! இவைகளைச் சீர்திருத்த நாம் செய்யவேண்டும் முயற்சியென்ன? நமதுநாட்டு அபிவிருத்திக்குப் பெண்களின் உதவி எவ்வாறு அவசியப்படும் ? இப்படிக்கொத்த பிரசினைகளை நன்கு ஆராயவேண்டும். நன்னெறி தரும் நூல்கள் பல நம்மிடத்தேயிருக்க, தீய்மை விளைவிக்கும் நூற்களைக் கற்றுணராது அவைகளைக் கண்டு பிடித்து ஆழ்ந்த குழிகளிற் புதைத்துவிடவேண்டும். இன்னும் நாம் கற்கவேண்டியதும் எழுதவேண்டியதும் ஒன்றிரண்டா ? இவ்வாறு திகைப்பானேன் ? ஒரு சிறந்த தமிழ்க் காவியத்தைப்பற்றியே நமது ஆயுள் பரியந்தமும் ஆராய்ச்சி செய்யலாமே. திருக்குறள் ஒன்றே நமக்குச் சகல சம்பத்தும் அளிக்க வல்லமையுடையதென்று கூறி இவ்வியாசத்தை முடிக்கின்றேன்.

சுபம்.

தேவதத்தன் அல்லது தேசசேவை.

தேசாபிமானத்தையும் தொழிலாளரிடத்தில் அன்பையும் உண்டாக்கக்கூடிய ஒரு இனிய தமிழ் நாவல். Royal 16mo. 64 பக்கம். விலை அணா 5.

தேவதத்தன் என்னும் ஒரு கதைப் புத்தகம் பாலம்மாள் அவர்களால் எழுதியது வரப்பெற்றோம். இதில் தொழிலாளிகளுக் குண்டாகும் துன்பம், முதலாளிகளுக்கிருக்கும் இரக்கமின்மை, பட்டவேட்டையாடும் பாமரத்தனம், வேசிகள் செய்யும் மோசம், அடுத்துக்கெடுப்போர் அக்கிரம சூட்சி, பரோபகாரிகளின் பாங்கு முதலியவைகளைப்பற்றிச் சுருக்கக் கூறப்பட்டிருக்கிறது.—வர்த்தகமித்திரன். (16-1-21).

சகோதரி வி. பாலம்மாள், விவேகாச்ரமம், லவிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.

நூர்ஜஹான் அல்லது பரதகண்டத்துச் சௌந்தரியக் கொடி.

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்.)

(214-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆறும் அத்தியாயம்.

அமீனாவை இந்த ஸ்திதியிற் கண்ட அயாஸ் குழந்தையை வேறு புறமாக விடுத்து, அவளுக்கு மூர்ச்சை தெளிவிக்க முயன்றனன். ஆனால் என்ன செய்தும் அவள் தன் நினைவுக்கு வந்தபாடில்லை. தைரியத்தைக் கைவிடாமல், அவ்வனத்திலிருந்த ஒரு விருட்சத்தின் இலைகளைப் பறித்து, அவைகளைக் கசக்கி, அதன் ரசத்தை அவள் வாயில் ஊற்றினான். தொண்டை கொஞ்சம் நனையவே, அவளது தாகம் சாந்தியாக, மூர்ச்சை தெளிந்து, இரு கரங்களையும் நீட்டிக் குழந்தையை எடுக்க முயன்றனள். இதைக் கண்ணுற்ற அயாஸ் குழந்தையைத் தூக்கி அவளருகில் விடுத்தனன். கொஞ்ச நேரங்கழிந்தபின் அமீனா குழந்தையை எடுத்துக்கொண்டு எழுந்திருக்க, அயாஸும் மூட்டையைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு இருவரும் தம் வழியை நோக்கி நடந்தார்கள். அமீனாவின் அங்கத்தில் சக்தி கொஞ்சமேனுமில்லை. தன் குழந்தையைக் காப்பாற்றவேண்டுமென்ற ஆசையால், பாவம் ! அமீனா மிக்க சிரமப்பட்டு அவ்வழியில் நடந்து வந்தாள்.

போய்க்கொண்டிருக்கும் பொழுது நிராசை கொண்ட அமீனா, தன் கணவனை நோக்கி, "பிராணநாதா ! ஈச்வரன் நமக்கு என்னென்ன கஷ்டங்களைக் கொடுக்கிறான் பார்த்தீர்களா ! மத்தியில் நமக்கு மனோகரமான காட்சியைக் கொடுத்து, மறுபடியும் நமது ஆசையைப் பங்கஞ் செய்தனன். ஈச்வரா ! உனது எண்ணந்தானென்ன ? நாங்கள் இறக்கத் தயாராயிருந்தும் எதற்காக எங்களை வருத்துகின்றாய் ? தயாகரா ! இனியாவது உனது பயங்கர லீலைகளை மாற்று. க்ஷணநேரத்தில் உனது மாயையால் ஒரு ஜலமய நதியை நிர்மாணிக்கின்றாய். க்ஷணத்தில் இருந்த இடந்தெரியாது அதை மாற்றுகின்றாய். உனது மாயை அளவிறந்ததென்பதிற் சந்தேகமில்லை. ஈச்வரா ! இப்பொழுதாவது தயைகாட்டக் கூடாதா ?" என்றனள்.

பிறகு அயாஸ் பெருமூச்சு விட்டுக்கொண்டே, "பிரியே ! ஈச்வரன் தயாளுவே ! ஈச்வரன் நமக்கிப்பொழுது க்ஷணநேரம் சுகத்தைக்கொடுத்ததில் ஏதோ ஒரு காரணமிருக்கவேண்டும். நாம் அநேக ஆசைகளை வகித்து, தேசயாத்திரை புறப்பட்டோம். இந்த உலகு இந்திரஜாலத்தால் நிரம்பப் பெற்றுள்ளது. சிலர் மகாமோகினியின் பாசத்திற்குக் கட்டுப்பட்டு, அடிக்கடி இந்திரஜாலத்தினால் ஏமார்ந்து, கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள். மனோகர விருட்சங்களின் காட்சி, அதற்குச் சமீபத்திலுள்ள நதிதீரம், எதிரிலிருந்த நகரம் இவையெல்லாவற்றையும் நாம் கற்பனையிலேயே பார்த்துள்ளோம். ஒரு வேளை கனவாக இருந்தாலுமிருக்கலாம். கனவில் ஒருவன் க்ஷண நேரத்திற் குபேரனாகின்றான். அதே க்ஷண நேரத்தில் தரித்திரனாகின்றான். இவையெல்லாம் ஈச்வரனது மாயையே. ஈச்வரன் யாருக்கும் சுகத்தையுந் துக்கத்தையுங் கொடுப்பவனல்ல. ஆனால் மனிதன் தனது நற்கர்

மங்களாலும், துஷ்கர்மங்களாலும் சுகத்தையுந் துக்கத்தையும் அநுபவிக்கின்றான். நமது பூர்வஜன்ம கர்மத்தால் இந்த இந்திர ஜால மாயையைப் பார்க்க நேரிட்டது. பிரியே! வருவதெல்லாம் நன்மைக்கே! வாஸ்தவத்தில் நாம் துர்ப்பாக்கியசாலிகளென்பதிற் சந்தேகமில்லை. ஆனால் ஈச்வரனைத் தூஷித்துப் பலன் யாது? அவரை நிந்திப்பது பிசகே. ஏனெனில் ஈச்வரன் தயையின் சாகரமாய் விளங்குகின்றார்" என்றனன்.

அமீனா தன் நாதனை நோக்கிப் "பிரியகரா! க்ஷமிக்கவேண்டும். இத்தாசிக்கு ஈச்வரனிடம் சிரத்தையில்லாமலல்ல. துக்கத்தின் மேலீட்டால் நானவரைத் தூஷியாதிருக்க முடியவில்லை" எனப் பதிலளிக்க, அயாஸ், "இது மனிதர்களது மூடத்தன்மையே. நாம் முன்னால் இப்பயங்கரப் பிரதேசத்தைப் பற்றிக் கொஞ்சமேனும் நினைத்தவர்களல்ல. இக்கஷ்டத்தை நாமே வருவித்துக்கொண்டோம். நமது உடலில் ஜீவனிருக்கும் வரை இக்கஷ்டங்களை மறக்கவும் இயலாது. ஆயினும் இவையெல்லாவற்றிற்குந் தப்பி நாம் இன்று வரை உயிருடனிருப்பது அந்த ஈச்வரனது கிருபையேயல்லாமல் வேறென்ன? இதுவே பெருத்த உபகாரமென நாம் கருதவேண்டும்" என்றனன்.

இவ்வண்ணம் இருவரும் சம்வாதஞ் செய்துகொண்டிருக்க, அமீனாவின் சக்தி குறைந்துகொண்டே வந்தது. சமீபத்தில் பிரசவித்தவளாதலாலும் அக்குழந்தையையுஞ் சுமந்து நடப்பது அவளுக்கு மிக்கச் சிரமமாகவேயிருந்ததாலும் தன் சரீரத்திற் தங்கியிருந்த சக்திகளெல்லாவற்றையும் ஒன்று சேர்த்தே நடந்துகொண்டிருந்தனள். ஆனால் கடைசியாகக் கொஞ்சமேனும் மீதியில்லாதிருக்கவே, திடீரெனப் பேச்சற்றுக் கீழே யுட்கார்ந்தனள்.

தனது பிரிய பத்தினிக்குண்டான அவஸ்தையைக் கண்ணுற்ற அபாக்கியசாலியான அயாஸ் பீதியடைந்தனன். அவனது மனம் ஆயிரக்கணக்கான விசாரங்களுக்குட்பட்டது. தலையிற் சுமந்திருந்த மூட்டையைக் கீழே இறக்கிவைத்து, மிக்க நிராசை கொண்டவனாய்த் தனது பத்தினியின் அருகிலுட்கார்ந்தான். நாலாபக்கங்களிலுங் கஷ்டங்களாற் சூழ்ந்திருக்கவே, அவனது நேத்திரங்களினின்றும் நீர் தாரை தாரையாகப்பெருகிற்று. ஆனால் மனதைத் திடப்படுத்திக் கண்களைத் துடைத்துக்கொண்டு, தன் பத்தினியையும் இளங்குழவியையும் கொஞ்ச நேரம் உற்று நோக்கியிருந்தபின், மிகவும் உரத்த குரலில், "பிரியே! எனது மனம் இப்பொழுது ஒரு கோர விசாரத்திற்குட் பட்டிருப்பதால், நீயும் அதன்படியே கேட்டு நடக்கவேண்டும்" எனப் பகர்ந்து, தன் மனதிலுள்ளவற்றை அவளிடம் சவிஸ்தாரமாகச் சாற்றினான். அவற்றைக் கேட்டுவந்த அமீனா பீதியடைந்தாள். தன் காதில் ஒன்றும் விழாததுபோற் காட்டிக்கொண்டு, குழந்தையைத் தூக்கி இடுப்பிலிறுத்தி, தன் வழியே நடக்க ஆரம்பித்தனள். ஆனால் அயாஸோ செய்வது யாதென்றறியாமல் திகைத்தான். மறுபடியும் அமீனாவை நோக்கி, "பிரியே! நீ சாத்தியமில்லாத காரியத்தைச் செய்ய ஆரம்பித்துள்ளாய். உனது மனதைத் திடப்படுத்திக்கொண்டாலல்லாது இதற்கு வேறொரு உபாயமுமில்லை. உனது மனதிலுள்ள மாத்ருப்பிரேமையை விலக்குவதே நீ செய்யவேண்டிய முதற்காரியம். புத்திர வாத்ஸல்யத்தை அகற்றுவாய்" என்றனன்.

பதியின் வாயினின்றும் வந்த வார்த்தைகளைக் கேட்ட அமீனா திடுக்கிட்டு ஆச்சரியமுற்றாள். அவளது வாயினின்றும் ஒருவார்த்தையேனும் வந்தபாடில்லை. ஒரு கற்சிலையைப் போல் இருந்த இடத்திலேயே ஸ்தம்பித்தனள். தனது குழந்தையை இறுகத் தழுவி, பதியின் உக்கிரமுகத்தை நோக்கியவளாய் நின்றனள்.

"அமீனா! அமீனா! நீ இவ்வளவு ஆச்சரியமுடன் நோக்கக் காரணம் யாது? உனக்கு இவையெல்லாம் அசம்பாவிதமாகத் தோன்றுமாயினும் இவ்வுலகத்தில் இது சர்வ சாதாரணமே. இதோ பார்! தலைக்குமேல் சூரியன் உக்கிர ஸ்வரூபத்துடன் கிளம்புகின்றான். கால்களுக்குக் கீழோ மணல் கொதிக்கத் தொடங்கிவிட்டது. இப்படிப்பட்ட பயங்கரப் பாலைவனத்தில் அன்னமும் நீருமின்றி இதுவரை பிரயாணஞ் செய்தாய்விட்டது. இன்னும் எவ்வளவு தூரஞ் செல்லவேண்டுமென்றுஞ் சொல்லுவதற்கில்லை. ஆகையால் நான் சொல்லுவதைக் கேள். க்ஷணநேரம் கண்களை மூடிக்கொள். ஸ்திரமனதுடன் நான் சொல்லுவதை அநுசரி! முதலில் ஆத்ம சம்ரக்ஷணை செய்துகொண்டல்லவோ மற்றவைகளைக் கவனிக்கவேண்டும்? பிரியே! மனிதர்களுக்கு எக்காரியமும் அசம்பாவிதமல்ல."

தன் கணவனது பயங்கர வார்த்தைகளைக் கேட்ட அமீனா, நிற்கச் சக்தியற்றவளாய் மறுபடியுங் கீழே உட்கார்ந்தனள். தனக்கெதிரில் எங்கும் ஒரே இருளாய்த் தோன்றியது. ஆனால் நிராசையே அவதாரமாக வந்துள்ள அயாஸ் கொஞ்சமேனுந் தயையின்றி, அமீனாவை நோக்கி ஆவேசத்துடன், "பிரியே! தற்சமயம் ஒரு க்ஷணத்தை ஒரு யுகமாகக் கருதவேண்டும். நமக்கு நேரிட்டுள்ள விபத்துக்களை எதிர்த்து யுத்தஞ்செய்தே தீரவேண்டியிருக்கிறது. சிநேகம், அன்பு, இரக்கம், பிரேமை, வாத்ஸல்யம் இவைகளை உன் மனதினின்றும் அடியோடு அகற்றுவாய். இல்லையேல் நீ உன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளுவது மிக்கக் கடினமே. சிநேகம், பிரேமை, அன்பு இவையெல்லாம் நிலையற்றவை. இவைகளிருப்பதால் துக்கமே அதிகரிக்கின்றது. இச்சமயம் இவைகளுக்கேற்றதல்ல. நமது சம்ரக்ஷணார்த்தம் இவற்றைத் தியாகஞ் செய்வது அத்தியாவசியமே. இப்பயங்கர ஸ்திதியில் அன்பும் ஆசையும் இருந்து ஆவதென்ன? ஆத்ம சம்ரக்ஷணையைப்பற்றி நினை. உன் மனதிலிருந்து நிலையற்றவைகளை அடியோடு அகற்று" என்ற வார்த்தைகளைக் கேட்ட அமீனா அசைவற்றனள். குழந்தையைத் தியாகஞ் செய்யத் துணிந்திருக்கும் கணவனது எண்ணத்தை யறிய, அவள் மனம் என்ன பாடுபட்டிருக்கும்! பத்துமாதஞ் சுமந்து பெற்ற தன் குழந்தையைத் திரஸ்கரிக்க வற்புறுத்துவதை நினைத்து, உரத்த குரலில் அழத்தொடங்கினாள். கல்நெஞ்சத்தை வகித்த அயாஸ் இதைக் கண்டு அஞ்சாதவனாய் அமீனாவை நோக்கி, "நீ ஏன் வீணாய் அழுகின்றாய்? இப்பயங்கர வனத்தில் ஒரு உயிரைக் கவனியாதிருந்தால், இரண்டு உயிர்களைக் காப்பாற்ற வழியுண்டு. இது நியாயமெனத் தோற்றவில்லையா? துக்கப்படுவதிற் பயனில்லை. மனதைத் திடப்படுத்திக்கொண்டு உன்னழுகையை நிறுத்து. பிரியே! கேள். ஆத்ம சம்ரக்ஷணைக்காகக் குழந்தையைத் தியாகஞ் செய்வதே உத்தமம்" என்றனன்.

குழந்தையை ஈன்றெடுத்த தாயின் செவியில் இவ்வார்த்தைகள் ஏறுமா? எப்படிப்பட்ட தாயும் தன் குழந்தையைத் தியாகஞ் செய்ய மனஞ் சகியாள். மாத்ரு தேவதையல்லவோ? தன் பிராணனது பிரதிஷ்டையல்லவா? ராக்ஷஸ ஸ்வரூபத்தை யடைந்த அயாஸின் வார்த்தைகளைக் கேட்டுவந்த அமீனா, கொஞ்சங்கொஞ்சமாய்க் காளியின் சொரூபத்தைக் கொண்டனள். அவள் முகம் சிவப்பேறியது. கேசகலாபம் சுயேச்சையாய் அவிழ்ந்து தொங்கி,

காற்றின் வேகத்தால் ஆடிக்கொண்டிருந்தது. நேத்திரங்களில் குரோதாக்கினி ஜ்வலிக்க, பிரமை கொண்டவள்போலத் தன் பர்த்தாவை நோக்கினாள். பீதியை விடுத்து, தைரியத்தை வகித்து, மிக்க உரத்த குரலில், "நாதா! வாருங்கள்! நான் தயாராயிருக்கிறேன்" எனவே, இதுவரை ராக்ஷஸ ஸ்வரூபத்துடனிருந்த அயாஸ், பீதிகொண்டு கலங்கினான். அச்சமயமிருந்த அவளது விசால நேத்திரங்களையும், பிரதிக்ஞையால் மாறுபட்ட முகத்தையும் அயாஸ் அதுவரை கண்டதில்லை. உற்சாகம் நிறைந்த கடோரஸ்வரத்தையும் அதுவரை அவன் கேட்டதில்லை. இவையெல்லாவற்றையும் ஜனசஞ்சாரமில்லாத வனத்திற் பார்த்தான், கேட்டான். அச்சமயம் குழந்தை கதறியழத் தொடங்க, வாத்ஸல்யம் நிறைந்துள்ள அமீனா பால் கொடுக்க முயன்றனள். ஆனால் வியர்த்தமே. சிரமத்தாற் களைத்திருந்ததால் அவள் உடம்பில் இரத்த ஓட்டமுங் குறைவாயிருந்தது. புஷ்பத்தையொத்த தன் சுகுமாரக் குழந்தையின் தொண்டையும் நனையாததால், நிராசைகொண்டவளாய், "ஆகா! எனது ஒரே குழந்தையையும் ஹரணஞ் செய்ய எண்ணமோ? தெய்வத்தோடு சண்டையிடுவது வியர்த்தமே. அவரது இஷ்டத்திற்கு விரோதமாக என்னதான் செய்ய முடியும்?" என்றனள்.

இவ்வண்ணம் இவள் விசாரப்பட்டு உட்கார்ந்திருக்கும்பொழுது, அயாஸின் தேகத்தில் மறுபடியும் பிசாசு சஞ்சாரஞ் செய்யத்தொடங்கியது. அநேக சங்கதிகளைச் சொல்லி அவளது மனதைத் திருப்ப மறுபடியும் முயன்றனன். அமீனா அவன் சொல்லிவந்தவைகளைக் கேட்டுவந்தாள். ஆனால் அவளது ஞாபகமெல்லாம் தொண்டைகூட நனையாமலிருந்த அக்குழந்தையிடமேயிருந்தது. அடிக்கடி குழந்தைக்குப் பால் கொடுக்க முயன்றனள். மிக்க நேரஞ்சென்றபின் அக்குழந்தை கொஞ்சந் திருப்தியடைந்தது. நித்திராதேவியின் பாசத்திற்குக் கட்டுப்பட்டிருக்க, அமீனா அதையே உற்றுநோக்கி உட்கார்ந்திருந்தனள். குழந்தையின் முகத்தைப் பார்த்துப் பார்த்து தன்னையே மறந்தாள். அச்சமயம் தாயையுங் குழந்தையையுங் கண்ட கல்லுங் கரையுமே! அயாஸ் கற்சிலையைப்போல் அசைவற்றிருந்தான். தோஷமற்ற குழந்தையைத் தியாகஞ்செய்ய இதுவே சரியான சமயமெனக் கண்டான். குழந்தை தூங்கிக்கொண்டிருந்ததால், அதை அதன் தாயின் பிரேமபாசத்தினின்றும் விடுவிப்பது சுலபமென அறிந்தான்.

இவ்விதமான விசாரத்திற்குட்பட்டிருந்த அயாஸ் தன் மனதிலுள்ளவற்றை மறுபடியும் அமீனாவிடஞ் சாற்றினான். அப்பயங்கரவார்த்தைகளைக் கேட்ட அமீனா தன் பிரிய பாலிகையை மார்போடணைத்து, மனோகர முகத்தில் முத்தமீந்து, சோகம் நிறைந்த ஸ்வரத்தில், "குழந்தாய்! நித்திரை செய். உன் ராக்ஷஸி மாதா நீ நித்திரை செய்துகொண்டிருக்கும் பொழுது உன்னைத் தியாகஞ் செய்யக் கருதியுள்ளாள். நிர்தயமாதாவின் இருதயம் கல்லைப்போல் கடினமாயிருக்கிறது. இவள் தனது குழந்தையை நித்திராவஸ்தையில் தியாகஞ் செய்யத் தயாராயிருக்கின்றனள்," எனக் கதற, அயாஸ் இதைக்கேட்டு மிக்கக் கஷ்டத்திற்குள்ளாகித் தன்னையே மறந்தான்.

கொஞ்ச நேரஞ்சென்றபின் அமீனா அழத்தொடங்கினாள். அயாஸும் அதைரியமடைந்து அழுதானாயினும், தன்னுடைய காரியத்தை நிறைவேற்றத் தயாரானான். அமீனா தன்னுடைய குழந்தையின் முககமலத்தைப் பார்த்து, 'நீ அப்ஸரஸைப்போல் திவ்விய சொரூபத்தையடைந்து, இப்பயங்கரமான ஆரணியத்தில் எதற்காகப் பிறந்தாய்? உன்

னுடைய இலாவணியத்தால் இந்த அந்தகாரமயமான பூமியை எதற்காகப் பிரகாசிக்கச் செய்தாய்? குழந்தாய்! இத்துஷ்டத்தாயின் களங்கமான அங்கத்தை விடுத்து விரைந்துசெல். உனது ஜோதியைக்கண்ட யாருக்குத் தான் உன்னைத் தியாகஞ்செய்ய மனம் வரும்?" என்று பிரலாபித்துக்கொண்டிருக்க, கன்னெஞ்சு கொண்ட அயாஸ், அக்குழந்தையைத் தாயின் கரத்தினின்றும் விரைவாக விலக்கித் தான் எடுத்துக் கொண்டான்.

அச்சமயம் கன்னெஞ்சே குடிகொண்டிருந்த அந்த ரணபூமியும் மனமிரங்கிக் கருணையுடன் இக்காட்சியை நோக்கி வந்தது. ஒரு பசுவின் கன்றை அதன் தாயைவிட்டுப் பிரிக்குங்கால் அப்பசு என்ன பாடு படுமோ அவ்வண்ணமே அமீனாவுங் கதறினாள்! அலறினாள்!! கொஞ்ச நேரத்தில் மூர்ச்சையுற்றுக் காற்றின் வேகத்தால் வாழைமரம் கீழே சாய்வதுபோல் கீழே விழுந்தாள். ஆனால் அயாஸோ இவை யாதொன்றையுங் கவனியாது அக்குழந்தையைக் கையிலேந்தி வேகமாகச் சென்றனன். வெகு தூரஞ் சென்றபின், மனதைத் திடப்படுத்திக்கொண்டு, தனக்குள்ளாகவே, "நான் எதற்காக இவ்வளவு தூரம் வந்தேனோ, அக்காரியத்தை முடித்தே தீரவேண்டும். இப்பொழுது யோசித்துப் பலன் யாது? அபாக்கியசாலியான குழந்தாய்! நன்றாய் நித்திரை செய். நித்திரா தேவியின் அங்கத்தை விடுத்து ஒருக்காலும் விலகாதே. இப்பிருதிவியின் காட்சி மறுபடியும் உனது திருஷ்டியிற் படாவண்ணம் நித்திராதேவியின் வசப்பட்டிரு. குழந்தாய்! இக்கன்னெஞ்சனை உனது பிதாவைக் கொஞ்சமேனும் நினையாவண்ணம் நித்திரை செய். நீ விழித்துக்கொள்ளும்பக்ஷத்தில் துக்கமே ஆரம்பமாகும். அதிக துக்கத்தை அனுபவிக்கவே நாங்கள் விழித்துக்கொண்டிருக்கிறோம். நீயோ கோமள அந்தக்கரணத்தோடிருக்கின்றாய். ஆகா! நான் இதைப் பற்றி யோசித்துப் பலன் யாது? அபாக்கியசாலி அமீனா மூர்ச்சையுற்றிருக்கும் வேளையிலேயே இக்காரியத்தைச் செய்து முடிக்கவேண்டும். மூர்ச்சை தெளியுங்கால் மறுபடியும் புத்திரவாத்ஸல்யத்தால் அவளது மனம் வேறுபடும். குழந்தாய்! போய் வா!! உனது துஷ்டப் பிதாவின் அமங்களமான கரங்களைவிடுத்து, ஈச்வரனது மங்களமும், சாந்தியும் நிறைந்த சுவர்க்க லோகத்திற்குப் பிரயாணஞ் செய். ஆசைக்கிருப்பிடமான இம்மிருத்யுலோகம் உனக்கு யோக்கியமான ஸ்தலமல்ல" என்று சொல்லியவண்ணம் தன் குழந்தையை இலைகளேயில்லாமற் பட்டுப்போயிருந்த ஒரு விருட்சத்தினடியில் விடுத்தனன். சூரியனது வெளிச்சம் அக்குழந்தையின் முகத்திற் படாவண்ணம் ஒரு துணியை அதன்மேல் விரித்தான். மற்றும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்த பின், அயாஸ் அங்கே கொஞ்சநேரமே நின்றான். ஆனால் அதற்குள் அவனது இருதயத்தில் வாத்ஸல்யமுதிக்க, சோக சாகரத்திலாழ்ந்தான். நேத்திரங்களினின்றும் நீர் தாரைதாரையாகப் பெருகியது. ஒருமுறை பெருமூச்சு விடுத்துக் குழந்தையைக் கடைக்கண்ணால் நோக்கி, "குழந்தாய்! ஆகா! என்ன உனது துர்ப்பாக்கியம்! நான் உனது பிரத்யட்சபிதாவாயிருந்தும், உன்னை இக்கதிக்குள்ளாக்கினேன். ஆனால் உன்னை ஆசீர்வதிக்கின்றேன். சர்வ சக்தி நிறைந்த தயாகரப் பிரபு உன்னிடம் கிருபாதிருஷ்டியைக் காட்டாதிரார்" என்று சொல்லி அவ்விடத்தை விட்டகன்றனன்.

அயாஸ் அவ்விடம் நின்றிருக்கும்வரை அக்குழந்தை நித்திராவஸ்தையிலிருந்தது. சோகக்கடலிலாழ்ந்தவனாய் அயாஸ் அவ்விடத்தை

விட்டுச் சென்றது வாஸ்தவமே. ஆயினும் கொஞ்சதூரஞ் சென்றபின், தன் குழந்தையை ஒரு முறை முகாவலோபனஞ் செய்ய இச்சை கொண்டவனாய் மறுபடியும் அவ்விடம் போய் முகத்தைப் போர்த்திருந்த வஸ்திரத்தை விலக்கி, புத்திரவாத்ஸல்யத்துடன், அக்குழந்தையின் பவித்திர முக கமலத்தை முத்தமிட்டனன். எவ்வளவுக் கெவ்வளவு முக கமலத்தை நோக்கி வந்தனனோ, அவ்வளவுக் கவ்வளவு அவனது இருதயத்தில் பித்ருப்பிரேமை அதிகரித்துக் கொண்டேவர, "ஆகா! வாத்ஸல்யத்தின் மகிமையை என்னென்று சொல்லுவேன்! வாஸ்தவமாகவே சந்தானப் பிரேமை பெற்றோர்களை பைத்தியத்திற் குள்ளாக்குகின்றது. அப்பிரேமையானது எனக்கு இன்றே இக்கோராரணியத்தில் அனுபவமாயிற்று. பெரிய பெரிய மகான்களுக்கும், தங்களைச் சூழ்ந்திருக்கும் பெருத்த கஷ்டங்களின்றும் தங்களை விடுவித்துக்கொள்ள இச்சந்தானமே சரியான சாதனமாயிருக்கின்றது—ஆகா! என்ன பெருத்த அபராதத்தைச் செய்தேன்! அமீனா மூர்ச்சித்துக்கிடக்க அவளது உயிருக்குயிரான இம்மதலையை இவ்வாரணியத்தில் விடுத்துச் செல்ல மனந்துணிந்தேனே. எதற்காக இந்த ஜன்மத்தை எடுத்தேன்?" என்று சொல்லிக் குழந்தையை அப்படியே விடுத்து, அறவை நாடிச் செல்ல ஆரம்பித்தனன்.

ஆனால் நாலடி செல்லுவதற்குள் ஒரு அதிசயமான சக்தி அவனைத் தடுத்து நிற்க, திடீரென நின்றான். கொஞ்சதூரம் பின்னாலேயே சென்று தனது குழந்தையை விடுத்த இடத்தைக் கண்ணீரை விடுத்து நோக்கினான். ஆகா! என்ன மோகம்! என்ன பிரேமை! பிறகு கொஞ்ச நேரம் உற்று நோக்கிப் பெருமூச்செறிந்து, "இனி இவ்வாத்ஸல்யத்தை விடுக்கவேண்டும். எனது முக்கிய ஜீவனாதாரமாகிய அமீனா மூர்ச்சித்துக்கிடக்க அவளை விடுத்து நான் வந்துள்ளேன். அவள் எக்கதிக்குள்ளாயினளோ அதையு மறியேன். இங்கே அதிகநேரம் நின்று வியர்த்தமாய்ப் பிரலாபித்துக் கொண்டிருப்பதிற் பலன்யாது? யாருக்காக இக்குழவியை உயிருடன் தியாகஞ் செய்யத் துணிந்தேனோ, அந்த அமீனாவை மறந்திருப்பது நியாயமல்ல" என்று சொல்லி விரைவாக நடந்து அமீனா இருக்கு மிடத்தை யடைந்தமாத்திரத்தில், அவள் மூர்ச்சை தெளிந்து, தனக்கு நேரிட்ட கஷ்டத்தை நினைத்து நினைத்து விசாரப்பட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கக் கண்டான்.

(தொடரும்.)

பிள்ளை வளர்ப்பு.

(ஸ்ரீமான் V. நடராஜன், B.A., L.T.)

இயற்கையாக ஒவ்வொரு ஜீவப்பிராணியும் தன் குழந்தையிடம் அன்பு மிகுந்து போஷித்துக் காப்பாற்றும். தன் கன்றை முகர்ந்து நக்கிக் கொடுக்கும் தாய்ப் பசுவின் அன்பையும் பெருமையும் யாரே வர்ணிக்கவல்லவர்? பூனை, நாய், கோழி முதலிய சகலப் பிராணிகளும் தத்தம் குழந்தைகளைப் போஷிக்கும் விதத்தை அப்பிராணிகளுக்கு யார் கற்றுக்கொடுத்தனர்? தம்மக்களிடம் உண்டாகும் தாயின் அன்பு இயற்கையாக இரத்தத்தில் ஊறி வருவது. அதை இயற்கை யறிவு என்று சொல்வோம். ஒவ்வொரு பிராணியும்தன்குழந்தைக்குத் தக்க வயது வருமளவும் உணவுகொடுத்துப் போஷிப்பதுடன், அதற்கு ஜீவனத்திற்கு வேண்டிய

வழிகளையும் பழக்கம் செய்விக்கிறது. மீன் குட்டிக்குத் தானே நீந்தவரும் என்று நாம் சொல்வோம். எனினும் அதுவும் தன் தாயுடன் நீந்தப் பழக்கம் செய்துகொள்கிறது. தாய் வாத்து தன் குஞ்சுகளைத் தடாகத்தில் இட்டுவந்து விளையாடும். பெட்டைக்கோழி தன் குஞ்சுகளைக் குப்பை மேட்டில் வைத்துக்கொண்டு தானியங்களைப் பொறுக்கும் விதத்தைக் காட்டும். ஆதலின் பிள்ளைகளை வளர்த்துப் பயிற்சி செய்வது இயற்கையாக எல்லாப் பிராணிகளுக்கும் ஏற்பட்ட கடமை.

மனித ஜாதியினர் பிள்ளை வளர்ப்பு விஷயமாக எவ்வளவு சிரத்தை எடுத்துக்கொள்கிறார்கள் என ஆராய்வோம். ஒவ்வொரு தேசத்திலும் குழந்தைகளைப் பெருஞ் செல்வம் என எல்லாரும் புகழ்ந்து பேசுவார்கள். பல கவிகளும் பாடகர்களும் குழந்தைகளை வர்ணித்துப் பாடி ஆநந்திக்கிறார்கள். முக்கியமாக நமது தேசத்தில் குழந்தையைத் தெய்வமென மதித்துக்கொண்டாடுவது வழக்கம். மக்கட் செல்வம்இல்லா ஒருவன்பெருந் துர்ப்பாக்கியன் எனச் சொல்வோம். ஒவ்வொருவனும் தன் வம்ச விருத்தியின் பொருட்டு ஒரு புத்திரனைப் பெற்றுத் தன் பிற்காலத்தில் அப்புத்திரன் செய்யும் காரியங்களைக் கண்டு மகிழ்ந்து இருப்பதே தனது பெரும் பாக்கியம் எனக்கருதுவான். புத்திரனில்லாத ஒருவனுக்கு மோட்சம் இல்லை என்று நமது ஜனங்கள் பொதுவாகச் சொல்வர். அதாவது ஜன சமூகத்திற்கு ஒரு சற்புத்திரனை அளிப்பது அவசியம் என்று பொருள். இந்தப் பெரிய தத்துவத்தை ஜனங்கள் அறியும்பொருட்டு இவ்விதம் புத்திர பாக்கியம் என்றும், புத்திரனில்லாதவன் பாவி என்றும் வர்ணிப்பதுண்டு. தன் தேசத்திற்கும் தனது ஜன சமூகத்திற்கும் ஒவ்வொருவனும் செய்யக்கூடிய மகா உந்நதமான உபகாரம் என்னவெனில் நற்குணம் பொருந்திய மக்களை அளிப்பதுதான்.

மக்களைப் பெற்று வளர்ப்பது சமூகத்திற்குச் செய்யும் மகா உத்கிருஷ்டமான கைங்கரியம். லோகோபகாரமாகச் செய்யப்படும் பல விஷயங்களைச் செய்து ஆநந்தமடையும் சந்தர்ப்பம் எல்லாருக்குமே கிடைக்காது. ஆனால் பெரும்பாலரும் தத்தம் மக்களை நன்றாக வளர்த்து நற்குணங்களைப் பயிற்றுவித்து அவர்கள் நற்பெயருடன் விளங்குவதைக் கண்டு ஆநந்த மடையக்கூடும். "ஆகா! இவனைப் பெற்றோர் என்ன பாக்கியம் செய்தனர்" என்று ஒருவனை வெகு ஜனங்கள் புகழுவதைக் கேட்கும் பெற்றோர்களுக்கு வேறு என்ன பாக்கியம் வேண்டும்? அப்பெற்றோர்கள் ஜனசமூகத்திற்குச் செய்துள்ள கைங்கரியத்தை யாரே மறந்துவிடுவர்?

ஒவ்வொரு குடும்பத்தாரும் இவ்விதம் மக்களை வளர்த்து சமூகத்திற்குக் கொடுப்பதால், ஜனசமூகத்தில் பொதுவாக க்ஷேமமும் சந்தோஷமும் விருத்தியாவதற்கு என்ன தடை! ஆனால் தற்காலம் நமது ஜனசமூகத்தில் பலவித கஷ்டங்கள் உள என்பது யாவரும் அறிந்த விஷயம். வேலை செய்யாத சோம்பேறிகள் கூட்டமும், பொய், களவு, கொலை முதலியன அஞ்சாமல் செய்யும் பல துஷ்டர் கூட்டமும், மாற்றானது சுகத்தைமறந்து தன்னயமே கருதி வசிக்கும் வேஷக்காரர் கூட்டமும் ஏராளமாக மிகுந்து நமது தேசச்தின் க்ஷேமம் நாசமாகி வருகிறது. இந்த ஜனங்கள் யாவரும் சிறு பிள்ளைகளாயிருந்த சமயம் அவரவர் பெற்றோர்கள் சிரத்தையுடன் அப்பிள்ளைகளை வளர்த்திருந்தால் எவ்வளவு மேன்மையா யிருந்திருக்கும்! கொலைக் களத்திற்குக் கொண்டு போகப்பட்ட மகா துஷ்டன் ஒருவனைப் பார்த்து ஜனங்கள் "இவனைப் பெற்ற உத்தமி யார்?"

என்று எளனம் செய்வது சகஜம். இத்தலை முறையில் உள்ள பெற்றோர்கள் சற்று சிரத்தையுடன் பிள்ளைகளை வளர்த்து வந்தால், அடுத்த தலை முறையில் பெரியோர்களான அவர்கள் ஜனசமூகத்தில் அதிக க்ஷேமத்தை விருத்தி செய்யலாம். அவ்வாறே நானா விருத்தியில் க்ஷேமம் விருத்தியாகி வரும்.

நமது ஜனங்களுக்குப் பொதுவாகப் பிள்ளைகள் பெறுவதுதான் பாக்கியம் என்று எண்ணம். பிள்ளைப்பேறு எதன் பொருட்டு பாக்கியம் எனக் கருதுகிறோம் என்பதை மறந்து விட்டோம். இதைப் பற்றியே ஒருவர் "புற்றீசல்போல் புலபுலெனப் புதல்வர்களைப் பெறுவீர்" எனச் சொல்கிறார். இளைஞன் தன் வயிற்றுக்கு வேண்டிய சம்பாத்தியம் செய்யுமுன், அவன் பாட்டியோ பாட்டனோ காலாகாலத்திற் கலியாணம் செய்யவேண்டும் எனக் கூச்சல் இடுகிறார். பிறகு கலியாணம் ஆனவுடன் "அதன் வயிற்றிலே ஒரு பூச்சி வைத்து என் கண்ணாலே பார்த்துவிட்டுப்போகணும்" என்று பாட்டி வேண்டுகிறாள். இவ்விதமாக ஒரு மனிதன் முப்பது வயதாகு முன் பல புத்திரர்களையும் பெண்களையும் ஓரொரு சமயம் பேரன் பேத்திகளும் பெற்று, புத்திர பாக்கியத்தில் அபார வரப்பிரசாதம் அடைந்தவனாய் இருப்பது சகஜம். நமது கிராமங்களிலும் பட்டணங்களிலும் எவ்வளவு மனிதர்கள் தாமே ஜீவனமின்றித் தவிப்பதுடன் நில்லாமல் தமது மக்கள் பலரையும் சோற்றுக்கு அல்லாடும்படியாகச் செய்கின்றனர்! இவ்வித ஜனங்கள் ஜனசமூகத்திற்குச் செய்யும் கைங்கரியம் என்ன? புத்திர பாக்கியம் பெற்றதனால் அவர்கள் அடைந்த அதிருஷ்டம் என்ன? இவ்வளவு கஷ்ட நிலையில் இருக்கும் ஒரு குடும்பத்தினருக்கு இன்னொரு குழந்தை பிறந்தது என்று கேட்டால், 'பிள்ளைப் பேற்றினும் பெரும் பாக்கியம் உண்டோ' எனச்சொல்லும் ஜனங்களுங்கூட "ஐயோ! பாவம் அவர்களுக்கு ஏன் குழந்தை" எனப் பரிதாபப்படுகிறார்கள்.

நமது ஜனங்களிற் பெரும்பாலார் இவ்விதக் கஷ்ட நிலையில் உள்ளவரேயாவர். அவர்களுக்கு இயற்கையாகப் புத்திரபாக்கியத்தில் மகிழ்ச்சி உண்டு என்றாலும், தமது தௌர்பாக்கிய ஸ்திதியின் கொடுமையினால் மக்களிடம் வெறுப்பு ஓரொரு சமயம் ஏற்படுவது சகஜம். பிள்ளைகளை ஒரே பிடிவாதமாக வெறுத்துத் தள்ளியவர் வெகு அரிது. ஒரு சமயம் அப்படித் தள்ளிவிட்டவர்களும் இன்னொரு சமயம் தம் செய்கைக்கு வருந்தி அன்பு பொங்கித் தவிப்பார்கள். ஆனால் பொதுவாக எல்லாப் பெற்றோர்களும் ஓரொரு சமயம் தம்மக்களிடம் வெறுப்பு அடைவதுண்டு. தகுந்த அந்தஸ்தில் உள்ள பெற்றோர்களும் ஓரொரு சமயம் பிள்ளைகளிடம் எரிச்சற் படுவதுண்டு. அப்படியிருக்கக் கேவலம் மிக ஏழையானவர்கள் பிள்ளைப் பேறு தமக்கு பாக்கியமாயிராமல் துர்ப்பாக்கிய நிலையை அதிகப்படுத்தியது என்று கதறுவது ஆச்சரியமன்று.

பிள்ளைகளைப் பெறுவதே துர்ப்பாக்கியம் என்ற எண்ணம் ஏற்பட்ட பிறகு அப்பிள்ளைகளைக் கவனித்துச் சிரத்தையாக வளர்ப்பதற்கு அவர்கள் எவ்விதம் பாடுபடுவார்கள்?

கல்வியறிவு இல்லாத ஏழைப் பெற்றோர்கள் நிலைமை இப்படியிருக்க, கற்றறிந்த பலர் குடும்பங்களைக் கவனிப்போம். நமது ஜனங்களிற் சிலர் ஆங்கிலப் படிப்புப் படித்து ஜீவனோபாய நிமித்தம் பல வேறு இடங்களில் வேலை செய்து பிழைக்கின்றனர். இக்காலத்தில் பெண் கல்வி என்ற ஏற்பாட்டின்படி சில பெண்மக்கள் படித்தும் இருக்கின்றனர். இவ்விதக் குடும்பத்தில் பிள்ளை வளர்ப்பு நன்றாக இருக்குமென்று சாதாரணமாக நாம் எண்ணக்கூடும்.

(தொடரும்.)

செந்தமிழ் நாட்டுச்சிறப்புக் கும்மி.

ஸ்ரீமான் நா. கோவிந்தசாமி பண்டிதர்.

(196-ம் பக்கத் தொடர்ச்சி.)

கோலாகலஞ் செய்யும் மாயா விகாரத்தைக்
  கொள்ளாத வானவன் நல்லருளால்
ஆலால சுந்தரமாகிய அந்தணன்
  அற்புத வாக்கதும் செந்தமிழே. (54)

வல்லவன் மூப்புறு வேதியனாகியே
  வந்து மணவறை முன்னம் நின்று
தொல்லை யடிமையெனத் தடுக்கப்பெற்ற
  சுந்தரம் ஈசன் பிரதிபிம்பம். (55)

சத்தாகி யெங்கும் நிறைகின்ற சங்கரன்
  சந்நிதி வெண்ணெய் நல்லூரதனில்
பித்தா பிறைசூடி என்றருள் வாக்கினில்
  பீடா எழுந்ததுஞ் செந்தமிழே. (56)

அன்றருள் கூர்ந்து வென்குன்றில் உரைத்ததை
  அறிவித்தெம்மை யெதிர்த்ததனால்
வன்றொண்டனென்றொரு நாமம் தந்தோமென
  மாதேவன் சொன்னதும் செந்தமிழே. (57)

தில்லை வாழந்தணர் என்று முதலடி
  தேவன் திருவருளா லெழவே
நல்லவன் சுந்தரம் திருத்தொண்டத் தொகை
  நாடி யுரைத்ததும் செந்தமிழே. (58)

குண்டையூர் வாழுங் கிழார் கொடுத்த செந்நெல்
  கூளிகள் சுமந்துகொண்டு வந்து
பண்டையாரூரதில் பரவைக்கீந்திடப்
  பதிகஞ் சொன்னதுஞ் செந்தமிழே. (59)

செங்கழல் போற்றிய கோட்புலிக்காகவே
  திருப்பதிகக் கடைக்காப்பில்
சிங்கடியப்பனென்றே யருள் வாக்கது
  சிறந்தெழுந்ததுஞ் செந்தமிழே. (60)

பங்குனி நல்விழா தான் வரவே கொஞ்சம்
  பணம் அவசியமானதனால்
செங்கல்லு தங்கமதாகப் புகலூரில்
  செப்பிய பதிகஞ் செந்தமிழே. (61)

சொல்லுந்திருப்பனையூரின் புறத்தினில்
  சுந்தரனும் நடந்திடவே
வல்லவன் நடனக் காட்சி தந்தருள
  வந்த பதிகமும் செந்தமிழே. (62)

நன்னீரார் வயல் சூழ் விருத்தாசல
  நாதன் திருக்கழல் போற்றி நின்றே
பன்னீராயிரம் பொன்னை யளித்திடப்
  பாடிய பதிகஞ் செந்தமிழே. (63)

பொன்னை யெல்லா மணி முத்தா நதியினிற்
  பொருட்டுத் திருக்கமலாலயத்தில்
மன்னிய ஈசன் திருவருளால் கொண்டு
  வாழ்வுறச் செய்ததுஞ் செந்தமிழே. (64)

நல்ல திருக்குரு காவூருக்கருகில்
  நாயகன் நீரொடு கட்டமுதும்
செல்லும் வழியதில் வன்றொண்டருக்கெதிர்
  சென்றுணச் செய்ததுஞ் செந்தமிழே. (65)

கச்சூரில் மேவிய நின்மலன் அம்புலி
  கங்கை நிறைந்த பெருஞ் சடையான்
பிச்சை யெடுத்தடியாருக் கிட்டே பெரும்
  பேறுறச் செய்ததுஞ் செந்தமிழே (66)

ஒற்றியூர் தன்னிலெழுந்தருளித் தொண்டர்
  ஒண்டொடி சங்கிலியாரைக்கண்டு
பொற்றொடி பாகன் திருவருளால் மணம்
  புரிந்து வாழ்ந்ததுஞ் செந்தமிழால். (67)

பரவையாரிடம் போவதில்லை யென்றே
  பத்தன் மகிழ மரத்தடியில்
சாதஞ் செய்து பின் ஆரூரை யெண்ணிடச்
  சங்கரன் செய்ததும் செந்தமிழால் (68)

(தொடரும்.)

போட்டி.

(ஸ்ரீமதி சுசீலா.)

போட்டி! மூன்று அட்சரங்களேயாயினும் இச்சிறு வார்த்தையை அறியாதார் யார்? இதன் உணர்ச்சியை யனுபவியாதவரும் மிகச் சிலரே உலகிலிருப்பரென்று கூறலாம். நம் வாழ்நாளில் என்றைக்காவது சற்றேனும் இம்மயக்கத்திற்குள்ளாகாமல் நாமிருக்கக்கூடுமென்ற நம்பிக்கையை நம்மால் சாதாரணமாய்க் கொள்ளமுடியுமா! கேவலம் மனிதனென்றறிவிப்பதற்குச் சான்றாக நிற்கும் இயற்கை குணங்களில் இதை முக்கியமாகக் கொள்ளுதல் முற்றும் பொருந்தும். ஒரேவிதப் பிரயத்தினத்தில் ஒருவரை யொருவர் முற்பட்டு நிற்பதே இக்குணத்தின் முக்கிய நோக்கமாக விளங்குகின்றது. தானே தேர்ந்தெடுத்தோ, அல்லது உலகிற் பொதுவாகவோ சிறப்புற்று விளங்கும் சில உயர்ந்த பாவனைகளை (ideals) ஆசையுடனும், கவலையுடனும் இருதயத்தில் வைத்துப் போற்றி, அவைகளுக்குகந்தவாறு தானும் நடக்க மனிதன் முயலுவது அருமை. ஆனால், அவரவர் நிலைமை தன்மைக்கேற்றபடி பிறரிடம் எவ்வித உயர்வு கண்களுக்கு விசேஷமாகத் தோன்றுகிறதோ, அதைப் பொறுத்து, அச்சமயம் கிளம்பும் போட்டியென்னும் இவ்வலிய உணர்ச்சியால், தான் அதற்கு மேலும் உயர்ந்து விளங்கவேண்டுமெனத் தூண்டப்பெறுவது மாந்தர்களுக்கு சகஜமாயிருக்கிறது. அகங்காரத்தையொழிப்பதுஎவ்வளவு அரிதோ, அவ்விதமே அவ்வகங்காரத்தின் பிரதான அங்கமான இப்போட்டியையும் வெல்லுவது சிரமசாத்தியமே. கள்ளம் கபடற்ற குழந்தைப்பருவத்திலும் இதன் வன்மை சிறிது வெளியாகிறதென்றால் நாம் அதிகம் கூறவேண்டுமோ?

தன்னுடனிருப்பவர், அல்லது தனக்குச் சமமானவர் ஏதாவதொன்றில் தன்னிலும் மேன்மையை யடையும்பொழுது பார்த்து மாறாது நிற்கும் உள்ளமானது தவறியற்றுவதை இயல்பாகக் கொண்டிருக்கும் மனித வர்க்கத்தில் சஞ்சரிப்பது கடினம். அப்படி ஒருக்கால் இருப்பினும், அம்மாசற்ற உள்ளத்தின் பெருமையை முற்றிலும் உணர்ந்து மதிப்பவர் பின்னும் அரிதேயாகிவிடுவர். பகுத்தறிவென்னும் விசேஷ அறிவு பெற்று மிருகத்தினின்றும் மேம்பட்ட உயர்தர வாழ்க்கையை மனிதன் கைக்கொண்டதுமுதல், பிறரை வெல்லவேண்டுமென்ற பேராவலும் அவனுள்ளத்தில் சகஜமாய்க் குடிகொண்டிருக்கவேண்டும். தனக்கிருப்பவைகளைக் கொண்டு திருப்தியடைந்து மற்றவரிடம் பொறாமையாவது, போட்டியாவது கொள்ள நினையாதவன் உணர்ச்சியற்ற மந்தபுத்தியுள்ளவனென்றே சில சமயங்களிற் கருதப்படுகிறானன்றோ!

ஐம்புலன்களுடைய விஷமங்களுக்கும் அடிமைகளாகிக் கிடக்கும்பொழுது, அவை யாவும் போதுமானவையன்றுபோல இப்போட்டியென்னும் குணத்தை நாமே வலிய யிழுத்து நமக்குள் ஏற்றுக்கொண்டு நமது அமைதிக் குறைவை இன்னும் அதிகமாகவேதேடிக்கொள்ளுகிறோம். நம்முடைய குழந்தைகளுக்கும் நாமே பல வழிகளின் வாயிலாக அதைக் கற்பித்து வருவது வழக்கமாகிறது. தங்கள் விளையாட்டுகளிலாயினும், படிப்பிலாயினும் அவர்கள் ஒருவரையொருவர் முன் செல்லத் தூண்டப்பெற்று ஜயம்கொள்ளுவதைக்காணப் பெற்றோரான நாம் செருக்கடைகிறோம். நன்னெறி, கடமைப்பற்று, சத்தியம் முதலிய உத்தம குணங்கள் விஷயத்தில் தன் சக்தியைப் பிரயோகியாது, பதவியிலும், பெயரிலும், அற்ப பாண்டித்தியத்திலும் மானிடர்களை மெய்சோரச் செய்து ஆட்டி வைப்பதே போட்டியினாலான பயனும் உபயோகமுமாகின்றது. பெரும்பாலும் சிற்றறிவு பெற்றவர்களான நாம் நமது மோட்டார் மற்றொன்றைத் தாண்டி வேகத்துடன் முன் செல்லுவதைக் கண்டாலும் அடங்கா மகிழ்ச்சி கொள்ளும்பொழுது நம்மைப் பற்றிய இன்னும் மற்ற முக்கிய விஷயங்களிற் கேட்கவேண்டுமா?

ஆயினும், தோஷத்தை யொதுக்கி குணத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற நியாயத்தின்படி, விஷமும் அமிர்தமும் சேர்ந்துதித்ததுபோல், சில நன்மைகளும் இப்போட்டியினின்றும் தோன்றுவதை நாம் கவனிக்க வேண்டும். இதன் கிளர்ச்சியினாலேயே சில சமயங்களில் நமது சக்தியையும், யோக்கியதையையும் நாமே முற்றிலும் அறிந்தவர்களாகிறோம். நமது பெரும் முயற்சிகளுக்கும் பெரும்பாலும் அதுவே முதற்காரணமாயிருப்பதும் அனுபவத்திற்காணக்கூடாததல்ல. இவ்வுணர்ச்சி நம் இருதயத்திற் குடிகொண்ட க்ஷணமே நாம் முற்கொண்டிருந்த சலிப்பும், அலக்ஷியமும் நம்மை விட்டுப் பறந்தோடி விடுவதுடன், அவைகளுக்குப் பதிலாய் ஒரு புதிய ஊக்கமும் தைரியமும் நம்மைக் கைப்பற்ற, பிறரை வெல்லவேண்டுமென்ற ஆவலில் தளரா முயற்சிகொண்டுழைக்க நாம் சித்தமாகிறோம். "மற்றவரைக் காட்டிலும் நாம் எதில் தாழ்ந்தவர்கள்?" என்ற செருக்கானது சிறிதாயினும் நம்முன்னில்லாதிருப்பின், அப்பொழுது இப்போட்டியென்னும் மனோவிகாரமும் நம்மிடம் அணுகக் காரணமில்லை. கல்வித்தேர்ச்சி, பதவி இவைபோன்ற விஷயங்களில் நம்மைப்பற்றிக் குறைவு தோன்றாமல், சிறிது நம்பிக்கையிருப்பதே நாம் அவைகளைப் பெற மிக்க உதவி புரியுமென்பதை ஒருவர் எடுத்துக் கூறுவது அனாவசியமல்லவா?

\ பள்ளியிற் படிக்கும் பையனுக்கு இப்போட்டியென்னும் குணத்தினால் தீமைகளைவிட நன்மைகளே ஏற்படுமென்பதை யாவரும் அறிவார்கள். வீட்டில் சற்றும் படிப்பில் கவனம் செலுத்தாதசிறுவன்பள்ளிக்கூடம்சென்று திருந்துவது பெரும்பாலும் எதனால்? உபாத்தியாயர் தன்னெதிரில் மற்றொரு பையனைக் கொண்டாடும்பொழுது வெட்கத்துடன் ஒரு புதிய உணர்ச்சியுண்டாய் அவனுள்ளத்தைக் கலக்குவதை அவனன்றோ அறிவான்! பின்பு காளடைவில் கிளம்பும் சுறுசுறுப்பும், ஊக்கமும் தங்கள் பலனைத் தாமாகவே அவனடியில் வைத்துச் செல்ல,

" தெய்வத்தாலாகாதெனினும்,
முயற்சி தன் மெய் வருத்தக் கூலிதரும்"

என்னும் குறளின் பெருமையை அவன் நன்கு வெளிப்படுத்தியவனாகிறான். ஆயினும், ஒருவருக்கு மேற் போகவேண்டுமென்ற நியாயமற்ற ஆவல் வெளித்தோன்றாதவரையில், அதற்குப் போட்டியென்னும் பெயரிடுவதே யுக்தமல்லவென்று தோன்றுகிறது.' ஒருவருடைய உயர்வைக் கண்டு, அதைத் தாமும் பெறவேண்டுமென்ற ஆசையுடன், அவரையே முன்மாதிரியாகவெண்ணி நடக்க முயலுவது எவ்விதத்திலும் சிறந்த குணமாகும். அப்படிக்கின்றி ஈச்வரன் நமக்கு அநுகலங்களை யளிக்காதிருக்கும்பொழுது பிறரை நமக்கு எதிராக எண்ணி ஒழுகுவதும், அவருக்கு முற்பட்டு நிற்கவேண்டுமென்ற தவறான விருப்பம் கொள்ளுவதுமே போட்டியென்னும் அற்பப் பெயரை விளக்குவதாம். அதன் மகிமையை ஒரு பக்கம் எடுத்துரைக்கப் புகுந்தால், விசுவாமித்திர மகரிஷி இதன் வலிமையினால் மற்றொரு சுவர்க்கத்தைச் சிருஷ்டிக்கும் ஆற்றலைப் பெற்றது அற்ப உவமையாகுமோ?

அதன் சக்தி அளவற்றதாயிருப்பினும், அப்போட்டி எம்மட்டோடு நின்றால், அழகாயும் பெருமைக்குப் பாத்திரமாயுமிருக்குமென்பதையும், எவ்வெல்லைக்கு மேற்பட்டால் பொதுவாய் விரஸத்தை யளிக்குமென்பதையுமே நாம் இங்கே ஆராய்ந்தறியவேண்டும். போட்டி போடுபவர்கள் தங்கள் குன்றாமுயற்சியினால் மிக்க கௌரவத்தைப் பெற்றாலும், அக்குணத்தை மிதமிஞ்சி வெளிக்காட்டுவார்களாயின், தங்கள் நல்லொழுக்கத்தினின்றும் தவறியவர்களாவார்கள். பசித்திருப்பவன் ஆகாரத்தை விரும்பினாலும், கேவலம் அதற்காகத் தன் ஆவலை அளவுக்கு மிஞ்சி வெளியிடுதல் எப்படி வெறுப்பை யுண்டாக்குமோ அவ்விதமே போட்டியில் ஒருவரை வெல்லவேண்டுமென்ற பேராசையானது வரம்பு மீறித் தோன்றுவதும் பெரும்பாலும் அருவருப்பையே கொடுக்கும்.

சம்சார சந்நியாசியின் விசாரம்.

By Zero.

(237-ம் பக்கத் தொடர்ச்சி.)

விவாக தடபுடல்.

தரி; விவாகம் நிச்சயமாயிற்று. வரதக்ஷிணை, சீர், பாத்திரங்கள் முதலியவைகளைப்பற்றி நிபந்தனைகளாய்விட்டன. கொடுக்கல் வாங்கலைப் பற்றித் தீர்மானமாய்விட்டது. அழைப்புக் கடிதங்கள் அச்சடித்து, இருவீட்டாரும் தம்தம் ஆப்த இஷ்டமித்திரர்களுக்கு ஒவ்வொரு ஊருக்கும் அனுப்பியாயிற்று. கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டால் பாரம் நீங்கி விடுமென எண்ணியிருந்த மணமகளது தாய் 'சம்பந்தி வீட்டாருக்கு எவ்விதம் மரியாதை செய்வது? புடவை, ரவிக்கைத்துண்டுகள் எவ்வளவு வாங்குவது? சரிகைக்கரை எவ்வளவு, சரிகையில்லாதது எவ்வளவு?' என்று இதர ஸ்திரீகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறாள். பெண்ணின் தந்தையோ இங்குமங்கும் ஓடி அலைந்து, இருக்கும் வீடு நிலங்களை விற்று, வரதக்ஷிணை கொடுக்க வேண்டிப் பணஞ் சேகரிக்கும் வேலையிலேயே மனதைச் செலுத்தியிருக்கிறார். சிறுபெண்கள் ஒன்று கூடிக் கலியாணப் பெண்ணை பரிகசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மணமகனது தந்தை கைதேர்ந்த தட்டானை வீட்டிற்கு வரவழைத்து அங்கேயே மணப்பெண்ணுக்கு நகைகள் செய்ய ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார். ஜவுளி வியாபாரிகள் தம்தம் மூட்டைகளை ஒவ்வொன்றாக அவிழ்த்து, வீட்டு யஜமானரிடம் தமது சரக்குகளைப் பற்றிப் பிரமாதமாக வர்ணித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். மாமியார் 'தன் மருமகளுக்கு இந்தக் கலர் சோபியாது. சந்தனக்கலர் புடவையே நன்றாயிருக்கும்' என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறாள். கலியாணப் பிள்ளையின் சகோதரி—நாத்தனார்—'என் அண்ணாவின் கலியாணத்தில் இப்படிச் செய்ய வேண்டும், அப்படிச்செய்யவேண்டும்' எனத் தனது சிநேகிதிகளோடு உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருக்கிறாள். மணமகனோ தனக்குச் சீக்கிரம் விவாகம் நடக்கப் போகிறதென ஆனந்தசாகரத்திலாழ்ந்திருக்கின்றனன்.

அநேக ஊர்களிலிருந்து உறவினரும் மித்திரர்களும் வந்து சேர்ந்தார்கள். கலியாண வீட்டில் கும்பல் கூடியது. எல்லோரும் அறட்டையடித்தவண்ணமிருந்தார்கள். நிதமும் ஆராதிக்கப்பட்டு வந்த விக்கிரகத்தையும் சிறு குழந்தைகளையும் கவனிக்க ஒருவருமில்லாது, கலியாண சம்பிரமத்திலேயே எல்லோரும் மனதைச் செலுத்தியிருந்தார்கள். பெண்ணின் தந்தை நாலாபக்கங்களிலும் ஓடி யலைந்து, கொஞ்சங் கொஞ்சமாகச் சேகரித்து, வரதக்ஷிணையைத் தயாராக வைத்துக் காத்திருந்தார். பிறகு கேட்பானேன்! பிரேம விவாகம் ஆரம்பமாயிற்று! விவாகம் பிரேம பந்தமாகாமல் கர்மபந்தமாய் முடிந்தது! பெண்ணின் தந்தை சாகும்வரை பிச்சை யெடுத்தாலுஞ் சரி, ரொக்கம் சரியாய் வராவிட்டால் 'பெண் மனதிற்குப் பிடிக்க வில்லை' என்ற பதிலே வரும். ஆகா! வரதக்ஷிணையே! என்ன உனது மகிமை! நீ மனதிற்குப் பிடித்து விட்டால், கறுப்பாயிருக்கும் பெண்களும் சிகப்பாய் விடுகின்றார்கள். நீ யல்லவோ ஒன்றரைக் கண்களை இரண்டு கண்களாக்குகின்றாய்! குரூபிகளையும் ரூபவதிகளாக்குகின்றாய்! கர்ண கடூரமான தொனியைக் கர்ணாமிர்தமாக்குகின்றாய்! கடைசியாய் நீ மாத்திரமிருந்தால், ஜாதகம், நக்ஷத்திரம் முதலிய முப்பத்தாறு குணங்களுங்கூடச் சரியாய்ப் பொருந்தி விடுகின்றனவே!

வரதக்ஷிணை வாங்குவதால் மருமகளுக்கு ஏதாவது சில நகைகளைச் செய்யாதிருக்க முடியாதென, மணமகனது தந்தை சில சிநேகிதர்களிடஞ் சென்று காசுமாலை, வைரக்கம்மல் முதலிய சில நகைகளைக் கடனாக வாங்கி வந்தார். வாளி, கொப்பு, காரை முதலிய நகைகளைச் செய்தால் வீணில் வீட்டில் தூங்க வேண்டுமென்று நினைத்திருக்க, மணமகனது தாய் அந்த நகைகளில்லாமல் விவாகஞ் செய்யக்கூடாதெனப் பிடிவாதஞ் செய்யவே, சில நாட்களுக்கு வேண்டி இவைகளும் கடனாக வாங்கி வரப்பட்டன. நகைகள் தயாராயின. புடவைகள், ரவிக்கைகள் முதலிய ஜவுளி தினுசுகள் வாங்கியாய் விட்டன. உக்கிராண அறைகள் சாமான்களால் நிறைக்கப்பட்டன. நிச்சிதார்த்த தினத்தில் வரதக்ஷிணை வாங்க மணமகனது தந்தை உட்கார்ந்திருக்கப் பணம் கையில் வந்தவுடனே நிச்சிதார்த்தமும் முடிந்தது.

விவாகம் சுபமாய் நடைபெற்றது. தாலி கட்டியாய் விட்டது. விவாக மகோத்ஸவங்கள் சரிவர நடந்தேறின. சாஸ்திரோக்தமாய் நடக்கவேண்டிய காரியங்கள் பாக்கி யொன்றுமில்லை. ஆசாரப்படி நடக்கவேண்டிய காரியங்கள் மீதியிருந்தன. நலங்கு, ஊஞ்சல் சரிவர நடந்தேறிய போதிலும் மீதி சில இருந்தன. "என்னசெய்தும் பலன் என்ன? இப்படியா கலியாணம் பண்ணுவது? மாமியார், நாத்தனார் யார் என்று இனியேன் கவனிக்க வேண்டும்? தாலிகட்டிய பிறகு எங்களைப்பற்றிய கவலையேன்? சம்பந்தி கோபங்கொண்டாலென்ன, நாத்தனார் கோபங்கொண்டாலென்ன?" என்னும் வார்த்தைகளே மீதியிருந்தன.

விவாகத்தில் மணமகள் வீட்டோரைக் கவனிப்பவர் யார்? மணமகனது வீட்டாருக்குக் கோபம் வாராதிருக்க வேண்டுமே யென மிகவும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டியிருக்கிறது. இவர்களில் முதல் நம்பர் மாப்பிள்ளை! ஏனெனில் இவனால் தானே இந்த மகோத்ஸவங்களெல்லாம்! ஆகையால் இவனைப் பூவைப்போற் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. அணுவளவேனும் இவனுக்குக் கோபமுண்டு பண்ணக் கூடாது. பெண்ணின் க்ஷேமம் இவனாலல்லவோ? ஆகையால் இந்த மாப்பிள்ளைப் புழு

துள்ளாதிருக்கப் பார்த்துக்கொண்டே யிருக்க வேண்டும். பிறகு சம்பந்தி அம்மாள்! இவளிடம் நமது பெண்ணிருந்து காலக்ஷேபஞ் செய்யவேண்டியிருப்பதால் இவளையும் சந்தோஷப்படுத்தி வைக்கவேண்டியதவசியம். இல்லாவிடில், 'பெண்ணை உடனே என் வீட்டிற்கனுப்பிவிடு' என அதட்டுவாள். பிறகு நமது நாத்தனாரம்மாளின் நம்பர்! வயதிற் சிறியவளாயிருந்தாலும், இவளுக்குப் பயப்படாமலிருக்க முடியாது. இல்லையேல், கோட் சொல்லிப் பதிபத்தினிகளுக்குள் சண்டையை நொடியில் வருவித்து விடுவாள். ஆகையால் இவளது வாயையும் அடைத்து வைக்கவேண்டியிருக்கிறது. மனதைப் பிளக்கும் வார்த்தைகள் இவள் வாயினின்றே வெளிவரும். பிறகு மாமனாரது நம்பர்! ஆனால் இவ்விருவர்களுக்கு முன் இக்கிழவர் எம்மாத்திரம்!

மூன்றாவது முறை தாலியை முடிக்குஞ் சமயத்தில்தான் நாத்தனார் கோபாவேசங் கொண்டு மூலையில் உட்காருவது வழக்கம். பல முறை அழைத்தாலல்லாது அவள் இடத்தைவிட்டுப் பெயராள். எப்பொழுதும் இவளது தயவையே எதிர் பார்த்திருக்கவேண்டும். முதலிலேயே கோபித்துக்கொள்ளுமிவள், கடைசிவரை என்ன அட்டகாசஞ் செய்யாதிராள்? சீர் வரிசையிற் கொஞ்சங் குறைந்துவிடில் வந்தது மோசம்! இவளது கண்கள் சிவக்கும். இவள் முகதேஜஸைக் கண்டமாத்திரத்தில் மணமகள் வீட்டார் சங்கதியையறிந்துகொள்ளவேண்டும். மணமகளுக்குப் பின்னாற் பிறக்கப் போகும் குழந்தைக்கும் இப்பொழுதே சீர் வரிசையுடன், ஹார்லிக்ஸ் மில்க், ஓவல்டின் முதலியவைகளை அனுப்பித் தரவேண்டியதவசியம்.

பன்முறை அழைக்கப்பட்டாலல்லாது மணமகன் வீட்டார் சாப்பிடவரக்கூடாதென விவாக சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விவாக சாஸ்திர ரூல் தவறி இவர்கள் ஒருபோதும் நடக்கமாட்டார்கள். ஏனெனில் இதற்குப் பிரமாதமான தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. விவாகக் கோடின் அப்பெண்டிக்ஸ் ஏ-யில் (Appendix A) கூறப்பட்டுள்ள வண்ணம் வாழை நுனியிலை ஒன்றை முழுமிருக்கவேண்டும். ஒரு முழுமாயிருந்துவிடின், உடனே இவர்களது நேத்திரங்கள் சிவந்து அகண்டு பிரகாசிக்கும். சரியான வேளையில் இலைபோடாவிட்டால், என்ன வீண் பேச்சுண்டாகுமெனச் சொல்லவேண்டியதில்லை. ஐந்து நாட்கள் விதவிதமான பட்சணங்களுடன் சாப்பாடு போடுவதுமன்றிக் கடைசியிலும் பற்பல கட்டுசாத மூட்டைகள் எட்டு நாட்களுக்காகும் வண்ணம் அனுப்பித் தீரவேண்டும்.

பந்தல் ஜோடிக்காமலிருந்தால், சம்பந்தி அம்மாளுக்கு வந்துவிடுங் கோபம். நெய் கொஞ்சம் வாசனைக் குறைவாயிருந்தால் வந்துவிடும் கோபம். பெண்ணின் தாய் ஒவ்வொரு முறையும் 'வாருங்கள்! உட்காருங்கள்!' என்று சொல்லிக்கொண்டிராவிடின் வந்துவிடுங் கோபம். வராமலிருக்கும்படி இந்த தேவதையை ஸ்துதி செய்துகொண்டே யிருக்கவேண்டும். ஊர்வலத்திற்கு மோட்டார் இல்லாவிடில், 'ஊர்வலமெதற்கு?' என்பாள். கியாஸ் லைட்டுகளின் பிரகாசத்தோடு வெளிவரும் ஊர்வலத்தில் இந்த மாமியார் நாத்தனார்களைப் பார்க்கவே ஸ்திரீ புருஷர்கள் எங்குங் கூட்டமாய்க் கூடுகின்றார்கள். மாமியார் நடந்து களைத்துவிட்டால் இவளுக்காக ஒரு மோட்டார்கார் காலியாய்ப் பின்னால் தயாராயிருக்கவேண்டியிருக்கிறது. தன் பெண்ணின் விவாக சமயத்தில் தானும் இவ்விதமாகச் செய்யவேண்டி வருமேயென்பதை இவள் அடியோடு மறந்து விடுகி-

றாள். பெண் புருஷன் வீடு சென்று அங்கே ஊழியக்காரி யாவதற்கு முன்னால், மணமகளது தாய் ஆனாரி வேலைக்காரியாகக் கொஞ்நாட்கள் இருக்கவேண்டியுமிருக்கிறது.

தாய் மாதிரியே மகளுமல்லவா? நாத்தனார் வயதிற் குறைந்தவளானதால், இவள் என்ன அவமரியாதையாகப் பேசினாலும், "அவளென்ன குழந்தை தானே" என்று சம்பந்தி அம்மாள் சொல்லிச் சமாதானஞ்செய்யும் பாவனையாயிருப்பாள். விவாகஞ் செய்து முடிப்பதற்குள் பெண் வீட்டாருக்குப் போதும் போதுமென்றாய்விடும். அவமரியாதை, அவமானம், கஷ்டம், பண நஷ்டம், மனச் சங்கடம் இவைகளே பெண் வீட்டாருக்குப் பூரணமாய் நிற்கும்: இதுவா விவாகம்? இதுவா மங்கள காரியம்? இதுவா விவாக மகோத்ஸவம்?

பிரிய சகோதர சகோதரிகாள்! கையிலிருந்த பணமுஞ் செலவழிந்தது. குடியிருந்த வீடும் அடமானம். அநியாயமாயும் அக்கிரமமாயுஞ் செய்து வரும் இக்காரியங்களில் மனதைச் செலுத்தி யோசித்துப் பாருங்கள்! காலத்தை அனுசரித்து, அகம்பாவத்தை யொழித்து, அக்கிரமத்தை அழிக்க வழி தேடுவது நியாயமல்லவா? நான்கு பேர் நம்மைப் பார்த்துச் சிரிப்பதற்கு நாமேன் காரணமாயிருக்கவேண்டும்? பெண்களைப் பெறுவது பாவமே என்று உலகத்திலுள்ளாருக்குப் பறை யடிப்பதை விடுத்துக் கர்ம பந்தத்திற்குள்ளாகாது பிரேம பந்தத்தைக் கைக்கொள்ள இனிமேலாவது ஆரம்பஞ் செய்யுங்கள். இதுவே எனது கடைசி வேண்டுகோள்.

(தொடரும்.)

மார்க்கோ போலோவின் யாத்திரைகள்.

ஸ்ரீமான் S. R. அனந்தநாராயண அய்யர்.

(251-ம் பக்கத் தொடர்ச்சி.)

தார்த்தார்களின் வரலாறு.

தார்த்தாரிய ஸ்திரீகள் உத்தமமான பதிவிரதைகள். விபசாரத்தினும் பெருத்த அவமானம் வேறில்லை யென்பது அவர்களது கொள்கை. ஒரு மனிதன் தான் எத்தனை ஸ்திரீகளை ரக்ஷிக்கக்கூடுமோ அத்தனை பெயரைக் கலியாணம் செய்து கொள்வது கிரமமும் சரியு மென்பதும் இவர்களது கொள்கைதான். ஆயினும், முதற் பெண்சாதிக்குத்தான் பிராதான்னியமும் மற்றையோரினும் உயர்ந்த அந்தஸ்து முண்டு. இத்தனை ஸ்திரீகளும் ஒரே வீட்டில் வெகு அன்னியோன்னியமாய் ஒரு கெட்ட வார்த்தையில்லாமல் சேர்ந்து வாழ்கின்றனர். வியாபாரத்திற்குச் சரக்குகளை ஒழுங்கு படுத்துதல், கொடுக்கல் வாங்கல், தங்களது புருஷன்மாருக்கும் குடும்பத்திற்கும் வேண்டிய சாமான்களைச் சேகரித்தல் ஆகிய இவை யனைத்தையுஞ் செய்வது இந்த ஸ்திரீகளே. புருஷர்கள் இந்த விஷயங்களிற் சிறிதும் தலையிடுவதில்லை. அவர்கள் வேட்டையாடுவதிலும், பட்சிகளை வலையினாற் பிடிப்பதிலும், ஆயுதப் பயிற்சியிலுமே கண்ணாயிருப்பார்கள். அவர்களிடமிருக்கும் வேட்டைப் பட்சிகளும், வேட்டை நாய்களும் உலகத்திலுள்ள மற்றெல்லாவற்றினுஞ் சிறந்தவை.

மாமிசமும் பாலும் வேட்டையில் கிடைக்கும் மிருகங்களுமே இவர்களது ஆகாரம். இவர்கள் குதிரைகளையும், ஒட்டகைகளையும்,

கொழுத்த நாய்களையுந் தின்பார்கள். இவர்கள் குடிப்பது குதிரைப் பால்; அதற்குக் கௌமிஸ் என்று பெயர். பக்குவமான பின் அது வெள்ளைச் சாராயம் போல் இருக்கும்.

இன்னாட்டில் ஒரு மனிதன் இறந்த பின் அவனது மகன் தன் தாய் சகோதரிகள் நீங்கலாகத் தனது தகப்பனது மற்றைய ஸ்திரீகளைக் கலியாணஞ் செய்து கொள்ளலாம். அவ்வாறே ஒரு மனிதன் இறந்த பின் அவனுக்குப் பின்னிருக்கும் அவனது அண்ணன் தம்பிமார் அவனது ஸ்திரீயை மணந்து கொள்ளலாம். கலியாணப் பிள்ளைகள் வரதக்ஷிணைகள் கொள்ளுவது இந்நாட்டில் வழக்கமில்லை. ஆனால், அவர்கள் தங்களது மனைவிமார்களுக்கும் அவர்களது தாய்மாருக்கும் பணம் கொடுப்பதுண்டு. கணக்கற்ற தங்களது மனைவிமாரிடம் தார்த்தார்கள் எண்ணிறந்த குழந்தைகளைப் பெறுகின்றனர். இவ்வாறு குழந்தைகள் அதிகமாக உண்டாவதினால் தார்த்தாரிய ஸ்திரீகளுக்கு ஒருவிதமான பாரமு மிருப்பதாகத் தோற்றவில்லை; ஏனெனில் அவர்கள் படும் பாட்டினால் குடும்பத்திற்கு லாபமேயுண்டாகின்றது. அவர்கள் குடும்பத்தை நடத்துவதிலும் சமையல் செய்வதிலும் வெகு கெட்டிக்காராயிருப்பதுமன்றி, வீட்டு சம்பந்தமான வேறெல்லாக் காரியங்களையும் சரியாகச் செய்து வருகின்றனர்.

தார்த்தார்கள் மந்தை மந்தையாக ஆடுமாடுகளையும் வேறு மிருகங்களையும் மேய்ப்பார்கள். வெய்யிற் காலத்தில், அவர்கள் அம்மந்தைகளுடன் தீனியும் விறகுங் கிடைக்கும் மலைப் பிராந்தியங்களிலும் குளிர்ந்த விடங்களிலும் சஞ்சரிப்பார்கள். குளிர்காலத்தில், தங்களது கன்று காலிகளுக்குத் தீனி கிடைக்கக்கூடிய உஷ்ணப் பிரதேசங்களை நாடி இரண்டு மூன்று மாதம் அலைந்து திரிவார்கள்.

உருண்டை வடிவமான இவர்களது வீட்டுக் கூரைகள் சட்டங்களாலும் கம்பளிகளாலும் மூடப்பட்டிருக்கும். இவர்கள் அவற்றை நான்கு சக்கிரமுள்ள வண்டிகளிலேற்றிக் கொண்டு தாங்கள் செல்லுமிடமெல்லாங் கொண்டு போவார்கள். அக்கூறைகளை மடிக்கவும்விரிக்கவும், ஓரிடத்தில்கூடாரத்தைப்போல் கட்டவும் பிரிக்கவும் கூடும். நிலையில்லாத இக்கூடாரங்களின் வாயில்களை இவர்கள் எப்போதும் தென்முகமாகவே திறந்து வைக்கின்றனர்.

இவர்களிடம் கம்பளிக்கூடுள்ள நேர்த்தியான இரண்டு சக்கர வண்டிகளுமுண்டு. இக்கம்பளிக் கூடுகள் கெட்டியாயிருப்பதனால், அவை மழைத்தண்ணீரினால் ஈரமாவதில்லை; ஆதலால், தார்த்தார்கள் இவைகளில் தங்களது மனைவி மக்களையும் குடும்பத்திற்கு வேண்டிய சகல சமான்களையும் வைத்துக்கொண்டு கெட்ட காற்றையும், மழையையும் பொருட்படுத்தாது சஞ்சரிப்பார்கள். இவ்வண்டிகளை எருதுகளும் ஒட்டகைகளுமே இழுத்துச் செல்லும்.

தார்த்தாரியரில் பணக்காரர்கள் மிருகங்களின் தோல்களாற்செய்யப்பட்ட உடைகளையும் தங்க சரிகை வஸ்திரங்களையும் அணிவார்கள். அவர்களது சாமான்களெல்லாம் விலையுயர்ந்தவையாகவே யிருக்கும். விற்கள், கத்திகள், நீண்ட பிடியுள்ள கோடாரிகள், ஈட்டிகள் ஆகிய இவைகளே அவர்களது ஆயுதங்கள். இளம் பருவமுதற் கொண்டு வில்வித்தையே பயிலுவதினால் அவர்கள் விற்களை யுபயோகிப்பதிற்றான் அதிகச் சமர்த்தர்கள். அவர்கள் தேகவலிவும் சுறுசுறுப்பும் தைரியமுமுள்ளவர்கள்; குரூர சுபாவமும் கொஞ்சமுண்டு. அவசியமான பொழுது இரண்டு நாள் வேண்டுமென்றாலும் ஆயுதங்களணிந்து இரவு பகலாக்

குதிரை சவாரி செய்த வண்ணமாகவே யிருப்பார்கள். அவர்கள் மிகுந்த பொறுமையுள்ளவர்கள்; தங்களது தலைவர்களுக்கு அடங்கினவர்கள். அவர்களது கன்று காலிகளும் தேக வலிவும் பலமுமுள்ளவை.

தார்த்தார்களது மதக்கொள்கைகளாவன:— பரமபதத்தில் எல்லாருக்கும் மேலான கடவுள் ஒருவர் இருக்கிறார். நல்லறிவும் தேகாரோக்கியமும் வேண்டுமென்றால் சுகந்த வஸ்துக்களிட்டுத் தீபங் காட்டி, அவரை வழிபடல் வேண்டும். "நாத்திகே" யென்ற வேறொரு தெய்வமுமுண்டு. இது எல்லார் வீட்டிலுமிருக்கும் ஒரு பிரதிமை; சில வீடுகளில் இதற்கு ஒரு கம்பளி சாத்தியிருப்பார்கள்; இப்பிரதிமைக்கு மனைவி மக்களை உண்டு பண்ணி, மனைவியான பிரதிமையை இடது பக்கத்திலும், குழந்தைப் பிரதிமைகளை எதிரிலும் வைக்கின்றனர்; இதுவே பூலோகத்திலிருக்கும் சராசரங்களைக் காக்கும் தெய்வமாம். இதனாற்றான் தங்களுடைய குழந்தைகளும், கன்றுகாலிகளும், தனதானியங்களும் காப்பாற்றப்படுகின்றனவென்று இந்நாட்டார் நம்புகின்றனர். ஆதலால் இந்தப் பிரதிமைக்கு அதிகமான மரியாதை செய்யப்படுகின்றது. தாங்கள் உண்ணுமுன் இன்னாட்டார் இப்பிரதிமைகளின் வாய்களில் ஊறின மாமிசத்தின் கொழுப்பைத் தடவுவார்கள்; வேறு தெய்வங்களைப் பிரீதி செய்வதற்காகக் குழம்பை வீட்டிற்கு வெளியிற் கொட்டிப் பின்னர் தங்களது தெய்வமும் அதன் குடும்பமும் இவ்வாறு திருப்தியடைந்துவிட்டதென்று பாவித்துத் தங்கள் இஷ்டப்படி உண்டு குடித்துக் களிப்பார்கள்.

ஒரு தார்த்தாரது மகனும் மற்றொருவனது மகளும் விவாகமாகுமுன் ஏககாலத்தில் இறந்து போய்விட்டால், அவர்களின் பெற்றோர்கள் ஒன்று சேர்ந்து, அவர்களுக்கு விவாகச் சடங்குகளைச் செய்து, அவ்வாறு செய்யப்பட்டதை ஒருபத்திரத்திலெழுதிப்பின், வேலைக்காரர்களைப்போன்ற ஸ்திரீ புருஷர்கள், குதிரைகள், இதர மிருகங்கள், ஆடையாபரணங்கள், காகித நாணயங்கள் ஆகிய இவைகளைக் காகிதத்திற் செய்து சாயமேற்றி, மேற்சொல்லிய பத்திரத்துடன் தீயிட்டுக் கொளுத்துவார்கள். அப்போதுண்டாகும் புகையைப் பார்த்து, அதன் வழியே, மேற்சொன்ன சாமான்களெல்லாம் மறு உலகத்தில் விவாகம் செய்யப்பெற்ற தங்களது குழந்தைகளிடம் சேர்ந்துவிட்டனவென்று சொல்லி, அவர்களுக்கு உயிருடனிருக்கையிற் கலியாணம் செய்யப்பட்டாற் போலவே, இக்கலியாணமும் நிறைவேறியதென்று நினைத்துக் கொள்வார்கள்.

தார்த்தார்கள் சண்டைக்குப் புறப்படுகையில், அவர்களது அரசன் கீழ்த்தர அதிகாரம் சரிவர நடந்துவருமாறு பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரம் குதிரைகளுக்குத் தலைவர்களை ஏற்படுத்திக்கொண்டு, சுமார் லக்ஷம் குதிரைகளுடன் புறப்படுவான்.

நூறு குதிரைகளுள்ள ஒரு பிரிவுக்கு 'டுக்' என்றும், பத்துக் குதிரைகளுள்ள பிரிவுக்கு 'டோமன்' என்றும் பெயர். ஓரிடம் விட்டுப் பெயருமுன், தாங்கள் வெறுங் கையராயிருக்கையில் எதிரிகள் தங்களைத் தாக்காமலிருக்கும் பொருட்டு, நாற்புறமும் சாரணர்களை யனுப்புவார்கள். ஒவ்வொரு போர் வீரனிடத்திலும், ஆணும் பெண்ணுமாகச் சுமார் பதினெட்டுக் குதிரைகள் இருக்கும். மழைகாலத்திற் தங்குவதற்காகத் தங்களது கம்பளிக் குடிசைகளையும் கையிற் கொண்டு செல்வார்கள்; அவசரமாக ஓரிடம் போக வேண்டி வந்தால் இவர்கள் பத்து நாட் பரியந்தங்கூட சோறு தண்ணீரின்றிச் சவாரி

செய்வார்கள். அச்சமயங்களில் இவர்கள் சவாரி செய்யுங் குதிரைகளின் இரத்தமே இவர்களது ஜீவாதாரமாம்! இதற்காகக் குதிரையின் தோலைக் கீறி அதிலிருந்து வரும் ரத்தத்தை உறிஞ்சுவார்கள்.

இவர்கள் பாலை அடையாகத் தட்டி வைத்துக்கொள்வார்கள். எப்படி யென்றால், பாலைக் காய்ச்சி அதன்மேல் மிதந்துவரும் ஆடையை வேறொரு பாத்திரத்தில் வைத்துக்கொண்டு வெண்ணெய் எடுப்பார்கள். பின்னும் மிகுந்த பாலை வெயிலில் வைத்துக் காய்ச்சுவார்கள். இதுவே பாலடை. ஒவ்வொரு போர்ச் சேவகனும் இப்பாலடையில் பத்து ராத்தல் கொண்டு செல்வான். பிரதிதினமும் இதில் அரை ராத்தல் எடுத்து, ஒரு பாத்திரத்திலோ அல்லது தோல் புட்டியிலோ போட்டு வேண்டியமட்டும் தண்ணீர் விட்டுக் கலக்கிக் குடிப்பான். இதுவே அவனுக்கு ஒரு வேளைக்குப் போதுமான போஜனமாகிறது.

எதிரிகளைக் கண்டவிடத்து இவர்கள் அம்புகளெய்து கொண்டே வளைந்து வளைந்து சவாரி செய்வார்கள். சில சமயங்களில், அம்புகளெய்த படியே, புறங்கொடுத்தோடுவதுபோல் நடிப்பார்கள். எதிரிகளது அணிவகுப்புக் கலைந்துவிட்டதென்று தெரிந்தவுடன், தங்களது சேனைகளை ஒன்று சேர்த்துக்கொண்டு அவர்களைத் துரத்துவார்கள். இவர்களது குதிரைகள் எந்தப்பக்கம் வேண்டுமென்றாலும், ஒரு கணத்தில் திரும்பும்படி பயிற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. தற்காலத்திய தார்த்தார்கள் வேறு ஜாதியாருடன் கலந்து சீர் கெட்டிருப்பதினால் அவர்களது சம்பிரதாயங்களும் சீர்கெட்டிருக்கின்றன.

அவர்கள் குற்றவாளிகளைத் தண்டிப்பது எப்படி யென்றால்:— அற்ப சாமானைத் திருடியவனுக்கு மரண தண்டனையில்லை. அவனைக் குற்றத்தின் தரம்போல், ஏழு, பதினேழு, இருபத்தேழு, முப்பத்தேழு, நாற்பத்தேழு அடிகள் அடிப்பார்கள். இவ்வாறு நூறு அடிகள்வரை தண்டனைகள் உண்டு. இவ்வாறு அடிப்பதனால் சிலர் இறந்துபோவதுமுண்டு.

ஒரு குதிரையையாவது அல்லது அதைப் போன்ற விலையுயர்ந்த வேறு பொருளையாவது திருடுவோருக்குத் தண்டனை மரண தண்டனைதான்; இத்திருடனைக் கத்தியால் இரண்டாக வெட்டி விடுவார்கள். தான் திருடிய பொருளைப்போல் ஒன்பது பங்கு சாமான்களைக் கொடுத்துவிட்டால் திருடன் உயிர் பிழைத்திருக்கலாம்.

குதிரைகளையும், கன்று காலிகளையும், ஒட்டகைகளையுமுடையவர்கள் அவைகளுக்குத் தங்களது அடையாளங்களாற் சூடுபோட்டுக் காவலாளரில்லாமல் மேய விட்டுவிடுவார்கள்.

காரகோரம் நகரத்தையும் ஆல்டாய் மலையையும் விட்டு முன் சென்றால்பார்குவென்னும் சாராயம் விளையும் நாடு சேர்வோம். அது தென் வடலாக அறுபது நாட் பயண விஸ்தீரண முள்ளது. இப்பிரதேசத்திலிருப்பவர்களுக்கு 'மெடிதீஸ்' என்று பெயர். அவர்கள் சீனச் சக்கரவர்த்திக்குக் கீழ்ப்பட்டவர்கள்; நடையுடைபாவனைகளில் தார்த்தார்களையொத்தவர்கள்; நாகரீகமற்றவர்கள்; வேட்டையில் விசேஷமாகக் கிடைக்கும் மான்களின் மாமிசத்தையும் வேறு மிருகங்களின் மாமிசத்தையுமே புசிப்பவர்கள்.

இவர்களது நாட்டில் மேற் சொல்லிய மான்களே அதிகம். அவைகளை இவர்கள் நன்றாகப் பழக்கிச் சவாரியுஞ் செய்வார்கள். இவர்கள் தானியங்களைப் புசிப்பதுமில்லை, சாராயங் குடிப்பதுமில்லை குளிர்காலத்தில் தின்னுவதற்காக இவர்கள் வெயிற் காலத்தில் துஷ்ட மிருகங்களையும் பட்சிகளையும் வேட்டையாடுவார்கள். இதற்குக் காரணம் குளிர்காலத்தில் பட்சிகளும் மற்ற ஜந்துக்களும் குளிர் பொறுக்க முடியாமல் அந்நாட்டைவிட்டோடிப் போவதுதான்.

மேரிட்ஸ்பர்க் இந்து வாலிபர் சங்கத்திற்கு சகோதரி வி. பாலம்மாள் விடுத்த செய்தி.

"விவேகபாநு."

26—7—25ல் எழுதிய கடிதம் கிடைத்தது. 11—10—25ல் நடக்கவிருக்கும் தங்கள் சபையின் இருபதாம் ஆண்டுத் திருவிழாவில் என்னுடைய செய்தி யொன்றைப் படிக்க விருப்பமுற்றிருப்பதாக எழுதியிருக்கிறீர்கள்.

உயர்ந்த நோக்கத்தையும் ஒப்பற்ற உழைப்பையும் கைக்கொண்டு ஜனசமூக ஊழியத்தைக் கல்வித்துறையில் சிறப்புடன் செய்துகொண்டுவரும் நமது சங்கத்திற்குப் புதிதாக நான் விடுக்கவேண்டிய செய்தி ஒன்று மிருப்பதாகத் தெரியவில்லை. மனித வாழ்க்கைக்கும் சமூக ஊழியத்திற்கும் எவை இன்றியமையாத சாதனங்களாயிருக்கின்றனவோ அவையனைத்தையும் நீங்கள் நன்கறிந்து சமூகத் தொண்டு புரிந்து வருகிறீர்கள். சகோதரர்களே, தங்கள் சங்கத்தின் தலைப்பெயரில் வாலிபர் சங்கம் என்று இருப்பதால் இந்து வாலிபர்களுக்கு மட்டுமே அச்சங்கம் உழைத்து வரக்கூடுமென்று நான் நினைக்கிறேன்.

வாலிபர் என்றால் அவர் யார்? உலக வாழ்க்கையில் இளம் பிராயத்தினர் என்பதே அதன் கருத்தாம். வாலிபர் என்ற பதம் நம்மில் அநேகமாக ஆடவர்கள் பால் உபயோகிக்கப் படுகின்றது. வாலிபர் என்ற பதத்தில் ஆண், பெண் இருபாலும் அடங்கியிருக்கின்றனவா, இல்லையா வென்பதைப்பற்றி நான் தர்க்கம் புரியப்போவதில்லை. வாலிபர் என்ற சொல்லுக்கு ஆடவர்கள் என்றே வைத்துக் கொள்வோம். நமது பூர்வ கிரந்தங்களிலும் மதக்கிரந்தங்களிலும் பொதுப்படையாக உபயோகிக்கப்பட்டிருக்கும் சொற்கள் பெரும்பாலும் ஆண்பாலையே குறிப்பிடுகின்றன. இதனால் அனாதிகாலமாகப் பெண் சமூக முன்னேற்றம் கைவிடப்பட்டிருக்கின்றதென்று நாம் நினைத்து விடல் கூடாது. ஜீவவர்க்கங்களிற் சிறந்த மனித ஜன்மத்தை யடைந்த ஆடவன் தனக்குரிய புருஷார்த்தங்களாகின்ற அறம், பொருள், இன்பம், வீடு அல்லது தர்மார்த்த காமமோக்ஷம் என்ற நான்கு வகைப் புருஷார்த்தங்களடைவதற்குக் கிருகஸ்தாச்சிரமத்தையே மூலாதாரமாகக் கொண்டிருக்கிறான். "இல்லறமல்லது நல்லற மன்று" என்பது தெய்வீகச் சொல்லாம். இவ்வாறு இல்லறத்திலிருந்தே புருஷார்த்தத்தை யடைய வேண்டியவனாகவிருக்கும் ஆடவன் தன்னைப்பற்றி மட்டுமே பலவழிகளிற் பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கிறதென்று நினைப்பது எங்ஙனம் பொருந்தும்? மனிதன் என்றும் ஆடவன் என்றும் சொல்லும் சொற்களிலேயே கிருக தேவதைகளாகின்ற பெண் மக்கள் அடங்கியிருக்கிறார்கள் என்பதே எனது தீர்மானம்.

ஆனது பற்றி இந்து வாலிபர் சங்கம் ஆடவர்களுக்கு மட்டுமன்றிப் பெண்மக்கள்விஷயத்திலும் சிரத்தை யெடுக்கக் கடமைப் பட்டுள்ளதென்பதை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதிலும் சமூக முன்னேற்றத்திற்கும் நன்னடக்கை, அடக்கம், ஒற்றுமை இவைகளுக்கும் முக்கிய ஆதாரமாகவிருக்கும் தாய்மொழியின் அபிவிருத்தியை நாடிப் பல்லாண்டாக உழைத்துவரும் நமது சங்கமானது ஏற்கனவே இந்துப் பெண்களின் கல்வியபிவிருத்தியிலும் சிரத்தை யெடுத்து வந்திருக்

கவும் கூடும். அவ்வாறு இருப்பின் என் சமூகத்தின் அபிவிருத்திக்கும் உழைத்து வரும் வாலிபர் சங்கத்திற்கு என் மனமார்ந்த வந்தன மளிக்கின்றேன். தற்கால நாகரிக தோரணையில் ஜன சமூகம் பெரும்பாலும் மூழ்கிக்கிடக்கும் இத்தருணத்தில் தமிழ் நாட்டிற்கு வெகு துலையில் வசிக்கும் சகோதரர்கள் தமிழ்த் தாயை வளர்ப்பதில் பயபக்தியுடன் சிரத்தையெடுத்துத் தமிழ்க் கல்வியை இலவசமாகப் போதித்துப் புத்தகசாலை மூலமாயும் தமிழ் நூல்களை ஆதரித்துச் சுமார் இருபது வருட காலங்களாகத் தமிழ்க் கல்வியை ஆதரித்து வருகின்றதைக்கேட்டு மனங் குளிராத தமிழ் மக்கள் இரார் என்பது திண்ணம். தமிழ் நாட்டின் நடுவில் வசிக்கும் தமிழர்களுக்குத் தமிழ் மொழியில் அதிக ஆர்வத்தை விளைவிப்பதற்கு நமது இந்த வாலிபர் சங்கம் சிறந்த ஆசானைப்போல் விளங்குகிறதென்ற சொல் மிகைச் சொல் ஆகுமா? தமிழ் மொழியின் வளர்ச்சியில் ஒப்பற்ற ஊக்க மெடுத்துழைக்கும் நமது சங்கத்திற்கு எனது சமூகத்தின் சார்பாகச் சில விஷயங்களை எடுத்துரைத்தல் பொருந்து மென நினைக்கிறேன். அதாவது, தாய் மொழிப் பயிற்சியானது ஆடவர் கல்வித் துறையில் ஒரு அம்சமாகவும் பெண் மக்கட்குரிய படிப்பில் முக்கியமாகவும் ஒரே அம்சமாகவும் இருக்கின்றது. பெண் மக்கள் அதிக காலதாமதமின்றியும் அவசியமாகவும் கற்கக் கூடியது தாய் மொழி ஒன்றே. இளமைப் பருவமிருந்து குடும்பக் காரியங்களில் சிறிதேனும் சம்பந்தப்பட வேண்டியவர்களாகவிருக்கும் பெண்மக்கள் ஆடவர்போலப் பகல் நேரம் முழுவதையும் பாடசாலையிற் கழிக்க முடியாதவர்களாயிருப்பதினாலேயே தற்காலம் பெண் கல்வியானது தலை தூக்காமலிருந்து கொண்டிருக்கிறது. ஆனது பற்றிப் பெண் மக்களின் கல்விப் பயிற்சி நேரத்தைச் சரிவர அமைத்து, அதாவது பகல் இரண்டு மணியிலிருந்து மாலை ஐந்து மணிவரை என்று திட்டப்படுத்தி, கல்வி பயிற்றப்பட வேண்டும். இரண்டாவதாகச் சிறிதளவு தாய் மொழியில் பயிற்சி பெற்றுள்ள பெண் மக்கள் தமக்குள்ள ஓய்வு நேரத்தில் வீட்டிலிருந்தவாறு உயர்ந்த நூல்களைப் படித்தறிந்து கொள்ளுமாறு சிரத்தை எடுக்கவேண்டும். மூன்றாவதாகப் பெண் மக்களுக்கென அடிக்கடி கூட்டங்கள் கூடச் செய்து இயன்றால் பெண்மணிகளையாவது அல்லது கற்றறிந்துள்ள பெரியோர்களையாவது கொண்டு அடிக்கடி நற்போதனைகளைப் போதித்தல் வேண்டும். இம்மூவகையினும் தனது பாடசாலையையும் புத்தக சாலையையும் பெரிய மண்டபத்தையும் நமது வாலிபர் சங்கம் உபயோகப்படுத்தல் அவசியம்.

தேச முன்னேற்றத்திற்குச் சமூக முன்னேற்றமும் பெண்கள் முன்னேற்றமுமே மூல காரணமாயிருக்கின்றன. நம்நாடு நன்னிலையடைய வேண்டுமாயின், நாம் முன்னேற்ற மடைய வேண்டுமாயின், நமது சகோதரிகளுக்குத் தாய்மொழியில் தக்க பயிற்சியை யேற்படுத்தி நமது பெரியோர்களால்இயற்றப்பட்ட சிறந்த நூல்களைப்படிக்கச் செய்தல்அத்தியாவசிய மென்பதை ஞாபகப்படுத்துகிறேன். எந்தப் பெண்பால் பெற்ற தாயாகவும் உடன் பிறந்த சகோதரியாகவும் இல்லக் கிழத்தியாகவும் கிருகத்திற்கு தேவதையாகவும் ஏற்படுகின்றாளோ அந்தப் பெண் சமூகத்தை அனுவசியக் கல்வியும் ஒவ்வாத நாகரிகமும் சிறிதும் அணுகவிடாதபடி முன் ஜாக்கிரதையுமெடுத்து, அவர்களுக்கேற்ற கல்வி போதிப்பதிலும் அவர்களுக்கு இயற்கையாக ஏற்பட்டுள்ள குடும்ப பாரத்தைச் சுமப்பதைத் தமக்குப் பெருமையாக நினைக்கச் செய்வதிலும் அவர்கள் மனங் கசிந்து கண்ணீர் உதிர்க்காது ஆன்ம சாந்தியுடனும் அமைதியுடனும் சிக்கனத்துடனும் காலங்கழிப்பதற்கான நல்லுபதேசங்களாகச் செய்வதிலும் அதிக சிரத்தை எடுக்கவேண்டு மென்பதே நமது இந்த வாலிபர் சங்கத்தின் இருபதாம் ஆண்டுத் திருவிழாவிற்கு நான் விடுக்கும் செய்தியாகும்.

"பொங்கும் மங்களம் எங்கும் தங்குக."

நம்மவரது பழக்க வழக்கங்கள்.

ஸ்ரீமான் எஸ் ஆர். வேங்கிடரமணன், பி. ஏ., பி. எல்.

இப்புண்ணிய பூமியாகிய இந்திய நாட்டில் ஜனித்த ஒவ்வொருவரும் புண்ணியம் செய்தவர்கள் என்று சொல்வது மிகையாகாது. உலக சரித்திரத்திலேயே நாகரிகத்திற்கும், கல்விக்கும், செல்வத்திற்கும், ஜனங்களின் நேர்மைக்கும் நம் நாடு ஒப்புயர்வற்றதாயிருந்தது என்பது பாரத சரித்திரம் படித்தவர் நன்கறிவர். ஆனால் தற்காலத்தில் நமது ராஜீய நிலைமையாகட்டும், மற்றெந்த நிலைமை தானாகட்டும், எல்லாம் மிகவும் பரிதபிக்கக் கூடியதாயிருக்கின்றதென்பதை யாவரும் அறிவர். இந்த நிலைமைக்கு நாம் நம்மையேதான் குறை கூறிக் கொள்ளவேண்டுமே யல்லாது மற்றவர்கள்பால் குற்றம் வைப்பது தகாது.

உதாரணமாக, தற்காலத்திய இந்தியர்களின் தேகஸ்திதி மிகவும் கேவலமாயிருக்கிறது. நாம் நம் முன்னோர்கள் பரம்பரையாகக் கையாண்டுவந்த சில சிரேஷ்டமான பழக்கங்களைக் கைவிட்டு வருவதேதான் இதற்குக் காரணம். நமக்குச் சமயம் கிடைத்த போதெல்லாம் இவற்றைப்பற்றிய விஷயங்களை அடிக்கடி வெளிப்படுத்த உத்தேசம். இப்போது நாம் எண்ணெய் தேய்த்துக் குளித்தல் என்பதை மாத்திரம் கவனிப்போம்.

நம் நாட்டில் இந்த வழக்கத்தைக் கையாளாதவர்கள் கிடையாதென்றே சொல்லலாம். இதைப்பற்றி அநேக வசனங்களும் வழங்கி வருவதை ஜனங்கள் அறிவார்கள். 'வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு' என்றும், 'சனி நீராடு' என்றும் நாம் சொல்லக் கேட்டிருக்கிறோம். நம் நாட்டில் புருஷர்கள் சனி, புதனன்றும், பெண்கள் வெள்ளி, செவ்

வாயன்றும் சாதாரணமாய் எண்ணெய் தேய்த்து ஸ்நாநம் செய்துவருகிறார்கள். மேலும் கலியாண காலங்களிலும், மற்றும் பல விசேஷ சந்தர்ப்பங்களிலும் எண்ணெய் தேய்த்து ஸ்நாநஞ் செய்வது யாவருக்கும் தெரிந்த விஷயம். உதாரணமாக, தீபாவளியன்றும், மற்றும் சில விசேஷ பண்டிகைகளிலும் நாம் எண்ணெய் தேய்த்து ஸ்நாநம் செய்துவருகிறோம். இது நம் நாட்டாருக்குமாத்திரம் உள்ள வழக்கமா, அல்லது உலகத்தில் வேறு தேசத்தார்களும் இப்பழக்கத்தைக் கையாடுகின்றார்களா என்பதைச் சற்று கவனிப்போம்.

சாதாரணமாய் விசேஷ காலங்களில் தலைக்குமாத்திரம் எண்ணெய் தேய்ப்பது இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொரு ஜாதியாருக்கும் பொதுவென்று சொல்லலாம். ஐரோப்பிய சரித்திரங்களில், அரசர்களுக்கு முடி சூட்டப்படும்போது எண்ணெயைத் தலையில் தேய்க்கிறார்கள் என்று வாசித்திருக்கிறோம். இம்மாதிரியே வெவ்வேறு தேசங்களில் ஜனங்கள் விசேஷ சமயங்களில், எண்ணெயைத் தலையில் தடவிக்கொள்ளுகிறார்கள் என்றும் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்போது நாடெங்கும் சகஜமாய் யாவரும் தலைக்கு எண்ணெய் தடவி வாரிவிடுவதும் எல்லாருக்கும் தெரிந்த விஷயமேயாம். ஆனால் எண்ணெயைத் தலைக்கும் உடம்பிற்கும் பிரதிவாரமும் இரண்டு தடவை துடைத்துக்கொண்டு, பிறகு ஸ்நாநம் செய்யும்போது சீயக்காய்ப்பொடியைக் கொண்டு தேய்த்து எண்ணெயைக் கழுவிவிடும் வழக்கம் இந்தியர் ஒருவரிடத்துத் தான் காணப்படுகிறது என்று நமக்குத் தோன்றுகிறது.

இதன் உபயோகமென்ன என்பதைச் சற்று கவனிப்போம். இங்ஙனம் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதனால் நம் உடம்பின் துவாரங்களில் அடைபட்டிருக்கும் அழுக்கெல்லாம் வெளிப்படுதல் காணலாம். இதற்கு அத்தாட்சி என்னவென்றால், சாதாரணமாய், நாம் எண்ணெய் தேய்த்துக் குளித்த பிறகு நம்முடைய உடம்பிலிருந்து ஏராளமான துர்நீர் உடம்பிலுள்ள துவாரங்களின்றும் வெளியாதல் ஒன்றேபோதும். மேலும் உடம்பிற்கு ஒருவிதமான குளிர்ச்சியையும் மிருதுத் தன்மையையும் கொடுப்பதுடன் உடலிலுள்ள சொரி சிரங்கு முதலியவைகளைச் சீக்கிரத்தில் ஆறச்செய்கிறது. மயிர்கள் நிறைந்துள்ள பாகங்களிலுள்ள அழுக்குகளைப் போக்க எண்ணெய் தேய்த்துக் குளியைவிட வேறு சிரேஷ்டமான வகை ஒன்றுமேயில்லை என்று வைத்தியசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். சாதாரணமாய் ஜனங்களுக்குள் ஒரு தப்பபிப்பிராயம் இருந்துவருவதை யாவரும் அறிந்திருக்கலாம். எண்ணெய் தேய்த்துக் குளிப்பதில் என்ன பயன்? தேய்த்த எண்ணெயைச் சீயக்காய்ப் பொடியால் கழுவிவிடுகிறோம். இதனால் எவ்வளவு எண்ணெய்ச் செலவு, எவ்வளவு சிரமம்? என்று ஜனங்கள் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். இது முற்றிலும் தப்பு. தீராவியாதி என்று கைவிடப்படும் வியாதிகளெல்லாம் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதால் குணமடைகின்றன. வைத்தியர்கள் வியாதியஸ்தர்களுக்கு மூலிகைகளைப் போட்டுத் தைலம் காய்ச்சிக்கொடுப்பதின் காரணம் மற்றென்னவாயிருக்கக்கூடும். நாம் தேய்த்துக் குளிக்கும் எண்ணெயில் சிறிது பாகம் வீணாய்ப் போனாலும், பெரும்பாகம் நமது தேகத்திற்குள் புகுந்து நமக்கு சுகத்தையும் வேறு அனுகூலங்களையும் செய்கின்றதென்பதில் கொஞ்சமும் சந்தேகங்கிடையாது. நமது உடம்பின் ஒவ்வொரு பாகத்திற்கும் சம்பந்தம் உண்டு என்பதை யாவருமறிவர். உதாரணமாக மூக்கு, வாய், கண், காது இவை எல்லாவற்றிற்கும் ஒன்றுக்கொன்று சம்பந்தமுண்டு. காதில் விட்ட எண்ணெய் நம் கண்

களிலும் மூக்கிலும் பார்க்கலாம். சாதாரணமாய்ப் பொடி போடுபவர்கள், ஜாஸ்திப்பொடி போட்டுவிட்டால் அது அவர்கள் எச்சில் துப்பும்போது வாய்வழியாக வந்துவிடுகிறது. இதனால் நாம் தேய்த்துக்கொள்ளும் எண்ணெயானது ஒரு துவாரத்தின் வழியாகச் செல்லின், அங்கிருந்துமற்றவைகளுக்குச் செல்லுகின்றது என்பது நன்கு வெளியாகிறது. ஆகவே இம்மாதிரி நாம் தேய்த்துக்கொள்ளும் எண்ணெய், எஞ்சினுடைய பாகங்களுக்கு எண்ணெய் போடுவதுபோல், ஒவ்வொரு பாகத்திற்கும் சென்று, அவற்றைச் சீரான நிலைமையிலிருக்கும்படி செய்கின்றது.

மேலும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதில் நமது உடம்பிலுள்ள நரம்புகளுக்கு ஏராளமான அனுகூலமுண்டு. சாதாரணமாய், எண்ணெய் தேய்த்துக் குளித்த பிறகு கடினமான வேலை ஒன்றும் செய்யக்கூடாது, ஏனென்றால் வேலைசெய்து களைத்துச் சோர்வடைந்த நரம்புகளுக்கு, எண்ணெய் தேய்த்துக் குளித்த பிறகு கடினமான வேலையைக் கொடுக்கக் கூடாது. அவைகளுக்கும் ஓய்வுநேரம் வேண்டும். மேலும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதில் நாம் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுளது. அது என்னவெனில் நாம் 5, 10 நிமிஷத்தில் எண்ணெய் தேய்த்துக் குளித்துவிடுகிறோம். இது சரியல்ல நமது பெரியோர்கள் சாதாரணமாய்ச் சனி, புதனன்று எண்ணெயை விடியற்காலமேயே மிளகு, வெள்ளைப்பூண்டு, சித்தகத்திப்பூ, மிளகாய், தென்னைவேர் போன்றவைகளைப் போட்டுக் காய்ச்சி, தலைக்குத் தேய்த்துக்கொண்டு அரைமணி முதல் ஒரு மணிவரை தாமதித்துப் பிறகு உடம்பிற்குத் தேய்த்துக்கொண்டு ஸ்நாநம் செய்து கொள்ளுவார்கள். அப்போது உள்ளங்கால், நகக்கண்கள், கண், காது, மூக்கு, தொப்புள் குழி, உள்ளங்கை இவற்றிற் கெல்லாம் எண்ணெயை விட்டும், தேய்த்தும் உள்ளே செலுத்துவதை நான் பார்த்திருக்கிறேன். இதனால் அவர்கள் விருத்தாப்பிய காலம்வரை கண் திருஷ்டி குறையாமலும் தற்காலத்து நாகரிகத்தின் ஒரு அம்சமாகிய மூக்குக்கண்ணாடி யணியாமலும் தமது வாழ்நாளைச் சுகமே கழித்து வருகின்றனர். தற்காலத்தில் 5 வயதிற்குள் ஒன்றறை இஞ்சு கனமுள்ள கண்ணாடி ஒவ்வொரு வாலிபனின் முகத்தை அலங்கரிப்பதைப் பார்க்கலாம். இது நிஜமான கண் திருஷ்டிக் குறையை நிவர்த்திக்கவோ, அல்லது நேரான திருஷ்டியைக் குறைத்துக்கொள்ளவோ நாமறியோம். இதற்கெல்லாம் காரணம் நாம் சரியானபடி நமது உடம்பின் க்ஷேமத்தைக் கோராமல் எண்ணெய் தேய்த்துக் குளியாமலிருப்பதுதான் காரணம்.

எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்கு ஏற்ற காலம் விடியற்காலந்தான். சூரியன் உதயமாவதற்கு முன் குளிக்கவேண்டும். அதனால் உண்டாகும் குணங்களைப் பற்றி வைத்தியர்கள் வெகுவாய்ச் சொல்லுகின்றனர். குளித்ததும் மழைஈரத்திலும் நன்றாகக் காயும் வெய்யிலிலும் அலையக்கூடாது. குளித்த தினத்தில் பகலிற் தூங்கவும் கூடாது என்பார்கள். தூங்கினால் உடம்பில் மந்தத்தனம் அதிகரித்து நாம்புகளும் மந்தத்தையடைந்து விடுகின்றன.

சரியாய் எண்ணெய் தேய்த்து ஸ்நாநம் செய்துவந்தால், தலையில் சிக்கு, பேன் தொந்தரவு முதலியவை யிரா. சிக்கு, பேன், சொரி சிரங்கு இவையெல்லாம் அழுக்கு நிறைந்தவர்கள் தலையிலும், எண்ணெய் தடவாதவர்கள் தலையிலுமே அதிகம் எனச்சொல்லுகிறார்கள். ஆனால் தற்காலத்தில் தாய்மார்கள் தங்களது குழந்தைகளின் தேகஸ்திதியைப் பற்றிப்

போதுமான அளவு கவனம் செலுத்துவதில்லை என்று தெரிகிறது. சாதாரணமாய்ப் பள்ளிக்குச் செல்லும் மாணவர்களில் நூற்றுக்கு 10 அல்லது 20 பேர்கள் தான் தலைக்கு எண்ணெய் தடவி வாரிக்கொண்டுசெல்லுகின்றனர். பெண் குழந்தைகள் இவ்விஷயத்தில் ஆண் குழந்தைகளைவிட அதிக மேம்பாடடைந்திருக்கிறார்கள். இங்ஙனம் கிரமமாய்ப் பிரதிதினமும் எண்ணெய் தடவிக்கோதினால் தலையிற் சொரி, சிரங்கு, பேன் இவை ஒன்றும் வாராது வாரத்திற் கிரண்டு முறை கட்டாயமாய் எண்ணெய் தேய்த்துத் தவராமல் குளித்துவந்தால் நம்மிடத்தில் ஒரு நோயும் அணுகாது.

தலைமயிரை ஜாக்கிரதையாய்ப் பாதுகாக்க அன்னிய நாட்டார் என்ன செய்துவருகிறார்களென்று கவனிப்போம்.

ஆஸ்திரேலியாவில் சில ஜாதியார்களும் அண்டமான் தீவிலுள்ளவர்களும் தமது தலையிலுள்ள பேனைப்போக்க நல்ல குளிர்ந்த களிமண்ணை அப்பிக்கொள்வார்களாம். மேலும் ஸ்பார்ட்டா (Sparta) தேசத்து வாலிபர்கள் இப்பேன்களுக்காகப் பயந்து தலையில் எண்ணெய் தடவிக்கொண்ட பிறகே போர்க்களத்திற் பிரவேசிப்பார்களாம். இன்னும் மற்ற தேசத்தவர்களின் பழக்க வழக்கங்களை ஆராய்ந்து பார்த்தால், எண்ணெய் தேய்த்துக் குளிப்பதனாலும் எண்ணெயைத் தலைக்குத் தடவிக் கோதுவதினாலும் உண்டாகும் நன்மை இத்தன்மையது என்று விளங்கும்.

ஆனால் தற்காலத்தில் இப்பழக்கத்தைத் தொலைக்க மேனாட்டிலிருந்துசோப்புப் பிராட்டியார் வந்திருக்கிறார். தற்காலத்தில் அந்த அம்மையாரை வரவேற்காத வீடு கிடையாது. படிக்கத் தெரிந்தவர்களும் தெரியாதவர்களும் பணக்காரர்களும் ஏழைகளும் இந்த விஷயத்தில் ஒருவர்க்கொருவர் சமானமானவர்கள் என்று சொல்லலாம். பெண்கள் சாயங்காலம் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளும்போது பியர்ஸ், குடிகுரா, வினோலியா முதலியவைகளின் குணகுணங்களைப் பேசித் தங்களது இஷ்ட தேவதையின் சிரேஷ்டத்தையும் பற்றி நிஜமாகவேப் பிரசங்கம்செய்கிறார்கள். என்னே! தற்கால இந்தியரின் பேதமை! இதற்கெல்லாம் ஆடவர்களைத் நான் நாம் குறை கூறவேண்டுமேயல்லாது பிறரை நோவதிற் பயனில்லை. சோப்புகளை உபயோகிப்பதனால் அநேகம் கெடுதிகள் உண்டாயிருக்கின்றனவென்று ஐரோப்பிய டாக்டர்களே சொல்லுகிறார்கள் என்றால் நாம் அவற்றைப்பற்றி இங்கே எடுத்துரைக்க வேண்டியதில்லை.

எண்ணெய் தேய்த்துக் குளிப்பதனால் நமது தலை எப்பொழுதும் குளிர்ச்சியாகவே யிருக்கிறது. தலைவலி, சளி, இருமல் முதலியவை யாவும் சரியாய் எண்ணெய் தேய்த்துக் குளிப்பவர்களுக்குக் கிடையாது. மேலும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பது மயிரின் வளர்ச்சிக்கு மிகவும் அனுகூலமானது. இந்த விஷயத்தில் மலையாளிகள் மிகவும் கவனஞ்செலுத்துகிறார்கள். சென்னை ராஜதானியில் மற்றெல்லா ஜனங்களை விட மலையாளிகளின் கூந்தல் அதிக நீளமாயும், பார்ப்பதற்கு கரும வண்டு போன்ற நிறத்தையு முடையதாயிருக்கின்றது. இதற்குக் காரணம் அவர்கள் கிரமமாய் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதே.

மேற் கூறிய காரணங்களால், நாம் நம்முடைய பழக்க வழக்கங்களை மேன்மேலும் ஆதரிக்க வேண்டுமென்பது நிதர்சனமாகும். நமது நாட்டின் நாகரிகம் ஓங்கவேண்டின் நமது நல்ல வழக்கங்களைக் கைவிடக்கூடாது. நமது முன்னோர்கள் கைக்கொண்ட பழக்க வழக்கங்களில் நாம் அநேகம் நல்ல குணங்களையெல்லாம் கைவிட்டுவிட்டு மேனாட்டு வழக்கங்களில் மோகங் கொண்டிருக்கிறோம். இவை நம் நாட்டிற்கும் தேகத்தின் நன்மைக்கும் ஆகாது என்பதை அனுபவத்தில் அநேகர் கண்டறிந்திருப்பதால், நாம் அவர்களுடைய அனுபவத்தைக் கொண்டு, மறுபடியும் அத்தப்பிதத்தைச் செய்யாமல் நல்ல வழியில் நமது ஆசாரத்தைக் கைப்பிடித்து நடப்போமாக.

பாட்டியம்மாளின் சமூக ஊழியம்.

(ஸ்ரீமதி அன்னபூரணி.)

"பாட்டி, நமஸ்காரம், உங்களைப் பார்த்து ரொம்ப நாளாயிற்று, பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன். தங்களுடைய தரிசனம் எனக்கு அதிக நாளாய்க் கிடைக்க சந்தர்ப்பமில்லாமலே போய்விட்டது. நான் வடக்கேயே கொஞ்ச நாளாய் வசித்துக் கொண்டிருந்தேன். சென்னை வந்ததும், தங்களைப்பற்றி விசாரித்தேன். தாங்கள் இவ்விடம் வந்திருப்பதாகத் தெரிந்து, இது ஒரு முக்கியமான க்ஷேத்திரமானதால், ஸ்வாமி தரிசனமும் உங்களைப் போலுள்ள பெரியவர்களுடைய தரிசனமும் கிடைக்குமென்றே ஆவலுடன் வந்தேன்" என்று லக்ஷ்மி சொன்னாள்,

பாட்டி:—உன்னைப் பார்க்க எனக்கு நிரம்ப சந்தோஷம். ஆனால் நீ போன விடங்களில் விசேஷமான கோவில்கள் கிடையாதோ என்னமோ?

லக்ஷ்மி:—அநேக மிருக்கின்றன. இது நம் சொந்த நாடல்லவா? தன் பாஷை, தன் ஊர் என்று சொல்லும் பொழுதே ஆனந்தம் உண்டாகிற தல்லவா? தேச பக்தரும் ஞானியுமான பாரதி அவர்களும் "செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்று பாடியிருக்கிறார். அதிலும் சோள தேசம் போல் எங்கும் கோவில்கள் கிடையாதல்லவா, பாட்டி.

பாட்டி:—ஆம், நீ சொல்வதெல்லாம் நிஜந்தான். இப்பொழுது எல்லாக் கோவில்களும் பாழடைந்து கிடக்கின்றன. எனக்கு வெகு நாளாய் ஒரு யோசனை மனதில் ஊறிக் கொண்டே யிருந்தது. அதை இப்பொழுது செய்யத் தொடங்கியிருக்கிறேன். அதாவது ஏன் என் போன்ற வயது சென்ற ஸ்திரீகளெல்லாம் கோவில்களின் முக்கியமான திருப்பணிகளைச் செய்யக் கூடாது என்பது தான். உதாரணமாய், இந்த ஊர்க் கோவிலை எடுத்துக்கொள், நான் வரும் பொழுது அதின் சீர் கேட்டைச் சொல்லும்படியாயில்லை. 'பாட்டி வந்த பிறகு நிரம்ப ஒழுங்கும் சுத்தமுமாய் விட்டது' என்று இங்குள்ளவர்கள் சொல்லுகிறார்கள். மனிதர்களே இல்லாமற் போன கிராமங்களில் கோவில்கள் பாழடைந்து விட்டது என்று சொல்ல ஒருவித நியாயமுண்டு. இவ்விடத்திலோ 200 வீடுகள் வரை இருக்கின்றன. இங்குள்ளவர்களின் அசிரத்தை தான் இதற்குக் காரணம். பிராகாரங்களில் புற்பூண்டு முளைத்து நடக்க முடியாமலிருப்பதுடன் ஜனங்களுக்கு மலஜலம் கழிக்கும் இடமாக வல்லவோ இருக்கிறது. என்ன அநியாயம், இதைச் சொல்லவே என் மனம் நடுங்குகிறது. நான் பார்த்தபொழுது என் மனம் பட்டபாடு அக்கோவிலிலிருக்கும் கடவுளுக்கே தெரியும். இது நம் கடமை என்று எண்ணி வீட்டுக்கு வந்தேன். அது முதல் என்னால் ஆன முயற்சி எடுத்துக் கொண்டு ஊரிலுள்ளவர்களிடம் சொல்லிக் கூடியவரையில் அவர்களையும் கவனிக்கச் செய்து வந்தேன். அநேகமாய் ஒழுங்கான நிலைமைக்கு வந்து விட்டது. நல்ல பக்திப் பிரசங்கங்களும் அடிக்கடி நடை பெறுகின்றன.

லக்ஷ்மி:—இம்மாதிரி அநேகம் பாட்டிகள் சுகா[illegible]ளுக்கு முன் வந்து விட்டால்,

207605

சுயராஜ்யக் கட்சிக்காரர்கள் முனிசிபல் எலக்ஷனுக்கு நிற்கும் சிரமம் குறையுமென்று நினைக்கிறேன்.

பாட்டி:—அது இப்பொழுது நாம் கவனிக்க வேண்டிய வேலையுமில்லை. ஒரு விஷயத்திலும் அவசரமும் கூடாது. ஏற்கனவே வீட்டைச் சுத்தமாய் வைத்துச்சாமான்களை ஒழுங்காய் வைப்பதில் ஸ்திரீகள் அக்கறையுள்ளவர்கள் என்று சொல்ல வேண்டியதில்லை. அதுபோல் சம்சாரத்திற்குச் சரியான வார்சு வந்து ஓய்வு உள்ளவர்கள் ஊரின் சுத்தத்தைக் கவனிக்கலாமல்லவா? அதனால் அநேக வியாதிகளும் குறைந்து நமக்கு க்ஷேமந்தானே உண்டாகும். தாத்தாவுக்குப் பென்ஷன் ஆனால் ஊர் வேலை செய்யப் போவதாக ஆடம்பரமாய் சொல்லிக் கொண்டுபுறப்படுகிறார். பாட்டியும் சொல்லாமலே முடிந்ததை செய்யக் கூடாதா? மேல் நாட்டாரிடம் உபயோகமற்றதை, அதாவது நமக்கு வேண்டாததை, எடுத்துக் கொள்ளுகிறோம். மேற்படி ஊர்களில் அவர்கள் வீடு வாசல் கோவிலெல்லாம் நிரம்ப சுத்தமென்று கேள்விப்படுகிறோம். எந்த வேலைக்கும் சமத்துவமும் ஒற்றுமையும்தான் அடிப்படை.

லக்ஷ்மி:—நீங்கள் இந்த ஊருக்கு வந்ததும் உங்களுக்கு யாதொரு துணையுமில்லாமல் தைரியமாய் இவ்வேலையிலிறங்கினது ஆச்சரியம்தான்.

பாட்டி:—இது என்ன ஆச்சரியம்? நம்தேசத்து ஸ்திரீகளுக் கென்ன தைரியம் குறைச்சலென்று நினைக்கிறாய். உற்சவ நாட்களில் கூட்டம் கணக்கில்லாமலிருக்கும் பொழுது பாட்டிகள் போலீஸ் தடிகூட நுழையாத இடங்களிற் போய் சுவாமி தரிசனம் செய்வதைக்கண்ணாரக் கண்டிருக்கிறேன். அநேக புருஷர்கள் மேல்இடித்து விழுந்து போனாலும் இது கடமை யென்று கருதுவார்கள். ஏதாவது அநியாயத்தைக் கண்டு அன்னியர்களிடம் சொன்னால் 'என்ன தைரியம் அவளுக்கு;புருஷாள் பாடு நமக்கேன் என்று சும்மா யிருக்கக் கூடாதோ' என்பார்கள்.

லக்ஷ்மி:—நீங்கள் சொல்லுவது யதார்த்தம் தான், பாட்டி. வைத்தியன் வந்து உடம்பு அசௌக்கியமாயிருக்கும்பொழுது மருந்து கொடுக்க விவாம் கேட்டால் புருஷாளில்லை, என்னமாய் பேசுகிறதென்று சில ஸ்திரீகள் சும்மா விருப்பதை நானும் கண்டிருக்கிறேன். பாட்டியின் புத்திதான் எல்லாருக்கும் வேண்டும்.

பாட்டி:—ஒரு அதிசயம் கேட்கிறாயா? நான் இங்கு வந்ததும் திண்ணையில் உட்கார்ந்து ஏதாவது படித்துக் கொண்டிருப்பது வழக்கம். அச்சமயம் தெருவில் போகிறவர்களுக்கு நான் ஒரு கண் காட்சியாயிருந்தேன்.

லக்ஷ்மி:—அதென்ன பாட்டி? பாட்டியாவது கண் காட்சியாவது? எனக்குப் புரியவில்லையே.

பாட்டி:—நம் தேசத்தில் சாதாரணமாய் விதந்துவான ஸ்திரீகள் முண்டனம் செய்து கொள்வது நிரம்ப சகஜம். அதிலும் யோசிக்கிறவர்கள் கொஞ்சம் தயங்கினாலும் அது சாஸ்திரம், இப்படியிருக்கக் கூடாது என்று சொல்லி அவர்கள் மனதைக் கலைக்கத் தயாராயிருப்பவர்களும் நிரம்ப உண்டு. என்னைப் பார்ப்பதோடு நில்லாமல் "என் பாட்டி, நரைத்த தலைக்குப் பூவைத்துக் கொள்ள வேண்டுமா? எதற்கு உமக்கு இந்த வேஷம்? நீரே சாஸ்திர மெல்லாம் படிக்கிறீரே. இப்படியிருக்கச் சொல்லியிருக்கிறதோ?" என்று ஒருத்தி கேட்டால் பக்கத்திலுள்ளவள் காசிக்குப் போகவேண்டுமோ என்னமோ வென்பாள். அதற்கு நான் "அம்மா நான் காசிக்கு மூன்று தடவை போய் வந்து விட்டேன். முடி கொடுக்கிறேனென்று நான் பிரார்த்தனை செய்துகொள்ளவில்லை" என்று அவர்களுக்குப் பதிலும் சொல்லும்படி நேருகிறது.

லக்ஷ்மி:—மூக்கரையன் தன்னைப் போலாக்கிய கதை தான்; எக்காரியம் செய்யப் போனாலும் தனியாயிருந்து ஜயிப்பது நிரம்ப சிரமம் தான்.

பாட்டி:—அது போகட்டும். பிறகு என் வேலையைத் தொடங்கினேன். இவ்வூர்க் குழந்தைகளுக்குத் தெருவே ஸ்கூல் ஆக இருந்தது. பாவம், அதுகள் என்ன செய்யும்! பெரியவர்கள் குழந்தைகளுக்கு வீட்டிற்குப் பின்புறத்தில் பிரத்தியேகமான இடம் ஏற்படுத்தி அவர்களை வழக்கப்படுத்தியிருந்தால், தெருவில் வந்து உட்காரத்துணியுமா? இது யார் பிசகு? பிறகு ஒவ்வொரு வீடாய் நுழைந்து பெரியவர்களுக்குக் கட்டாயப்படுத்திச் சொல்லி அவ்வழக்கம் அறவே ஒழிய நிரம்ப சிரமப்பட்டேன். அதில் ஒரு படித்த மனிதன் "பாட்டிக்கு வேறு வேலையில்லை. எங்கள் வீட்டில் நாங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுகிறோம். உங்கள் வீட்டை நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னான். இவன் என்ன படிப்புப்படித்தான்? எதற்குப் படித்தான்? என்று வருந்தினேன். தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுகிற படிப்பு இவர்களுக்கு இனிமேல் வர வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டேன். பக்கத்து வீட்டில் தையற்காரன் வந்த போதெல்லாம் இரைச்சலும் சண்டையுமாயிருக்கும். அதை ஒரு நாள் விசாரிக்கப் போனேன். இரண்டு பேர் அக்காள் தங்கை. ஒவ்வொருவரின் அபிப்பிராயம் ஒரு மாதிரி. தையற்காரனுக்கு இது சரியாய் விளங்காமல் தன் மனம் போல் தைத்துக்கொண்டு வருவான். சின்னவளுக்கு நாகரிகம் அதிகம். ஜாக்கெட் போல் உடம்பு. குடம் போல் கை என்று வர்ணிப்பாள். பெரியவள் சாதா ரவிக்கை. அளவு சின்னதாகவும் துணியைச் சேதம் பண்ணுமலும் இரு என்று செல்லுவாள். அவன் இரண்டையும் ஒரு மாதிரியாய்க் கொண்டு வந்தால் வீட்டில் சண்டை தான். தையற்காரன் பிழைப்புக் கெட்டாலும் பரவாயில்லை என்று அவர்களுக்குப் புத்தி சொன்னேன். 'உங்கள் அபிப்பிராயம் உங்கள் மனதிலுள்ளது போல் கையிலும் வருமே? ஏன் பிறரைத் தொந்தரவு செய்கிறீர்கள்? இந்தக் கிராமத்திலுள்ள ஒவ்வொருவரும் அவரவர்கள் உடம்பு மூடியை அவர்களே தைத்துக் கொள்ளவேண்டியது. தெரியாதவர்களுக்குத் தெரிந்தவர்கள் உதவி செய்யவேண்டியது. அப்படியும் முடியாதவர்கள் என்னிடம் வந்தால் நான் வேண்டியதை செய்கிறேன்" என்று எல்லாரிடமும் சொன்னேன். இவ்வூரிலுள்ளவர்களுக்கு வழி தெரியாததைத் தவிர ஒத்து வருவதில், அதிலும் ஸ்திரீகள், நிரம்ப சமர்த்தர்கள். போதுமான படிப்பில்லாததுதான் இதற்குக் காரணம்.

லக்ஷ்மி:—உங்கள் காலத்திலே ரவிக்கை தைக்கத்தெரியுமா, பாட்டி? இப்பொழுதுமிஷினை, அதாவது யந்திரத்தை, வைத்துக்கொண்டு தைக்கிறார்கள். இல்லாதவர்கள் 'சோம்பலாயிருக்கு. யார் உட்கார்ந்து கொண்டு தைப்பார்கள்' என்று தையற்காரனிடம் கொடுத்து விடுகிறார்கள்.

பாட்டி:—ஏன், பள்ளிக்கூடத்தில் கூடக்கற்றுக் கொடுக்கிறார்களே? வேண்டாததைச்செய்வது தான் தொழிலாய் விட்டது. லேஸ் பின்னுதவள் யார்? இதனால் என்ன பிரயோஜனம்? ஏழைகளுக்கு ரவிக்கையைப்போல் அது அவசியமோ? இவ்வூர் முழுதும் தேடினாலும் சீமைத் துணி ரவிக்கையோ மிஷின் தையலோ தற்சமயம் உன்னால் கண்டுபிடிக்க முடியாது. எல்லாம் தெரியுமென்பவர்களும் வேண்டியதைச் செய்து கொள்ளத் தவறி விடுவது சகஜம் தான். மாகாத்மா காந்தி 'கதர், கதர்' என்பதுபோல் நல்லதை நினைப்புமூட்ட ஒரு பெரியவர்கள் வேண்டும்.

லக்ஷ்மி:—பாட்டிக்கு இங்கும் போதுமான வேலையிருந்து கொண்டே தானிருக்கிறது.

பாட்டி:—சும்மா யிருக்க யாரால் முடியும்? மனதிற்கு ஆனந்தமானது வேலை. யாரொருவர் சும்மா யிருக்கிறார்களோ அநேகமாய் அவர்களுக்கு மனதோ உடம்போ சமாதானத்திலிருப்பதில்லை. நமது புராணங்களிலும் கர்மயோகியை விசேஷமாய் சிலாகித்திருக்கிறார்கள் இவ்வூரிலுள்ளவர்களுக்கும் புரியும் தருணம் வந்திருப்பதால் மேற்படி விஷயங்களை வீடு வீடாய்ப் போய்ச் சொல்லுகிறேன்.

லக்ஷ்மி:—கிறிஸ்தவர்கள் வீடு வீடாய்ப் போய்த் தங்கள் மதப்பிரசாரம் செய்வது போல் நாமும் நமக்கு வேண்டியவைகளைச் செய்யத் தூண்டவேண்டும்.

பாட்டி:—இது மட்டுமா? சுயபாஷையாகிய தமிழை அவமதித்துப் பிறபாஷையாகிய இங்கிலீஷையும் இந்நாளிற் கொண்டாடுகிறார்கள். அதுவும் நல்லது தான். எதிர் வீட்டுப் பெண் பட்டணத்திலிருந்து வந்திருக்கிறாள். நான் அன்று போயிருக்கும்பொழுது அவள் தாயார் 'சதா ஏன் இங்கிலீஷ் நாவல்கள் படிக்கிறாய்' என்று பெண்ணை கண்டித்ததற்கு ஆனால் தமிழில் ஒன்றுமே யில்லை. 'இங்கிலீஷில் உள்ளதுபோல் அவ்வளவு நல்ல புஸ்தகங்கள் தமிழில்கிடையாது' என்று அவள் மறுமொழி பகர்ந்ததைக் கேட்டு, வருத்தத்துடன் வீட்டிற்கு வந்தேன். உடனே பட்டணத்திற்கு எழுதி ராஜமய்யர் எழுதிய கமலாம்பாள் சரித்திரம், மாதவய்யர் எழுதிய பத்மாவதி, விஜயமார்த்தாண்டம், நடேச சாஸ்திரி எழுதிய தீனதயாளு, சகோதரி பாலம்மாள் எழுதிய திலகவதி இவை போன்ற அநேக பண்டிதர்களின் பழைய புஸ்தகங்களை வரவழைத்து வைத்திருக்கிறேன். எதிர் வீட்டுப் பெண் இவைகளைப் படித்துவிட்டு, 'இவ்வளவு நல்ல நாவல்கள் தமிழிலு மிருக்கின்றனவா' என்று ஆச்சரியப்பட்டாள். தனக்குத் தெரியாததனால் அன்று தன் தாய்க்கு அவ்விதம் பதிற் சொன்னதாக அவள் வருத்தமும்பட்டாள்.

லக்ஷ்மி:— பாட்டி, சதா படித்தவண்ணமாயிருப்பதால் உங்களுக்கு எதுவும் தோன்றுகிறது. எங்களைப் போலுள்ளவர்களுக்கு முயற்சி வந்தால் நல்லது.

பாட்டி:— என்ன படிப்பு? ஏதோ தாயுமானவர், கீதை இதுகளைப் படித்துப் பொழுது போக்குவேன். தற்காலம் ஸ்திரீகள் திடகாத்திர மாயில்லாததுதான் எனக்கு ஒரு பெரிய கவலை.

லக்ஷ்மி :—அதற்கென்ன பரிகாரம்?

பாட்டி;— நிலையான காரணம் தெரிந்தாலல்லவா பரிகாரம் சொல்ல வழியாவது தேடலாம். அவரவர்கள் அறிவு பெருகுவதே அதற்கு நல்ல தருணம். கல்வியும் கடவுளிடம் நம்பிக்கையும் உண்டாவதே சகலத்திற்கும்

பரிகாசம். தற்கால ஸ்திரீகளோ கண்ணிற் கண்டதை, காதால் கேட்டதைச்செய்ய வெகு நுட்ப புத்தியுடையவர்கள். அவர்களுக்கு வேண்டியதெல்லாம் கொஞ்சம் ஆழ்ந்த யோசனையும் மனசாட்சியுந்தான்.

லக்ஷ்மி:— பாட்டிக்கு வயது 70 க்கு மேலாயிருப்பதால் தங்களுடைய அனுபவத்திலுள்ளபடி எவ்விதமான புத்தியும் எங்கள் போன்றவர்களுக்குத் தாங்கள் சொல்ல வேண்டியவர்களே.

பாட்டி:— நீ நல்ல பெண். ஏதோ பாட்டியைப் பார்க்க வந்தாயே என்று வேடிக்கையாய்ச் சில விஷயம் சொன்னேன். இது ஒரு புத்தியா?

லக்ஷ்மி:—உங்களைப் போன்ற பாட்டியை நான் எங்கும் பார்த்ததில்லை. பாட்டியம்மாளின் யோசனையை என் சகோதரிகளுக்கும் சொல்லும்பொருட்டுச் சிந்தாமணிக்கு எழுதுகிறேன். எல்லாரும் தங்களின் ஆசீர்வாதம் பெறட்டும்.

பாட்டி:— சிந்தாமணியா! அது என்ன புத்தகம்? யார் எழுதியது?

"சிந்தாமணி என்பது சகோதரி வி. பாலம்மாளால் நந் தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றங் கருதி வெளியிடப்படும் தமிழ் மாதப்பத்திரிகை. அதுபற்றி நாளைப் பேசுவோம்" என்று கூறி லக்ஷ்மி தன் வீடு சென்றாள்.

எதற்காக மானிட ஜன்மம் எடுத்தோம்?

(ஸ்ரீமதி மைதிலீ.)

வாசகர்களே! நான் எழுதத் தொடங்கியுள்ள விஷயத்தைச் சிறிது கவனமாகப் படிப்பீர்களென்று நம்புகிறேன். அதாவது, நம்மை ஏன் கடவுள் சிருஷ்டி செய்தார்? நமக்கும் மற்றப் பிராணிகளுக்கும் என்ன வித்தியாசம்? என்னும் இவ்விரண்டு கேள்விகளைப்பற்றி சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

என்னுடைய முதற் கேள்விக்கு எளிதில் பதிலுரைக்கலாம். லீலா நாடக சூத்திரதாரியான பகவான் சகலத்தையும் விளையாட்டாக உற்பத்தி செய்தும் நாசம் செய்தும் பொழுதை போக்குகிறார் என்று சொல்லி விடலாம். இது சகலரும் அறிந்த விஷயமே. மற்றும் அவரவர்கள் பூர்வ ஜன்மத்திற் செய்த பாப அல்லது புண்ணிய கர்மத்தின் விசேஷத்தால் இந்த ஜன்மத்தில் சுகதுக்கங்களை அனுபவிக்கிறார்கள் என்பது நமது இந்து மதக் கொள்கை.

இனி நமக்கும் மற்றப் பிராணிகளுக்கும் என்ன வித்தியாசம் என்பதைப்பற்றிக் கவனிப்போம். அகண்டாகாரமான பிரும்ம சொரூபமானது சகலஜீவராசிகளிலும் நிறைந்திருக்கிறது. ஆனால் பஞ்சேந்திரியங்களை அதன் தன் இஷ்டப்படி நல்வழியிலோ அல்லது தீய வழியிலோ செலுத்தி அதற்கு வேண்டிய சாதனங்களைச் செய்துகொள்ளப் புத்தி என்னும் ஆச்சரியமான கருவி மனிதனுக்கல்லாது மற்ற எந்தப் பிராணிக்கும் கிடையாது. இதனால் தான் மானிடஜன்மமெடுக்க எத்தனையோ தவம் புரிய வேண்டுமென்று பெரியோர்கள் கூறி இருக்கிறார்கள். ஆகையால் மானிட ஜன்மமே மிகவும் சிரேஷ்டமானது என்பதை அறிகிறோம். இப்பிறவிக்குள்ள பகுத்தறிவு என்னும் சக்தி புத்தி என்னும் கருவியாலேயே உண்டாயிற்று.

ஆனால் இவ்வரிய கருவியை எதற்காக நாம் பெற்றிருக்கிறோமென்பதைக் கவனிக்கவேண்டியது எல்லாவற்றிலும் மிகவும் அவசியமானது.

நாம் இவ்வுலகிலுள்ள சகல வஸ்துக்களையும் மானிடரின் உபயோகத்திற்காகவே பகவான் சிருஷ்டித்திருக்கிறார் என்று நினைத்து நம் புத்தியைக் கொண்டு நம்மால் இயன்ற மட்டும் எல்லாவற்றையும் நமக்குச் சுவாதீனப் படுத்திக்கொள்ளப் பிரயத்தினப்படுகிறோம்.

ஆனால் நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறது என்ற பழமொழியின்படி எப்பொழுதுமே நாம் நினைத்தபடி எல்லாம் நடப்பதில்லை. சில சமயங்களில் நம் இஷ்டம் போலவும் மற்றும் சில சமயங்களில் இஷ்ட விரோதமாகவும் நடக்கின்றன. அதற்கேற்ப ஆசை நிறைவேறியபோது சந்தோஷத்தையும் நிறைவேறாதபோது துக்கத்தையும் அனுபவிக்கிறோம்.

பகவானே எல்லாவற்றையும் நடத்தும்போது நாமேன் அதிலுண்டாகும் சுகதுக்கங்களை அனுபவிக்க வேண்டும் என்று கேட்கலாம். ஆனால் எல்லாக் காரியங்களுக்கும் அவரே காரணம் என்பதை நாம் சிறிதும் கவனிப்பதேயில்லை. ஏனென்றால் புத்தி என்னும் கருவியை நாம் பெற்றிருப்பதால் யாதொரு அற்பவேலையைச் செய்யும்போதும் 'நாம்' என்னும் அகங்காரம் நம்மிற் குடிகொண்டு நம்மை எல்லாவித சுகதுக்கங்களிற்கும் ஆளாக்குகிறது. அந்தோ பரிதாபம்!

இவ்வாறு கஷ்டப்படுவதற்காகவோ பகவான் நமக்கு இக்கருவியைக் கொடுத்தார்! ஒருகாலும் இராது. புத்தி அல்லது பகுத்தறிவு என்னும் சக்தியை எதற்காகப் பகவான் நமக்குக் கொடுத்திருக்கிறாரென்பதைச் சற்று ஆலோசித்துப் பார்ப்போம்.

நாம் நம் பஞ்சேந்திரியங்களையும் அததனிஷ்டப்படி விட்டு விட்டு அதற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்துகொண்டு அதனாலுண்டாகும் சுகதுக்கங்களை அனுபவிக்கிறோம். அவ்வாறு ஐம்புலன்களைத் தன்னிஷ்டப்படி விடாமற்றடுத்து நம்மால் இயன்றமட்டும் பரோபகார சிந்தையுடன் எல்லாம் ஈசன் செயல் என்னும் எண்ணத்தை மனதிவிருத்தி வேலைகளைச் செய்யப் புகுந்தோமேயானால் அப்பொழுது சஞ்சலமான மனதானது சிறிதுசாந்தமடைந்து சுகதுக்கங்களைச் சமமாகப் பாவிக்கும் நிலையை அடையும். இதனால் பேரானந்தத்தையடைவோம். எல்லாவற்றையும் பகவானிடத்தில் ஒப்புவித்து விட்டுக் கர்மத்தை விடாமற்செய்வதால் மேலான பதவியை அடைவோம். இதற்காகத்தான் நாம் புத்தி என்னும் கருவியைப் பெற்றிருக்கிறோமென்று நம்புகிறேன்.

இவ்வாறு செய்வதால் நாம் நம்மை அறிய முடியும். நம்மை நாம் அறிவது என்பது என்னவென்றால்:—நாம் யார்? நமக்கும் இப்பிரபஞ்சத்திற்கும் என்ன சம்பந்தம் என்பதைப்பற்றி கவனிப்பதுதான். இதைப் பற்றி விவரித்துரைக்கப் பிரயத்தினப்பட்டால் இவ்வியாசம் மிகவும் பெரிதாகிவிடுமாதலால் இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன்.

ஆனால் மேலே சொன்னமாதிரி நம்மை நாம் ஏன் அறியவேண்டுமென்றால் இதனால்தான் நாம் இந்த மானிட ஜன்மத்தால் கிடைக்கக் கூடிய உண்மையான நித்தியானந்தத்தை அடைய சக்தி உள்ளவர்களாகிறோம்.

நாம் ஒவ்வொருவரும் நம்மிஷ்டப்படி எல்லாரும் நடக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறோம். அநேக சமயங்களில் அவ்வாறு நடக்காததற்காக நம் சமீபத்திலுள்ளவர்களை அனாவசியமாகத் தொந்தரவு செய்கிறோம். ஆனால்

தன்னைத் தானறிந்த மகான்களைப் பாருங்கள்! இவர்கள் பரோபகாரார்த்தமாக இச்சரீரம் உண்டாயிருக்கிறதென நினைத்து சர்வத்தையும் தியாகம் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் யாதொன்றையும் இச்சிக்காமலேஎல்லாம் அவர்களுக்குக் கிடைக்கின்றது. அநேகம் ஆயிரக்கணக்கான ஜனங்கள் அம்மகான்களுக்குத் தொண்டுபுரியச் சித்தமாக இருக்கிறார்கள்.

இவ்வளவு சக்தியும் அவர்களுக்கு எவ்வாறு உண்டாயிற்றென்றால் அவர்கள் தம் மனதைப் புத்தியைக் கொண்டு அடக்கி ஆளுவதால் இப்பிரபஞ்சமேஅவர்களுடைய ஆளுகைக்குட்படுகிறது. யோசித்துப் பார்த்தால் இதை விட ஆச்சரியமானது வேறொன்றுமே இல்லை. இச்சூக்ஷ்மத்தை அறியாமல் பிறரையும் துன்பம் செய்து நாமும் நம் மனோபீஷ்டம் நிறைவேறாததால் வியாகூலத்தை அடைகிறோம்.

"ஜாதஸ்ய மரணம் த்ருவம்" என்றபடி என்று பிறந்தோமோ அப்பொழுதே என்றைக்காவது ஒரு நாள் சாகவேண்டுமென்பது நிச்சயமாக இருக்கிறது. இதுவுமல்லாமல் இந்த ஜன்மம் போனால் பிறகு எந்த ஜன்மம் உண்டாகும் என்பதை நம்மால் அறியமுடியவில்லை.

ஆகையால் வாசகர்களே! நாம் ஒவ்வொருவரும் மானிட ஜன்மத்தாற் கிடைக்கக்கூடிய நித்தியானந்தத்தைக் கூடிய சீக்கிரத்தில் அடையமுயலவேண்டும். காற்றுள்ளபோதே தூற்றவேண்டுமல்லவா? அது எவ்வாறெனில், நாம் நம்மை அறியப் பிரயத்தினப்படவேண்டும். நாம் எதற்காகக் கல்வி கற்கிறோம்? பொழுது போக்குவதற்குக் கதைப் புத்தகங்களை மாத்திரம் படிப்பதால் நம்முடைய அறிவு விருத்தியடையாது

நம் இந்து மதக் கொள்கையின்படி நாம் ஒவ்வொருவரும் ஆத்ம விசாரத்தைப்பற்றி நமக்கு போதிக்கும் கிரந்தங்களைப் படித்தால்தான் நாம் சிறந்த கல்விமான்களாவோம். இவ்விதமான சிறந்த கிரந்தங்களைப் படிப்பதால் எல்லாரிடத்திலும் சகோதர பாவமும் சமத்துவமான மனதும் உண்டாகும். பேராசை என்னும் பேய் நம்மை விட்டு விலகும். இதனால் எல்லாருடைய பிரியத்திற்கும் பாத்திரராவோம்

ஆகையால் நாம் பிரதிதினமும் சிறிது நேரமாவது இத்தகைய உத்தம கிரந்தங்களைப் படித்து ஒன்றுக்கும் அடங்காமல் சஞ்சலமாய் அலையும் மனதைச் சாந்தமாக ஒரு நிலையில் நிறுத்தப் பிரயத்தனப்படவேண்டும். இதற்கு சர்வமங்கள சொரூபியான பகவான் அனுக்கிரகிக்கவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

சுபம்.

உமா.

சிறு கதை.

(ஸ்ரீமதி P. மங்களா பாயி.)

O Woman! in our hours of ease,
Uncertain, coy, and hard to please,
....
When pain and anguish wring the brow
A ministering angel thou!

(SCOTT's *Marmion*.)

இன்னும் நன்றாய் வெளிச்சமாகவில்லை. கிழக்கில் இப்பொழுதுதான் கொஞ்சங் கொஞ்சம் வெளிச்சம் தெரிந்துகொண்டிருந்தது. சம்புசாணருடைய வீட்டின் பின்புறத்து வாயில் மெல்லத் திறக்க, ஓர் இளம்பெண் துரிதமாய் அடிகள் எடுத்து வைத்துக்கொண்டு வெளியில்

வந்து அருகிலிருந்த ஆற்றை நாடிச் சென்றாள். அவளுடைய முகமும் உருவமும் அந்த மந்தமான வெளிச்சத்தில் நன்றாகக் காணப்படவில்லை. அவள் கைம்பெண் என்பதைக் காட்டும் வெள்ளை வஸ்திரமும், கரிய நீண்ட கூந்தலும்மாத்திரம் தெரிந்து கொண்டிருந்தது.

ஆற்றங்கரை இன்னும் இருளாற் சூழப்பட்டிருந்தது. ஒரு கீழ்படியின்மீது கால்களை ஜலத்தில் வைத்து அப்பெண் உட்கார்ந்தாள். ஒன்றின்பின் ஒன்றாக அவள் மனதினுதிக்கும் விசாரம் என்னும் சங்கிலியை அறுக்க அவ்விடத்தில் ஒருவிதமான சத்தமும் உண்டாகவில்லை. இப்பெண்மணியின் பெயர் உமா. இவள் சம்புசாணருக்கு ஒரே மகள். சம்புசாணர் அவ்வூரில் வசிக்கும் ஒரு கனவானான பிராமணர். உமையின் விவாகம் அவளுடைய ஒன்பதாவது வயதில் ஐம்பது வயதான கிழவனுடன் ஆயிற்று; விவாகமான வருஷமே அவள் கைம்பெண்ணானாள். அது முதல் அவள் தன் தகப்பன் வீட்டிலேயே வசிக்கலானாள்.

ஆகாயத்திற் கிழக்கு திசையில் சுப்பிர வர்ணம் போய் சிகப்பு வர்ணம் தெரியலாயிற்று. அக்கிராமத்துக் கிழவனான பைராகி தனது பழைய பாட்டுகளைப் பாடிக்கொண்டு அந்த சூனியமான பாதைகளிற் சுற்றலானான். உமா அவசரமாய் எழுந்து ஆற்றில் இரண்டு முழுக்குப் போட்டுக் குடத்தை ஜலத்தால் நிரப்பி இடுப்பில் வைத்துக்கொண்டு இல்லஞ் சென்றாள்.

வீட்டிலிருக்கப்பட்டவர்கள் இன்னும் படுக்கையை விட்டு எழுந்திருக்க வில்லை. உமா குடத்தைச் சமையல் அறையில் வைத்துவிட்டு முற்றத்திற் போய்ப் புடவையையுலர்த்தினாள். பிறகு அவள் சமையல் செய்ய வாரம்பித்தாள். இவ்வேலைகளெல்லாம் அவள் தலையிலிருந்தது. ஏனென்றால் அவள் தந்தை இந்து விதவைகளின் கடமைகள் இன்னவை என்று நன்குணர்ந்திருந்தனர். உமா வீட்டு வேலை யெல்லாம் செய்து ஒழிவு நேரத்திற் தனது தந்தை கதை புராணம் படித்துக் கொண்டிருந்தால், அல்லது இந்து விதவைகளின் கடமைகளைப் பற்றி உபன்னியாசம் செய்தால், அதைகேட்டுக் கொண்டு உட்கார்ந்திருப்பாள்.

உமையின் தம்பி விஷ்ணு புறக்கடையிற் சில பூஞ்செடிகள் வைத்திருந்தான் அவைகள் இப்பொழுது வெள்ளை சிகப்புப் புஷ்பங்களால் நிறைந்திருந்தன. காலைக் காற்றினால் அப்பனியில் நனைந்த புஷ்பங்கள் கீழே உதிர்ந்து விழுந்து அது ஓர் அழகிய ரத்தின கம்பளம் விரித்ததுபோல் இருந்தது. உமா சமையல் அறையினின்றும் வெளி வந்து புஷ்பங்களைப் பொறுக்கித் தன் மடியிற் போட்டுக்கொண்டிருந்தாள்.

வீட்டின் ஒரு கதவு திறக்கப்பட்டு ஒரு ஸ்தூல சரீரமுள்ள ஸ்திரீ வாயிலில் வந்தாள். அவள் யாரையாவது தேடிக் கொண்டிருக்க வேண்டும். இதற்குள் அவளுடைய கண்கள் உமையண்டை சென்றன. அவள் கடோரமான குரலுடன் சொன்னாள்: "பொழுது விடிவதற்கு முன் நீ விளையாடுவதற்கு வந்து விட்டாயல்லவா? இப்பொழுது யார் சமைப்பது?" உமா குன்றிய முகத்துடன் சரேலென்று எழுந்தாள். "மாயீ! நான் அப்பொழுதே சமையல் செய்ய ஆரம்பித்து விட்டேன். சாதம் கொதித்துக் கொண்டிருக்கிறதென்று சற்று இப்படி வந்தேன்" என்று சொல்லி அவள் சமையல் அறைக்குச் சென்றாள்.

பெரிய ஸ்திரீ — மாயீ ஸாஹெப்—தனது சயனக்கிருகத்திற்குச் சென்றனர். மாயீ ஸாஹெப் சம்புசாணருடைய இரண்டாவது

பத்தினி. உமைக்கு வைதவ்விய திசை வந்து சொற்ப காலத்திலேயே அவளுடைய தாய் இறந்தனள். அனாதைகளான தன் மக்களைக் காப்பாற்றும்பொருட்டு யாராகிலும் வேண்டுமென்று சம்புசாணர் நரோத்தமை என்னும் அடுத்த வீட்டு ப்ரௌடையான பெண்ணைமறு மணம் புரிந்தனர். மாயீஸாஹெப் உமையைக் காப்பாற்றலானார். உமா வீட்டு வேலை முழுவதும் செய்யலானாள். இளம் பெண்கள் சும்மா உட்காருவது நன்கன்று. சும்மா யிருந்தால் அவர்கள் ஒளித்து ஒளித்து நாவல்களைப் (விநோதக் கதைகளை)படிக்க ஆரம்பிப்பார்கள். படிப்பினால் கெட்ட எண்ணங்கள் மனதினுதிக்கின்றன. சிறு வயதில் விதவையான பெண்களால் எவ்வளவு கவலை ஏற்படுகின்றதென்பது அதன் அநுபவமுள்ளவர்களுக்குத்தான் தெரியும்! இத்தகைய அனிஷ்டமான காரியத்தைத் தவிர்க்க மேலான உபாயமென்ன வென்றால், அவர்களைக் கடுங்காவலில் வைப்பதுதான்!

உமா சமையலறையில் உட்கார்ந்திருந்தாள் அவள் மடியில் புஷ்பம் இருந்தது. அவளுடைய கண்களினின்றும் நீர் பெருகிக்கொண்டிருந்தது. அன்னை இறந்தது முதல் சிற்றன்னையின் கடுமையான வார்த்தைகளை அவள் கேட்க வேண்டியதாயிருந்தது. இந்த அனுபவமேற்பட்டு எட்டு வருஷ காலமாயிருந்தும் அவளுடைய சொற்களைப்பொறுக்க உமையால் இயலாமலிருந்தது.

அப்புஷ்பம் சமையல் அறையின் அனலினால் வாடிப்போயும் உமா அதைக் கவனிக்கவில்லை. அந்தப் பரிதாபகரமான நிலைமையினால் அவளுடைய நிலைமையும் வாடிப்போன அழகிய புஷ்பத்தைப்போல யிருந்தது.

மாயீஸாஹெப் கூப்பிட்டதனால் அவள் வெளியில் வந்தாள். இந்தத் தடவை அவள் வசவு ஒன்றும் கேட்க வேண்டியதாயிருக்கவில்லை. ஒரு விருந்தினர் போஜனத்திற்கு வரும் சங்கதியை அவர் உமைக்குச் சொன்னார். உமா 'உம்' என்று சொல்லிப் போய்விட்டாள்.

பிறகு விஷ்ணு புஸ்தகங்களை எடுத்துக் கொண்டு அவசரமாக வந்தான். அவன் ஹைஸ்கூலிற் படித்துக் கொண்டிருந்தான். அவன் புஸ்தகங்களைக் கீழே போட்டுவிட்டு 'அக்கா, எனக்குச் சீக்கிரம் பரிமாறு. இன்று நம்முடைய புதிய உபாத்தியாயர் வரப்போகிறார். ஆகையால் எனக்கு எப்பொழுதையும் விட இன்று சற்று சீக்கிரமாகப் பள்ளிக்கூடம்போக வேண்டும்" என்றான்.

உமா அவனுக்குப் பரிமாறிக் கொண்டே சொன்னாள்: "இன்றைக்கு இவ்வளவு சீக்கிரமேன்? இன்னும் சமையல் முழுவதும் ஆகவில்லை. புதிய உபாத்தியாயர் வரப்போவது உண்மைதானா? அவர் எப்போது வந்தார்?"

"என்ன! இதுகூட உனக்குத் தெரியாதா?" விஷ்ணு வாயில் கவளத்தைத் திணித்துக் கொண்டே சொன்னான்: "அவர் இன்றுதான் வந்தார். நம்ம வீட்டில்தான் இருக்கப் போகிறார். அவர் நம்ம ஜமீன்தாரிடமிருந்து அப்பாவுக்குச் சிபார்சுக் கடிதம் கொண்டு வந்திருக்கிறார்."

பள்ளிக்கூடம் போக நேரமாகி விட்டபடியால் விஷ்ணு சுடுகிற சாதத்தைக் கபகபவென்று விழுங்கலானான். புதிதாக வரப்போகும் உபாத்தியாயரைப் பற்றித் தனக்குத் தெரிந்திருப்பதைத் தன் சகபாடிகளிடம் சொல்லிப் பெருமை பாராட்டிக் கொள்ளும் சந்தர்ப்பத்தை வீணே விட்டுவிடக் கூடாதென்கிற யோசனைதான் இச்சமயத்தில் அவன் மனதிற் குடிகொண்டிருந்தது.

சீக்கிரமே சம்புசாணர் காலை போஜனத்தின் பொருட்டு உள்ளே வந்தார். புதிய விருந்தினன் அவருடன் இருந்தான். வீட்டு வேலையைக்

கவனிக்கும்படி மாயீஸாஹெப் அவர்கள் தேகத்தில் ஒரு நாளும் ஆரோக்கிய மிருப்பதில்லை. ஆதலால் உமாதான் எப்போதும் பரிமாற வேண்டியதாயிருக்கும். அவள் விருந்தினனை அசப்பில் ஒரு தடவை பார்த்தாள். அவனுக்கு வயது 25க்கு மேலிராது. அவனுக்கு முன்னிருந்த ஹரீச உபாத்தியாயரை விட இவன் வேறு விதமாக இருப்பதாக மட்டும் இவளுக்குத் தோன்றியது.

அவ்விருந்தினனுடைய தாக்ஷிண்யமான சுபாவத்தைப் பார்த்து சம்புசரணர் அவனை மரியாதையுடனும் சுவை நிறைந்த வார்த்தைகளுடனும் சொன்னார்: "இது உங்களுடைய வீடே தான். இவ்விடத்தில் யாதொரு விதமான சங்கோசமும் பாராட்ட வேண்டிய அவசியமே இல்லை." இவ்வளவு அன்பும் ஆதரவும் அவர் தம் ஆயுளில் ஒருபோதும் வெளிக்காட்டியதில்லை. ஆனால் இந்த புதிய மனிதன்—அவனுடைய பெயர் விசுவநாதன்—தனது எஜமானருடைய சகோதரர் மகனானபடியால் அவ்விஷயத்தில் அவருக்கு விசேஷமான ஆதரவும் மரியாதையும்செய்ய வேண்டியதாயிருந்தது.

இத்தகைய பெரிய குடும்பத்திற் பிறந்த வாலிபன் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் ஆவதென்றால் யாருக்குமே புதுமையாகத் தோன்றும். ஆனால் விசுவநாதனுக்குத் தனது தனவான்களான உறவினருடன் பழகுவதில் இஷ்ட மிருக்க வில்லை. ஓர் அழகிய நந்தவனத்திற் காட்டில் வளரும் மரம் வளருவதுபோல் அவன் நிலைமையிருந்தது. சுகமாகவும் டம்பமாகவுமிருக்கும் அந்த உறவினர்களுள் அவனுக்குச் சுதந்தரமாகத் தோன்றுவதில்லை. அவன் மிகவும் உயரமாகவளர்ந்திருந்தான். அவனைப்பார்த்தால் ஓர் குடியானவனைப் போலிருந்தது. அவன்பந்துக்களின் சொக்கட்டானாடுவது, மதுபானம் முதலிய செய்கைகள் அவனுக்கு முற்றிலும் பிடிக்கவில்லை. ஓடுவது, குஸ்தி செய்வது, நீந்துவது இவைகளிற்றான் அவனுக்குப் பிரியம் அதிகம். அவனை யாராவது கட்டாயப்படுத்தினால் கொஞ்சமும் பிடிக்காது. அவனுடைய சிறிய தந்தைக்கு இத்தகைய மகனை என்ன செய்வதென்று தெரியவில்லை.

எம். ஏ. பரீக்ஷையில் தேர்ந்தும் 'இனி நான் சுயமாகப் பாடுபட்டு வயிறு வளர்க்கப்போகிறேன்' என்று அவன் விளம்பரப்படுத்தினான். அந்தப் பழைய குடும்பத்தினர் இத்தகைய சங்கதி ஒரு நாளும் கேள்விப்பட்டிலர். அவனுடைய உறுதி மொழிகளைக்கேட்டு விசுவநாதனுடைய அன்னைக்குத்துக்கம் மேலிட்டது; நமது ஆப்தர்களுள் ஒருவன் சுயமாகப் பாடுபட்டு வயற்றை வளர்க்கப்போகிறான் என்னும் கற்பனையால் அவனுடைய சிறிய தந்தை மனதிற்கும் எப்படியோ இருந்தது. வீட்டிலிருக்கும் மற்றவர்கள் ஆச்சரியத்தினால் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொள்ளலானார்கள். விசுவநாதனுக்கு அவர்களை யெல்லாம் கண்டு மிக வெறுப்பாயிருந்தது. அவன் கீழ் ஜாதிகளிலிருக்கும் சிறுவர்களை எல்லாம் சேர்த்துத் தன் அறையில் அழைத்துக்கொண்டு போய் அவர்களுக்கு எழுதப் படிக்கக் கற்பிக்கலானான். இதற்குப் பலன் அவன் இஷ்டப்படியே கிடைத்தது. அவனுடைய சிறியதந்தை உடனே அவனை உத்தியோகம் செய்யும் பொருட்டு வெளியூருக்குப்போக அநுமதி கொடுத்துவிட்டார். இதேசமயத்தில் பலாசபுரத்தின் தேசீயப் பாடசாலையில் ஓர் இடம் காலியாயிற்று. தனது சிறிய தந்தையின் சிபார்சின்பேரில் அது விசுவநாதனுக்குக் கிடைத்தது. இனி புதிதாக வசிக்கப்போகும் ஊருக்குப்போக அவன் புறப்பட்டான்.

சிறிய தந்தை அவன் வசிக்க இடம் முதலியவை எல்லாம் ஆயத்தப்படுத்தியே வைத்திருந்

தார்; சம்புசரணரோ தனக்குஆசிரயம் கொடுத்தவர்க்கு உபகாரம் செய்யக்கூடிய சமயம் நேர்ந்திருக்க அதை வீண் போக்கவேண்டும்?

விசுவநாதனுக்குப் புதிய பழக்கவழக்கங்களெல்லாம் சீக்கிரமே ஒற்றுக்கொண்டது. இந்நிலைமை அவனுக்கு ஏற்கனவே இருந்த நிலைமையை விட மிக்க இஷ்டமாயிருந்தது. ஆயுளில் இதுதான் அவனுக்கு முதன் முதல் ஆனந்தம் அநுபவிக்கும்படி நேர்ந்த சமயம்.

விஷ்ணு புதிய உபாத்தியாயரைக் கண்டு திகைத்தான். அவனுக்கு விசுவநாதன்பேரில் வெகுப் பிரியம். சம்புசரணருக்கு விசுவநாதனுடைய வரவால் மிக்க ஆனந்தமுண்டாயிற்று; ஆனால் அதை அவர் வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. விசுவநாதனுடைய சிறிய தந்தைக்கு மனிதர்களுடைய மதிப்பு நன்றாகத் தெரியும். மாயீஸாஹெபும் புதிய விருந்தாளியினிடத்திற் பேதபாவமின்றி நடந்து கொள்ளலானார்.

உமா முதலில் விசுவநாதன் விஷயத்தில் அலக்ஷியமாய் இருந்தாள். பிறகு விசுவநாதன் அவ்வூரிலுள்ள வாலிபர்களைப் போலல்லாமல் முற்றிலும் வேறுவிதமாயிருக்கிறான் என்பது அவளுக்குத் தெரியத் தெரிய அவன்பேரில் அவளுக்கு விசுவாசம் ஏற்படலாயிற்று. அவன் வேறு உலகத்திலிருந்து வந்ததாக அவளுக்குத் தோன்றியது. உமைக்கு இன்னும் ஒரு வாலிபனிடமும் மதிப்பு ஏற்பட்டதில்லை. இதுவரையில் எவ்வளவோ வாலிபர்களைப் பார்த்து மட்டுமிருக்கிறாள். அவர்களுள் ஒருவர்பேரில்கூட அவளுக்கு ஆதரவு ஏற்படவில்லை. கோணல் வகிடெடுத்துத் தலையைப் பளபளவென்று சீவுதல், சிகார் குடித்தல், புதிய நாகரிகத்தின்படி இறுக உடைகளைத் தரித்து முறைப்புடன் நடப்பது, மீசையைப் பல விதமாக முறுக்குவதில் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொள்வது முதலிய உத்தியோகத்தைத் தவிர வேறு புருஷார்த்தம் இருப்பதாக அவள் கண்ணில் தென்படும் வாலிபர்களுக்குத் தோன்றுவதில்லை. ஊர் வம்பைத் தவிர அவர்களுடைய பேச்சுக்கு வேறு விஷயமே கிடையாது. ஆனால் அவள் தந்தை வீட்டிற்கு வந்த இவ்வாலிபன் தனது ஒழிவு நேரத்தைப் படிப்பிலோ அல்லது சிறுவரைச் சேர்த்துக்கொண்டு விளையாடுவதிலோ கழிப்பான். இதைக் கண்டு அவன்பேரில் அவளுக்கு பூஜ்யபுத்தி உண்டாயிற்று.

விசுவநாதன் தினமும் போஜனத்திற்கு வரும்போது உமையின் கண்ணில் தென்படுவான். அவனுக்கு போஜனத்திற் கொஞ்சங்கூட கவனமிருக்காது. இதை அவள் அப்பொழுதே உணர்ந்தாள். அவனுடைய இவ்வுதாசீனத்தைக் கண்டு அவள் மனம் குன்றியது. அவள் தன்னாற்கூடியவரையில் சமையல் நன்றாகச் செய்ய முயலுவதும், அவள் நினைத்தபடி அவளுக்கு நல்ல பெயர் வாராமற் போவதுமாயிருந்தது.

ஒரு தடவை அகஸ்மாத்தாய், அவள் சமையல் நன்றாகச் செய்யும்பொருட்டு எடுத்துக் கொள்ளும் கவலை விசுவநாதனுக்குத் தெரிய வந்தது. அவன் நன்றி யறிவுடன் சிரித்துக் கொண்டே சொன்னான்: "நீ வெகு கவலையுள்ளவளாய்க் காணப்படுகிறாய்."

அவளுடன் அவன் இதுதான் முதல் தடவையிற் பேசியது. உமா மிகவும் வெட்கமடைந்து சமையலறையில் "என்னடியம்மா இந்த மனிதன்! அவன் என்னைப் பார்த்து இப்படிச் சிரிக்கவேண்டுமா! அவன் நிறையச்சாப்பிட்டாலென்ன, குறைவாகச் சாப்பிட்டாலென்ன? இதில் எனக்கென்ன மோசம்!" என்று அவள் தன்மனதிற்குள்ளே பேசிக்கொண்டாள்.

ஆனால் அவள் மறுநாள் தன் சமையல் வேலை சரிவரச் செய்யும்பொருட்டு எடுத்துக் கொண்ட கவலையில் ஒன்றும் குறைத்தவளன்று. இத்தகைய அன்னிய ஸ்தலத்தில் அவனுக்கு யாதொரு அசௌகரியமும் உண்டாகாமலிருக் கும்பொருட்டு அவள் கூடியவரையில் முயன்றாள். அவள் கையில் ஒருவிதமான அதிகாரமும் இருக்கவில்லை. சமையல் நன்றாகச் செய்வதைத் தவிர அவனுக்காக அவள் வேறென்ன செய்யக்கூடும்?

ஆனால் அவளுக்குத் தனது சிரமமெல்லாம் சார்த்தகமுள்ளதாயிற்றென்று ஆனந்தமுண்டாய் அவள் மனதிற்கு ஒரு விதமான சமாதானமுண்டாயிற்று.

இவ்வாறாக அவர்கள் ஒருவக்கொருவர் பரிசயப்படுத்திக் கொண்டனர். சம்புசரணர் ஒரு வழக்கில் அகப்பட்டுக்கொண்டிருந்தமையால் அவருக்குத் தன் மகளின் படிப்பை கவனிக்கச் சாவகாசப்படாமற் போயிற்று. போஜனம் செய்து புருஷர்களெல்லோரும் அவரவர்களுடைய உத்தியோகத்திற்குச் சென்ற பிறகு மாயீஸாஹேப் மத்தியானம் சற்று நேரம் நித்திராதேவியை ஆராதிப்பார்கள். உமா ஒரு ஜன்னலில் உட்கார்ந்து இராமாயணம் படித்துக் கொண்டிருப்பாள். அவளுக்கு அது மிகவும் இஷ்டமானதென்பதல்ல, அவ்வீட்டில் அது ஒரு புஸ்தகம்தான் இருந்தது. இவ்விதமாக அவளுடைய மத்தியானப்பொழுது (பகற்பொழுது) போகும்.

ஒருநாள் விஷ்ணு எங்கிருந்தோ ஒருகதைப் புஸ்தகம் கொண்டு வத்தான். அந்த புஸ்தகமென்றால் உமைக்கு ஒரு வெகுமதிபோல் தோன்றியது. அப்புஸ்தகம் படிப்பதில் அவள் மெய் மறந்துவிட்டனள். மாயீஸாஹேப் வந்து அதட்டி யிராவிட்டால் அவளுக்கு ஒன்றினுடைய ஞாபகமும் இருந்திருக்கமாட்டாது.

இப்புஸ்தகம் விசுவநாதனுடையது. அதை அவன் தேடிக்கொண்டிருக்கும்போது விஷ்ணு அவனுக்குச் சொன்னான், "நான் அதை அக்காளுக்குக் கொடுத்திருக்கிறேன்."

அன்று முதல்அந்தப் பழைய இராமாயணம் ஒரு மூலையிற் தூசு படிந்துகொண்டு கிடந்தது. விசுவநாதனுடைய பங்காளிப் புஸ்தகங்களெல்லாம் அப்பெண்ணின் அறையில் வந்து விழலாயின.

விசுவநாதன் ஏற்கனவே மிகவும் மறதியுள்ளவன். ஆனால் திடீரென்று அவனுக்கு ஒரு சிரத்தை தோற்றலாயிற்று. அவனுக்கு அந்த அனாதையாகிய அழகிய பெண்மணியின் பேரிற் கருணை யுண்டாயிற்று. ஏனெனில் அவள் பாடுபட்டு உழைப்பதற்குக் கைம்மாறாக அவளுக்கு வசவென்னும் வெகுமதி தானே கிடைத்துக் கொண்டிருந்தது. இப்பொழுது அவனை எல்லோரும் தம் குடும்பத்திலொருவனாக பாவிக்கலாயினர். எல்லோரும் அவனிடம் சகஜமாய்ப் பழகலாயினர்.

உமையின் மாற்றாந்தாய் அடிக்கடி அவளை விசுவநாதனுக்கெதிரில் வைவாள். அன்னிய மனிதனுக்குத் தன்னுடைய கண்ணீரும், தன்னுடைய பரிதாபகரமான நிலைமையும் காட்டிக் கொடுக்கக் கூடாதென்று உமா எவ்வளவோ முயலுவாள். அதெல்லாம் வீண் போகும். உமையின் விஷயத்தில் அவனுடைய கண்கள் மிகவும் கூர்மை உள்ளதாயிருந்தன. அவனுக்குச் சகலமும் தெரிந்து விட்டது. அவனுக்கு அடங்காக்கோபம் வரும். ஆனால் அவளை இத்துன்பத்தினின்றும் விடுவிக்க ஏதாவது ஒரு உபாயம் தேடினாலன்றி அவளுடைய கஷ்டம் நீங்கப் போவதில்லை. நாளுக்கு நாள் அதிகந்தானாகும் என்று அவன் தன் கோபத்தை அடக்கிக்கொள்ளுவான்; ஆனால் இத்தகைய அநியாயத்தைக் கண்ணாற் பார்த்துக்

கொண்டே சும்மா இருப்பது கஷ்டமாயிருந்தது. அவள்பேரில் அவனுக்கு மிகவும் பரிதாபமாயிருந்தது.

விசுவநாதனுக்கு உமையைப்பற்றி வெறும் பரிதாபம்மாத்திரமே இருந்ததா? அவனுடைய நடத்தையினால் ஒரு பிரபலமான விகாரத்தினால் அவன் சூழப்பட்டிருக்கிறான் என்று தெரியலாயிற்று. உமையை விடுவிப்பது அவன் கையிலில்லை. வீட்டிலுள்ளவர்பேரில் எல்லாம் அவனுக்கு மிக்க கோபம் உண்டாயிற்று. விஷ்ணுவும் அவனுடைய தம்பி ஒருவனும் அவனுடைய அறையிற் படுத்துக்கொள்வார்கள். உமா அவர்களுக்குப் படுக்கை போட்டுக் கொடுப்பாள். ஒருநாள் விசுவநாதன் அப்பொழுது தான் பள்ளிக்கூடத்திலிருந்து வந்திருந்தான். இதற்குள் அவன் சம்புசரணருடைய பத்தினியின் கடுமையான குரலைக் கேட்டான். "உமா! உனக்கு முற்றிலும் கவனமில்லாமற் போயிற்றே, எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது! அந்த அறையைப்பற்றி சற்று அதிகக் கவலை எடுத்துக்கொண்டால் என்ன முழுகிப் போகும்! உனக்கு வெட்கமென்பதே இல்லை! சற்று அவ்வறையை எட்டியாவது பார்!"

விசுவநாதன் ஆச்சரிய முற்றான். அவன் சரேலென்று அறைக்குட் போய் படுக்கை ரத்ன கம்பளம் எல்லாவற்றையும் எடுத்து வீசி எறிந்தான். விஷ்ணு அவனை ஆச்சரியத்துடன் பார்க்கலானான். அப்பொழுது அவன் கோபத்தை அடக்கிக்கொண்டு வெளியிற் போகச் சென்றான். "இந்தக் கனமான படுக்கையிற் படுத்துக் கொண்டால் நிரம்ப புழுக்கமாக யிருக்கிறதப்பா!" என்றான்.

விசுவநாதனுக்கு உமையைப்பற்றி நாளடைவில் அவள் அயலாள் என்ற பாவனை இல்லாமற் போயிற்று. உறவினனல்லாத வாலிபனுடன் பேசுவது நமது இந்துக் குடும்பங்களில் வழக்கமே கிடையாது. ஆனால் அவளுக்கு அவ்வாலிபன் தன் உறவினனை விட மிகக் கிட்டினவனாகத் தோன்றினான். தனக்கு உதவி புரிய வேண்டுமென்று அவன் மனதிலிருந்தும் அவன் இயலாதவனாயிருக்கிறான் என்பதைப் பார்த்து அவனுடைய நல்லெண்ணத்திற்காக உமை நன்றி பாராட்டலானாள்.

உமையின் சிற்றன்னையின் மகன் ராணு; அவனுடைய தங்கை டுண்ணு; இவர்கள் அவ்வீட்டில் எல்லோரையும் விடச் சிறியவர்கள். இவர்கள் தினமும் காலையில் எழுந்ததும் தின்னப் பட்சணம்வேண்டுமென்று அழுதழுது அமக்களம் செய்துவிடுவார்கள். முதல் நாள் ஏகாதசியா யிருந்தமையால் உமை தீர்த்தம் கூடக் குடிக்காமற் பட்டினியாயிருந்தாள். அக்குழந்தைகள் தின்னக் கேட்டபோது அவர்களுக்குக் கொடுக்க அன்று ஒன்று மிருக்கவில்லை. அவளால் ஒன்றுஞ் செய்யவும் முடியவில்லை. அவளுடைய இளையதாய் உடனே முன்னுக்குவந்து வாக்கு பாணங்களைத் தொடுக்க ஆரம்பித்தாள். உமா சமையல் அறைக்குட் சென்றாள். அவள் முகமெல்லாம் கண்ணீரால் நனைந்திருந்தது. விசுவநாதன் இதையெல்லாம் தன்னறையின் ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தான் அவ்விரு சிறுவர்களுக்கும் இரண்டடி கொடுக்க வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. பிறகு அவன் வெளியிற் போய் வெகு நேரம் வரையில் சுற்றி விட்டுக் களைத்துப்போய்த் திரும்பி வந்தான்.

மறு ஏகாதசி வந்தது. இம்முறை உமா ஜாக்கிரதையாய் இருக்க நிச்சயித்தாள். உயிர் போனாலும் சரி நேரத்தில் எல்லாம் தயார் செய்து விடவேண்டும் என்று அவள் தீர்மானித்தாள்.

இன்னும் ஒருவரும் எழுந்திருக்கவில்லை. உமா குடத்தை எடுத்து இடுப்பில் வைத்துக்

கொண்டு ஜலம் கொண்டு வரும்பொருட்டு ஆற்றங்கரைக்குச் சென்றாள். அவள் வெளியிற் சென்றதும் விசுவநாதன் அவ்விரு சிறுவர்களுடனும் ஜன்னலண்டை பேசிக்கொண்டிருப்பதை அவள் கண்டாள்.

"ராஜு! டெண்ணு! நீங்கள் இருவரும் வெளியில் வாருங்கள், நான் உங்களுக்காக என்ன வேடிக்கை கொண்டு வந்திருக்கிறேன் பாருங்கள். சீக்கிரம் வெளியில் வந்தீர்களானால் நான் உங்களுக்கு இஷ்டமான செந்தாமரைப் புஷ்பங்கள் கொடுப்பேன்."

அச்சிறுவர்கள் மிகக் களிப்புடன் வெளியில் வந்தனர். காலையிற் தின்னும் பட்சணத்தை மறந்தனர். விசுவநாதன் அவர்களை அழைத்துக்கொண்டு வெளியிற் சென்றான்.

உமா தன் அறையிற் சென்று குளுமையான தரையிற் படுத்து மனதார அழுதாள். தாய் இறந்த நாள்முதல் அவள் ஒரு யந்திரம் போல் நடத்தப்பட்டு வருகிறாள். தயையும், அன்பும் அற்ற உலகத்தில் அவள் காலத்தைக் கழிக்கவேண்டியிருந்தது. உமா பூமாதேவிக்குத் தண்டம் சமர்ப்பித்தாள். ஆனால் அது எந்த உத்தேசத்துடன் என்பது பகவானுக்குத்தான் தெரியும்!

அவள் ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்குச் சற்று நேரமாயிற்று. விசுவநாதன் வழியிற் போய்க்கொண்டிருந்தான். அவன் தன் வழக்கப்படி நீந்துவதற்குப் புறப்பட்டிருந்தான். அவனைக் கண்டதும் உமையின் கண்களில் நீர் ததும்பியது. அவளுடைய உள்ளத்தில் அந்த தெய்வீக அன்பின் ஸ்பரிசத்தினால் உள்ளம் கலக்கமுற்றது. அவளுக்கு இப்புருஷனை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அவன் பாதத்திலிருக்கும் தூசியைத் துடைக்க வேண்டுமென்று தோன்றியது. பயமென்பது குறுக்கே வந்தமையால் அவனுக்கு வழிவிடும் பொருட்டு அவள் ஒரு புறமாக ஒதுங்கினாளேயன்றி, விசுவநாதன் முன்னுக்குச் செல்லவில்லை.

அவன் அவளருகில் வந்து நின்று சொன்னான்: "நீ ஏன் இவ்வளவு சீக்கிரம் வெளியில் வந்தனை? நீ இன்னும் உன் உபவாசத்தின் பாரணை செய்யவில்லையல்லவா?"

"பள்ளிக்கூடத்திற்குப் போவதற்கு நேரமாவதற்குள் உங்களுக்குப் போஜனம் சித்தபடுத்தவேண்டும் அல்லவா?" என்று உமா ஏதோ அலக்ஷியமாய்ச் சொன்னாள்.

"என்னுடைய சௌகரியத்திற்காகப் பிறர் சாகவேண்டுமென்பது என் கொள்கையல்ல; தவிர, எனக்குக் கொஞ்சம் காய்ச்சல் வந்திருக்கிறது. ஆதலால் எனக்கு இன்று ஆகாரம் ஒன்றும் வேண்டியிராது" என்றான் விசுவநாதன்.

உமா அவசர அவசரமாய் வீட்டிற்கு வந்தாள். விசுவநாதனுக்குத் திடீரென்று காய்ச்சல் வந்ததன் காரணம் அவள் நன்குணர்ந்தாள்.

துன்பமானது அவ்விருவரையும் ஓரிடத்திற் கொண்டுவந்து வைத்தது. ஆனந்தமானது அவர்களைத் தூரப் பிரித்து வைக்கும்போலும்.

"கேட்டாயா உமா! இன்று சற்று சீக்கிரம் வேலையை முடித்துக்கொள்! என்னுடைய தம்பியும் தமக்கையும் வரப்போகிறார்கள். இன்று அவர்கள் வந்த பிறகு அவர்களுக்குப் பலகாரத்துக்கு ஏதாவது செய்து கொடுக்கவேண்டும்" என்று அவனது சிற்றன்னை சொன்னாள்.

உமா தனது அறையில் உதாசீனமாய் உட்கார்ந்திருந்தாள். மாயீஸாஹெப்பின் குரலைக் கேட்டு அவள் திடுக்கிட்டெழுந்து தன் வேலைக்குச் சென்றாள்.

விசுவநாதன் பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் தன் ஆசனத்தின்மீது உட்கார்ந்து அமைதியாய்ச் சிகரெட்டுக் குடித்துக்கொண்டிருந்த ஒரு மனிதனைக்கண்டு அவன் ஆச்சரியமுற்றான். அம்மனிதனுடைய அந்த தளுக்கு மினுக்கான உடுப்பையும், மிக்க கவலையுடன் வாரிய கூந்தலையும் பார்த்து இவன் யாரோ பட்டணத்தில் வசிக்கும் ஷோக் ஆசாமி என்று அவனுக்குத் தோன்றியது. விசுவநாதன் அவனைப் பார்த்தும் பார்க்காததுபோல் வெளியிற் சென்றுவிட்டான். அப்புதிய மனிதன் விஷ்ணுவை நோக்கிச்சொன்னான்: 'இவன்தானடா உங்களுடைய புதிய வாத்தியார்? தன்னுடைய அந்தஸ்துக்குமேல் அவன் கர்வமுடையவனாயிருக்கிறான்! என்னை அவன் ஒரு முறை பார்த்து முகத்தைத் திருப்பிக் கொண்டான்.' இந்த ராஜ ஸ்ரீயின் பெயர் சுரேசன். இவன் மாயீஸாஹெப்புக்கு இளைய சகோதரன்.

இந்த ராஜ ஸ்ரீக்கு அநேக காரணங்களால் வீட்டிற்கு வருவதற்கு நேரமாவது வழக்கம். இவன் இவ்விடம் வந்த பிறகு இவனுடைய ஆயுட்கிரமத்தில் யாதொரு மாறுபாடும் உண்டாகவில்லை. இரவிற் குழந்தைகளுடைய போஜனமான பிறகு இவ்விருந்தாளியின் போஜனத்தை அவனுடைய சகோதரியின் அறையில் வைத்துவிட்டுப் போகும்படி உமைக்கு உத்தரவாயிருந்தது. மறுபடியும் சற்று யோசித்து மாயீஸாஹெப் சொன்னார்: "விசுவநாதனுடைய தட்டுங்கூட இவ்விடத்திலேயே வைக்கப்படவேண்டும். ஏனென்றால் அவனுக்கு விருந்தினரோடு புசிக்க வெகு இஷ்டம்."

உமா உத்தரவுப்படி செய்துவிட்டு அவள் பலகாரம் செய்ய உட்கார்ந்தாள். கிட்டத்தட்ட பதினொன்று அடிக்கும் சமாருக்கு சுரேசன் திரும்பி வந்து மெல்லத்திருட்டுத்தனமாய் இங்குமங்கும் பார்த்து உமையின் உள் வாயிலண்டை போனான். உட் கதவு திறந்திருந்தது. உமா திடுக்கிட்டுத் தலையை நிமிர்த்து பார்த்தபோது அந்த ஷோக் ஆசாமி முன்னுக்கு வந்து கடுமையான குரலுடன் சொன்னான்: "என் காதற்கொடியே! நீ என்னை இன்னும் தெரிந்து கொள்ளவில்லை என்று தோன்றுகிறது. சற்று என்பேரில் கருணை செய்!"

உமையின் கண்களுக்குமுன் பூச்சிகள் பறப்பதுபோல் தோன்றியது. ஒரு வார்த்தையும் உச்சரிக்காமல் அவள் எழுந்து அவன் நின்று கொண்டிருக்கும்போதே கோபத்துடன் கதவைச் சாற்றித் தாளிட்டாள். இவ்வாறு ஏமாந்த பிறகு அந்த ஷோக்மனிதன் அவமானத்துடன் திரும்பவேண்டியதாயிற்று. ஆனால் இதற்கு அவன் உடனே பழி தீர்த்துக்கொண்டான். அவன் தன் சாப்பாட்டிற்கு இல்லாத தோஷத்தை எல்லாம் சொன்னான். தனக்குத் தேக அசௌக்கியமாயிருப்பதாகவும், தன்னுடைய சௌகரியத்தைப் பற்றித் தன் வீட்டு ஜனங்களே கவனிப்பதில்லை என்றும் குற்றங் கூறலானான். அவனுடைய பெரிய தமக்கை அவனுக்குப் பின்பாட்டுப் பாடலானாள். மாயீஸாஹெப் சற்று தயங்கலானார். இப்பொழுது மறுபடியும் போஜனம் தயார் செய்ய வேண்டுமானால் வெகு நாழிகை ஆகிவிட்டது. இவ்விடத்திலோ அவர்களுடைய அருமைத் தம்பி ஆறின போஜனத்தைப்புசிக்கமாட்டான். அன்றியும் தனது பிறந்தகத்து ஜனங்களுக்குத் தன் கணவன் வீட்டில் நடக்கும் அனாதரவைப் பார்த்து அவருக்கு வெட்கமாயிருந்தது; அதுவும் இவ்வனாதரவு விசுவநாதனைப்போன்ற பெரிய குடும்பத்தைச்சேர்ந்தவர்கள் எதிரில்!

சுரேசனோ சும்மாயிருக்கப்பட்ட மனிதனன்று. இவ்வழக்கின் முடிவு உமைக்கூப்பிடப்

பட்டு அவன் விஷயத்தில் அவள் கவலையீனமாயிருந்ததற்காக மனதாரத் திட்டப்பட்டாள். தன் வீட்டிற்கு வந்த விருந்தினருக்கு என்ன தேவை, என்ன வேண்டாம் என்று அவள் விசாரித்திருக்கவேண்டும். அத்தகைய அந்த நடு இரவில் அவள் ஒன்றும் புசிக்காமல் உள்ளே போனபோது அந்த ராஜ ஸ்ரீக்குப் பெரும் வெற்றி பெற்றது போல் ஆனந்தமுண்டாய் தனக்குத் தானே நகைத்துக் கொண்டான்.

“என்னம்மா, இது இவளுடைய சுபாவம்! கணவனை இழந்த ஸ்திரீகளுக்கு இவ்வளவு ராங்கி நல்லதன்று! நாங்களும் காலை முதல் இரவு வரையில் உழைக்கிறோம். ஆனால் எங்களைப் பற்றி ஒருவரும் இப்படிச் சொல்லமாட்டார்கள்” என்று சிற்றன்னையின் விதவை சகோதரி சொன்னாள்.

இந்தக் காட்சி நடந்து கொண்டிருக்கும்போது விசுவநாதன் ஆச்சரியத்தினால் மௌனமாய் உட்கார்ந்திருந்தான். அவனை சுரேசனுடன் போஜனம் செய்யும்படி சொல்லப்பட்டிருந்தது. அதனின்றும் தன்னை எப்படி விடுவித்துக் கொள்வதென்று விசுவநாதன் யோசனையிலிருந்தான். அவன் இன்னும் ஒன்றும் தின்னவில்லை. அவன் திடீரென்று எழுந்து வெளியிற் சென்றான். பிறகு சுரேசன் தனிமையாகப் புசித்தான்.

அன்றிரவு விசுவநாதனுக்கு நித்திரையே வரவில்லை. அவன் ஓய்வில்லாமற் படுக்கையில் புரண்டுகொண்டு வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான். பிறகு அவன் எழுந்து வெளியிற் சென்றான். அப்பொழுது நன்றாகப் பொழுது விடிந்து இருப்பதாகத் தோன்றியபடியால் ஆற்றங்கரையை நாடிச் செல்லலானான். ஆற்றங்கரை சூனியமாய்க் காணப்படுமென்று அவனுக்குத் தோன்றியது. ஆனால் அங்கு யாரோ படியின் மேல் உட்கார்ந்திருப்பதாகத் தென்பட்டது. காலை நேரத்துக் குளிர்ந்த காற்றினால் அங்கு உட்கார்ந்திருந்தவரின் வெள்ளை வஸ்திரம் ஆடிக்கொண்டிருந்தது. கறுமையான கூந்தல் அப்படியின் மேற் புரண்டு கொண்டிருந்தது. விசுவநாதன் பேசாமல் அருகிற் சென்று ‘உமா’ என்று கூப்பிட்டான்.

உமா சிலையினாற் செய்த பதுமையைப்போல் அசைவற்று உட்கார்ந்திருந்தாள். அவன் கூப்பிட்டதும் அவள் திடுக்கிட்டு அப்படியே தரையிற் சாய்ந்து விம்மிவிம்மி அழலானாள். விசுவநாதன் ஒன்றும் பேசாமல் அவளருகில் உட்கார்ந்தான். அவளை எவ்வாறு தேற்றுவதென்று அவனுக்குப் புரியவில்லை. உமா தன் விரிந்த கூந்தலின் மேல் அவனுடைய கண்ணீர் விழுவதை நன்குணர்ந்தாள்.

சற்று நேரத்திற் கெல்லாம் அவன் ‘உமா’ என்று மறுபடியும் கூப்பிட்டான். மறுமொழியில்லை. அதற்குள் உமையின் உடல் நடுங்கியது போலாயிற்று. அவளுடைய கூந்தலை யார் ஸ்பரிசித்தனர்? அவள் உடலின் மேலிருந்து ஓர் மின்சார சக்தி போனது போல் அவளுக்குத் தோன்றியது.

விசுவநாதன் தன் கை இருந்ததுபோலவே வைத்துச் சொன்னான்: ‘உமா, இத்துன்பம் மிதமிஞ்சி விட்டது! என்னால் அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. நட என்னுடன்; என்னை மணம்புரி; ஏனென்றால் நான் தனவானில்லாவிடினும் தனத்தைவிட மகத்துவமுள்ள வஸ்து உனக்கு லபிக்கும்.’ ஒரு க்ஷணம் அவள் மெய்மறந்தது போலிருந்தாள். அடுத்த க்ஷணத்தில் அவள் சரேலென்று எழுந்து விசுவநாதனைப் பயத்துடன் பார்த்து, மின்னல் ஒளியைப்போல் அங்கிருந்து மறைந்தாள். தன் அறையிற் சென்றதும் அவள் மூர்ச்சையடைந்தாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் மூர்ச்சை தெளிந்தாள். வெட்கம், பாபம் இவ்விரு கற்பனைகளால் அவளுடைய இருதயம் அடைத்துக்கொண்டிருப்பதுபோலிருந்தது. ‘நான் அன்னிய புருஷனைப்பற்றி ஆதரணையுடனிருந்ததனாலன்றோ இந்நிலைமை வந்தது? திக்காரமிருக்கட்டும். எனக்கு வைதவ்விய தசை வந்தது முதல் என் தந்தை எனக்காக எவ்வளவு கடுமையான நியமங்களை விதித்திருந்தார். அவைகளெல்லாவற்றின் பயன் இதுதானோ? ஒருவன் என்னிடம் வந்து விவாகத்தைப்பற்றிப் பிரஸ்தாபிக்கும்படி தான் துர்பலமுள்ளவளானேனோ? அதிலும் புனர்விவாகத்தின் வெறும் கற்பனையினாலேயே மயிர் கூச்சலெடுக்கப்பட்ட பிராமணத் தாய் தந்தையர்களுடைய கைம்பெண்ணான என்னிடமா! இத்தகைய வார்த்தைகளைக் கேட்பதற்கு முன்னதாகவே எனக்கு மரணம் ஏன் வரவில்லை! இப்படி லஜ்ஜையின்றி என்னை அவமானப்படுத்தப்பட்டவன் இவன் யார்!’ என்று தனக்குள்ளே தானே பேசலானாள்.

உமையின் எல்லாக் கோபமும் திரஸ்காரமும் ஒருங்கு சேர்ந்தது; அதன் ஆதாரத்தின் பேரில் அந்த அபராதியான புருஷனைப் பிரதிகாரம் செய்ய அவள் முயன்றனளே அன்றி அது வீண். அந்த அபலையின் பவித்திரம் என்னும் மேலான கற்பனைக்கு அவமானமுண்டாயிற்று என்பது எவ்வளவு இழிவான எண்ணம்? அவள் யாருடைய நியாயத்தைத் தீர்த்துத் தண்டனை விதிப்பதாயிருந்தாள்? அவன் எவ்வளவு பாபம் செய்திருந்தபோதிலும் அவனை தண்டிக்கும் சாமர்த்தியம் தனக்கில்லை என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும்! எந்த மனிதன் தனக்காகக் கண்ணீர் சொறிந்தானோ அவனை எப்படி அலட்சியம் பண்ண முடியும்?

தான் துர்பலமுள்ளவள் என்கிற உணர்ச்சி அவளுக்கிருந்தது. இவ்விசாரத்தினால் அவளுக்குத் தன்னைப்பற்றி மிகக்கோபம் வந்தது. தன் துக்கத்தை அடக்க அவள் விசேஷ முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. அதனால் இவ்வளவு அமக்களமுண்டாயிற்று. எல்லா தோஷமும் தன்னுடையதுதான்; ஆதலால் தன்னைத் தான் தண்டிக்கவேண்டுமென்று அவளுக்குத் தோன்றியது.

இதற்குள் விசுவநாதன் அவள் அறையின் ஜன்னலண்டை வந்துநின்று கொண்டிருப்பதை அவள் கண்டாள். அவனுடைய கண்கள் துக்கத்தினாலும் அன்பினாலும் நிறைந்திருந்தது.

உமா எழுந்து உட்கார்ந்து ஆத்திரத்துடன் சொன்னாள்: “போ! புறப்பட்டுப் போ!! மறுபடியும் என்னைப் பாபத்தில் இழுத்துக் கொண்டுபோகாதே!”

விசுவநாதன் போய் விட்டான். ஆனால் அவன் முகம் வெளுத்திருந்தது. வேறொரு உருவம் அவனைக் கவனித்துப் பார்த்துக்கொண்டிருந்தது. அதனுடைய வேலையான பிறகு அதுவும் அங்கிருந்து மறைந்தது. சுரேசனுடைய தமக்கை அப்பொழுதுதான் படுக்கையினின்றும் எழுந்து பிராத ஸ்மரணம் சொல்லத்தயாராகிக் கொண்டிருந்தாள். அப்பொழுது அவளுடைய அருமைத் தம்பி கொடூரமான குரலுடன் ஏதோ சொல்லிக் கொண்டே வந்தான்.

‘என்ன, என்ன வாயிற்று?’ என்று அந்தம்மாள் கேட்டாள். “ஆவதென்ன? வேண்டியது ஆயிருக்கிறது. நான் ஒருவன்தான் துஷ்டனென்று எனக்குத் தோன்றியிருந்தது; இவ்வுலகில் என்னைப்போன்ற துஷ்டர்கள் எவ்வளவோ பெயர் இருக்கின்றனர் என்பது இப்பொழுதுதான் எனக்குத் தெரியவந்தது.”

அந்தம்மாளின் பிராத ஸ்மரணம் ஒரு புறம் நின்றது. அவள் ஆத்திரத்துடன் கேட்டாள்: 'என்ன தான் ஆயிற்று?'

"நீ இப்படியே கேள்; உங்களுடைய அந்த நந்நடக்கையுள்ள வாத்தியார் இருக்கிறானே அல்லவோ" என்று அதன் பிறகு சுரேசனும் அவன் தமக்கையும் வெகு நேரம் வரையிற் பேசிக் கொண்டிருந்தனர்.

அந்த இரவு இருள் நிறைந்ததாயிருந்தது. எங்கு பார்க்கினும் ஓசை ஓய்ந்து நிச்சத்தமாயிருந்தது. ஆகாயம் கரிய மேகங்களால் மூடப்பட்டு ஒவ்வொரு நிமிஷமும் மழை பெய்யும் என்று தோன்றிக் கொண்டிருந்தது. வீட்டிலிருக்கும் ஒருவருடைய முகத்திலும் மலர்ச்சி யிருக்கவில்லை. ஒவ்வொருவரும் அவரவர்களுடைய வேலையில் ஆழ்ந்திருந்தனர். ஒருவருக்கொருவர் பேசவேயில்லை. இவ்வாறு வெளியில் அமைதி காணப்பட்டபோதிலும் உள்ளூரப் புயற்காற்றடித்துக் கொண்டிருந்தது என்பது நன்றாக விளங்கிக்கொண்டிருந்தது. அந்த குழந்தைகளிருவரும் முற்றத்தில் சிறிய வீடு கட்டிவிளையாடிக்கொண்டிருந்தனர். உமையின் இளைய தாய் தன் சகோதரியுடன் பேசிக் கொண்டிருந்தனள்.

சற்றுநேரத்திற்கெல்லாம் தமக்கை சொன்னாள்: "ஆனால் இது நிச்சயந்தானா?"

"நிச்சயந்தானா என்றால்? இதற்கு வேறு வழி என்ன! நாங்கள்தானே எல்லாவற்றையும் கவனிக்கவேண்டியது."

அவள் வெளியிற் போய் விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகளைப் பரபரவென்று இழுத்துக்கொண்டு வந்தாள்.

திடீரென்று பலமான புயற்காற்றடிக்கலமாயிற்று. வீட்டின் கதவுகளும், ஜன்னல்களும் மூடப்பட்டன. உமாமாத்திரம் தன் அறையின் கதவை மூடவில்லை. உன்மத்தமான அந்த பஞ்சமகாபூதத்தின் ஆனந்தத்தாண்டவத்தை அவள் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாள்.

வெளியிற் புயற்காற்று நிமிஷத்திற்கு நிமிஷம் பலமாக அடிக்கலாயிற்று. உன்மத்தனான தைத்தியனுடைய திருவிளையாட்டைப் போல் தோன்றியது. அவள் வெளியில் வந்து அந்த கரிய ஆகாயத்தின் ஆசிரயம் பெற்றாள். ஆப்த இஷ்டர்களுடைய செய்கையை விட அவ்வாகாயம் அதிக பிரசன்னமாயிருந்தது.

ஒரு வேலைக்காரி வந்து உமையிடம் சொன்னாள்: "அம்மா, தங்களைக் கூப்பிடுகிறார்கள்." உமா உள்ளே போனபோது அவ்விரு சகோதரிகளும் கம்பீரமான முகத்துடன் உட்கார்ந்திருந்தார்கள்.

அவள் உள்ளே வந்ததும் அவளுடைய சிற்றன்னை உரக்கச் சொன்னாள்: "உன்னுடைய சாமானை எல்லாம் கட்டிக்கொள். நீ நாளைய தினம் புறப்பட வேண்டும்."

உமா அப்படியே அசைவற்று நின்றுவிட்டாள். சற்றுப் பொறுத்து அவள் கேட்டாள்: "என்னை நீங்கள் என் அனுப்புகிறீர்கள் அம்மா? நான் என்ன குற்றஞ் செய்தேன்?"

"பெண்ணே! இப்பொழுது வெகு நல்லவளைப் போல் பாசாங்கு பண்ணாதே. அதெல்லாம் ஒன்றும் செல்லாது" என்று அவளுடைய சகோதரி மத்தியில் சொன்னாள். "உன்னுடைய குட்டெல்லாம் வெளியாகிவிட்டது. தெரிந்ததா? நான் பிரயாகைக்கு யாத்திரை போகப் போகிறேன். பிறகு அங்கிருந்து காசிக்குப் போகிறேன். நீ என்னுடன் வந்து உன்னுடைய பாபத்திற்காக பிராயச்சித்தம் பண்ணிக்கொள். இந்து விதவை இன்னும் செய்வதென்ன விருக்கிறது? இப்படி என்னை இமைகொட்டாமற் பார்க்காதே! எனக்கு இந்த போக்கிரித்தனமெல்லாம் பிடிக்காது! உன் தகப்பன் சொன்னதற்காக நான் இக்காரியத்தை ஒப்புக்கொண்டேன். இல்லாவிட்டால் உன்னைப்போன்ற சற்குணமுள்ள பெண்ணின் துணை எனக்கு ரொம்பத்தான் தேவை!"

உமா தன் அறைக்குட் போனாள். ஜன்னல் வழியாக மழைத் துளிகள் உள்ளே வந்து கொண்டிருந்தன. ஆனால் அதை அவள் கவனிக்கவில்லை. ஆனால் அவள் போகத்தான் வேண்டும்! அவளுடைய பிரியமான வஸ்துக்களை எல்லாம் விட்டுப்பிரிய வேண்டிய நேரம் நெருங்கிவிட்டது. அவள் என்ன செய்வாள் பாவம்! அவளோ ஓர் இந்து விதவை. எதன் பேரிலும் அவளுக்கு எவ்வளவும் அதிகாரமில்லை. பிரியமான வஸ்துக்களை விட்டுப் பிரிவது அவளுக்கு மகத்தான பாபம் என்று தோன்றியது. ஆனால் அவளுக்கு சுதந்திர

மேது? அதனால் அவளுக்கு மிதமிஞ்சின துக்கமுண்டாயிற்று.

இதற்குள் வீட்டில் எங்கோ கூக்குறல் உண்டாயிற்று. சம்புசரணர் அவசரமாய் உள்ளே வந்தார். உமா அங்கேயே இருந்தனள்.

"ரொம்ப துன்பம் ஏற்பட்டு விட்டது! இப்பொழுது அவனுடைய சிறிய தந்தைக்கு நான் என்ன சொல்லுவது?" என்று சம்புசரணர் சொன்னார். "நீங்கள் யாராவது விசுவநாதனைப் பார்த்தீர்களா?" என்றார்.

மாயீஸாஹெப் சொன்னார்: "யாரும் பார்க்கவில்லை, ஏன்? அவனுக்கு என்னவாயிற்று? அவன் இன்று ஊருக்குப்போவதாயிருந்தான். ஒரு சமயம் போயிருப்பான்!"

"இத்தகைய இந்தக் காற்றில் அவன் ஊருக்குப் போகப்போகிறானா?" என்று சம்புசரணர் உரக்கக்கூவினர். "அவன் படகிலுட்கார்ந்து போயிருக்கவேண்டும். அப்படியானால் அவனுடைய சரித்திரம் முடிந்து விட்டது போலும்! ஜனங்களுடன் ஒரு படகு முழுகி விட்டதென்று நான் இப்பொழுதுதான் கேள்விப்பட்டேன்!"

எந்த உமைக்கு அவள் மாற்றாந்தாயின் இரண்டு வார்த்தைகள் கண்ணீர் சொறிவதற்கு போதுமாயிருந்ததோ அவளுடைய கண்களிலிருந்து இப்பொழுது நீரே வரவில்லை. அவள் ஒரு பதுமையைப்போல் அசைவற்று இருந்தாள்.

இரவு வெகு நேரமாகியும் புயற்காற்று அடங்கவில்லை. கிட்டத்தட்ட நடு இரவில் விஷ்ணு அவசர அவசரமாய் உமையின் அறைக்குள் வந்து ஓவென்றலறி அழலானான். "அக்கா! விசுவநாத அண்ணா முழுகிப் போய்விட்டாராடி! இது எனக்கு போலா சொன்னான். நான் சங்கதி விசாரிப்பதற்காக ஆற்றங்கரைக்குப் போனேன். எல்லோரும் அப்படியே சொன்னார்கள். படகு முழுகின பிறகு அவர்கள் கரைக்கு வந்திருந்தனராம். மறுபடியும் ஒரு பெண்ணை ஆற்றிலிருந்து எடுக்கும்பொருட்டுப் போனாராம்!"

விஷ்ணு துக்கத்தினால் அலறிக்கொண்டு ஈரமான தரையிற் கிடந்து புரளலானான்; ஆனால் அவனுடைய தமக்கை இடத்தை விட்டசையவில்லை.

சுரேசனும் அவனுடைய தமக்கையும் காலையில் புறப்படுவதாயிருந்தனர். இன்னும் இருளாகவே யிருந்தது. அப்பொழுதே அவர்கள் உமையை எழுப்பும்பொருட்டு அவளுடைய அறைக்குச் சென்றனர். உமா அங்கிருக்கவில்லை, விஷ்ணு அந்த ஈரமான தரையிற் கிடந்தான். வீடு முழுவதும் தேடியான பிறகு மாயீஸாஹெப் சென்று சம்புசரணரை எழுப்பினார். இப்பொழுது ஒவ்வொருவரும் எழுந்து உமையைத் தேடலானார்கள். கடைசியில் ஒரு வேலைக்காரி சற்று நேரத்திற்கு முன் பின்புறத்துக் கதவு திறந்த சத்தம் தான் கேட்டதாகவும் ஆனால் அது பூனை பெருச்சாளி ஏதாவது சத்தம் செய்திருக்கும் என்று நினைத்து அதை கவனிக்கவில்லை என்றும் சொன்னாள்.

சம்புசரணர் கையில் விளக்கு ஒன்றை எடுத்துக்கொண்டு சொன்னார்: "நான் அவளைத் தேடிப் பிடிக்கிறேன். நீங்கள் ஒருவரும் என்னுடன் வராதீர்கள்."

அவர் போனதும் விஷ்ணு இருட்டில் அவரைப் பின் தொடர்ந்தான்.

சம்புசரணர் வீட்டிலிருக்கும் மரம் செடி கொடி எல்லாம் தேடிப்பார்த்துவிட்டு ஆற்றங்கரைக்குப் போனார். அங்கு படிக்கட்டின் மீது ஏதோ வெண்மையாகக் காணப்பட்டது. சம்புசரணர் இறங்கிப் பார்த்தார். அது உமா. ஆற்றுநீர் சல சலவென்று சத்தம் பண்ணிக்கொண்டு அவளுடைய காலின் கீழிருந்து வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. வானம் கரிய மேகங்களால் மூடப்பட்டிருந்தமையால் மின்னலின் வெளிச்சத்தைத் தவிர வேறு ஒருவிதமான வெளிச்சமு மிருக்கவில்லை. இத்தகைய பயங்கரமான புயற்காற்றில் அவள் அசைவற்று உட்கார்ந்திருந்தாள்.

சம்புசரணர் கோபத்துடன் சொன்னார்: "உமா! புறப்படு, போகிற நேரமாயிற்று."

உமா எழுந்து வாயைத் திறவாமல் தந்தைக்குப் பின் நடக்கலானாள்.

விஷ்ணு சரேலென்று அவளருகிற் சென்று ஆத்திரத்துடன் கேட்டான்: "அக்கா, இவ்வளவு நேரம் எங்கிருந்தாய்?"

அவனுடைய தந்தை கோபத்துடன் அவனை நோக்கிச் சொன்னார்: "நட நட. உன் அக்காளுடன் பேசாதே."

சற்று நேரத்திற்கெல்லாம் உமா தன் ஜன்ம பூமியை விட்டு பரிச்சயமில்லாத உலகத்திற் பிரவேசித்தாள். ஸ்திரீகளுடைய வண்டியில் அதிகக்கூட்டம் இருந்தபடியால் அவளுக்கு உட்கார இடம் கிடைக்கவில்லை. உமா வாயிலண்டை நின்றுகொண்டிருந்தாள். அந்த கிராமம் மறைகிறவரையில் அவள் அதைப் பார்த்த வண்ணமாயிருந்தாள். மற்ற ஸ்திரீகள் தம் குழந்தைகளுக்குப் பால் கொடுத்துக் கொண்டே ஒருவருக்கொருவர் இல்லற சம்பந்தமாகப் பேசிக்கொண்டிருந்தனர். உமையுடன் வந்தவள் தனக்கு உட்கார இடம் கொடுக்கவில்லை என்று மற்ற ஸ்திரீகளுடன் பலமாக சண்டையிட்டுக்கொண்டிருந்தனள்.

மாலை நேரம். கங்கை யமுனை இவ்விரண்டின் பிரவாகமும் ஒன்றாகச் சேர்ந்து சமுத்திரத்தை நாடி ஓடிக்கொண்டிருந்தது. நாள் முழுதும் எல்லா கட்டத்திலும் யாத்திரைக்காரர்கள் நீராடிக் கொண்டே இருந்தனர். ஆனால் இப்பொழுது கட்டத்தில் கூட்டங் குறைந்து கொண்டே இருந்தது. இதற்குள் மூன்று ஸ்திரீகள் வந்து ஒரு கட்டத்தின் அருகில் நின்றனர். அவர்கள் மூவரும் விதவைகளுக்குரிய வெள்ளை வஸ்திரங்களை உடுத்திருந்தனர். முதல் ஸ்திரீ ஒரு வேலைக்காரியாவாள். இரண்டாவது ஸ்திரீ சற்று ஸ்தூலசரீர முள்ளவளாயிருந்து அவளுடைய முகம் குரூரமாகவும் கம்பீரமாகவும் காணப்பட்டது. மூன்றாவது ஓர் இளம்பெண். அவளுடைய கண்களால் அவள் மிக்க பயந்திருப்பதாகத் தெரியவந்தது.

அந்த ஸ்தூல சரீரமுள்ள ஸ்திரீ சற்று சலிப்புடன்சொன்னாள்: "அந்தப்பாவி சாஸ்திரி எங்குபோனான்? நாவிதனை அழைத்து வருகிறேனென்று சொல்லிப் போய் ஒரு ஜாமமாயிற்று. நாங்கள் திரும்பி வீட்டிற்குப் போவது தான் எப்போ?"

இதற்குள் சாஸ்திரி ஒரு நாவிதனை அழைத்துக்கொண்டு வந்தான். கங்கை யமுனை இவைகளுடைய பரிசுத்தமான சங்கமத்தண்டை இந்த நாவிதர்களுடைய கூட்டம் அதிகம்.

நாவிதன் கீழ உட்கார்ந்து தலை கருவிகளை எடுக்கலானான். அந்த பெரியம்மாள் அந்தப் பெண்ணைநோக்கிச்சொன்னாள்: "பெண்ணே! உம், சீக்கிரம் முடித்துகொள். எங்களுக்கு ஏற்கனவே நேரமாயிற்று."

யமுனையின் நீலவர்ணமான பிரவாகம் கங்கையின் சுத்தமான பிரவாகத்துடன் வந்து சேருமிடத்தில் அப்பெண்மணி இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். தன் கேள்விக்கு விடைகிடைக்காததைக் கண்டு அந்தம்மாள் முன்னுக்கு வந்து அவளை தரதரவென்று இழுத்து நாவிதனுக்கருகிற் கொண்டு வந்து விட்டனள். நாவிதன் ஒரு கையில் கத்திரி எடுத்துக் கொண்டு மறு கையால் தரையிற் புரண்டு கொண்டிருக்கும் அப்பெண்மணியின் கூந்தலைப் பிடித்தான். அவ்விளம் பெண்ணின் உடல் முழுதும் நடுக்க முற்றது. தன் கூந்தலை அவன் கையினின்றும் விடுவித்துக் கொண்டு அவள் பின்வருமாறு உறக்கக் கூவினாள்: 'என் கூந்தலைத் தொடாதே.'

விசுவநாதனுடைய ஸ்பரிசத்தால் புநிதமான கூந்தலின் பிரிவை அவள் எவ்வாறு ஆற்றுவாள்! பரபுருஷனுடைய ஸ்பரிசத்தினால் அது அபவித்திரமானால் அவள் எப்படி சகிப்பாள்? அவளுடன் வந்தவளுடைய முகம் கரேலென்றாயிற்று. ஒன்றும் பேச அவளுடைய நாவெழவில்லை. அவளுடைய கோபக் குறியைக் கண்டு அந்த சாஸ்திரி அப்பெண்ணின் அருகில் வந்தான்.

கொடிய வேடர்களால் பின்தொடரப்பட்ட மானைப்போல் அவள் பயந்து நடுங்கலானாள். அவள் நாற்புறமும் சுற்றிச்சுற்றிப் பார்த்தாள். தயவற்ற கொடிய மனிதர்களைத் தவிர வேறெவரும் காணப்படவில்லை. அவள் பேரில் தயவு புரியப்பட்டவர் அவ்விடத்தில் ஒருவரும் இருக்கவில்லை!

அந்த சாஸ்திரி அவளைப்பிடிக்க வந்ததும் கீச்சென்று ஒரு கூச்சலிட்டாள். அப்பெண்மணி மின்னல் ஒளியைப்போல் அவன் கையினின்றும் தப்பி தண்ணீரிற் குதித்து மறைந்தாள். மாலை நேரத்திய மந்தமான பிரகாசத்தில் அவளுடைய முகம் நீலவர்ணமான ஜலத்தில் மிதக்கும் சுப்பிரமான கமலத்தைப்போல் ஒரு தரம் மாத்திரமே காணப்பட்டது. அடுத்த க்ஷணத்தில் அந்த நீலமான பிரவாகம் அவள் தலை மேலிருந்து பிறவாகித்துக் கொண்டு போயிற்று. (மனோரஞ்சனிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.)

கேஸரியின்.

லோத்ரா.

ஸ்திரீகளுக்குள்ள சகல கஷ்டங்களையும் நிவர்த்திக்கும்.

பயனடைந்த பெண்மணிகளின் அபிப்பிராயம்

ஸ்ரீமதி மிஸர்ஸ் காத்தர் எழுதுகிறார்: "நான் பத்து வருஷ காலமாய் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ருது சூலை, வயிற்று வலி கேசரியின் 'லோத்ரா' வை உபயோகித்த பிறகு அதியாச்சரியமாய் நிவர்த்தியாயிற்று."

ஸ்ரீமதி கோபால பணிக்கர் எழுதுவதாவது:—'லோத்ரா' உபயோகித்ததால் நானும் என் சகோதரியும் ருது சூலைக் கஷ்டத்தினின்று நிவர்த்திக்கப்பட்டோம்.

இது எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்.

ஆயுர்வேத அவுஷத சாலை, எழும்பூர், மதராஸ்.

கிரேட் ஈஸ்டர்ன் லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

(இங்கிலாந்தில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு ஸ்டிரெயிட் செட்டில்மெண்டில் இணைக்கப்பட்டது.)

55-வது வயது வரையில் எல்லா நபர்களையும் இன்ஷியூர் செய்யப்படுகிறது.

ஸ்திரீகள் கூட இன்ஷியூர் செய்யப்படுகிறார்கள்.

எல்லா கேஸுகளிலும் பறிமுதல் செய்யப்படாது தானாகவே ஆதரவு கிடைக்கக் கூடியது. காலத்தில் ப்ரீமியம் கட்டாததற்காக பாலிஸிகள் காலாவதியாக விடப்படமாட்டா. ஆயுள்காலத்தில் அகஸ்மாத்தாகவோ அல்லது வியாதியினாலேயோ அசக்தர்களாகி விட்டால் அவர்களுக்கு பாக்கியுள்ள காலத்திற்கு பிரீமியங்கள் வாங்கப்படமாட்டா. எந்த தேதி ஏற்பட்டதோ அதுவரையிற் சேர்ந்துள்ள இன்ஷியூர் செய்யப்பட்ட தொகை கொடுக்கப்படும்.

தொழில், வசிக்குமிடம், அல்லது பிரயாணம் ஆகியவற்றில் பூரணசுதந்திரம். குழந்தைகளுக்கான எண்டௌமெண்டும், மற்றுமுள்ள பிளான்களும் உண்டு. மாகாணமெங்கும் சாமர்த்தியமான ஏஜெண்டுகள் தேவை.

பிரகடனப் பத்திரத்திற்கு எழுதவும்.

R. வேங்கடாசாரி,

சீப் ஏஜண்டு, "ரிதர்டன் ஹவுஸ்," வேப்பேரி, மதறாஸ்.

தமிழ் தெரிந்தவர்கள் வெகு சுலபமாக இங்லீஷ் கற்றுக்கொள்ளக் கூடியது.

10,000 ஜனங்களால் வாசித்து பிரபல மடைந்தது.

மைது லேடி டிரேட்மார்க் போட்டிருக்கும் புஸ்தகம் பார்த்து வாங்குங்கள்.

இப்புத்தகத்தில் சொல்லிய படி இல்லாவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

ஆங்கில ஆசான்.

60 நாளையில் இங்கிலீஷ் யாவரும் கற்றுக் கொள்ளலாம்.

இது இங்கிலீஷ் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக் கொள்ளக் கூடிய சுலபமான தமிழில் சுமார் 600 பக்கங் கொண்டபெரிய புத்தகம். 5-ம் பதிப்பு.

விலை ரூ. 2. தாபற் செலவு அணு 8.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை தெருவு, மதராஸ்.

சிறந்த தமிழ் புத்தகங்கள்:

வால்மீகி இராமாயண வசனம்:—பண்டித நடேச சாஸ்திரியாரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. உயர்ந்த பதிப்பு. நல்ல கனமான காகிதத்தில் அச்சிட்டு நேர்த்தியான காலிகோவில் அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

	ரூ.	அ.	பை.
6 காண்டங்கள் ...	15	0	0
சுந்தரகாண்டம் தனியே ...	2	4	0

'குறள் நானூறு':—மூலமும் உரைகளும், மொழி பெயர்ப்பும். 4 அணு.

'ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி கீர்த்தனைகள்':—650 கீர்த்தனங்கள் அடங்கியது ரூ. 3.

'குசிகர் குட்டிக் கதைகள்':—படிக்கப் படிக்கத் திகட்டாதன! இடித்து இடித்துப் புத்தி கூறுவன! வெடிக்க வெடிக்கச் சிரிக்கச் செய்வன! அ. மாதவ ஐயர் எழுதியவை. ரூபா 1—8—0.

'முத்து மீனாக்ஷி':—ஒரு பிராமணப் பெண்ணின் சுய சரிதை: அ. மாதவ ஐயர் எழுதியது. விலை அணு 8.

கே. மஹாதேவன்,
1, ராமசாமி பிள்ளைத் தெருவு,
வேப்பேரி. சென்னை

சிந்தாமணியைப் பற்றி சில அபிப்பிராயங்கள்.

(ஒரு சகோதரி எழுதியது.)

I.

சகோதரி வி. பாலம்மாளுக்கு

நீங்கள் எழுதி வரும் 'சிந்தாமணி' வியாசங்கள் ஒவ்வொன்றும் படிக்க சொற் சுவையும் பொருட் சுவையும் பொருந்தி படிப்பவர்க்கு மிகவும் உற்சாகமாகவும் நல்வழிக்கு ஆதாரவை யளிப்பதாயு மிருப்பதை தெரிவிக்க விரும்புகிறேன்

II.

சகோதரியே!

தாங்களனுப்பிய "சிந்தாமணி" என்னும் பத்திரிகையைப் படித்தேன். ஸ்திரீகள் விஷயத்தில் தாங்கள் இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டதற்கு தங்களுக்கு நன்றியை எவ்விதம் பாராட்டுவதென்று எனக்குத் தெரியவில்லை.

வாசனைகளில் சிறந்தது.

ஆட்டோ டில்பஹார்.

(ரிஜிஸ்டர்டு)

அழிவில்லாத வாஸனையும், வாஸனைத் தொழிலில் நிகாற்றதும், மிகவும் நுட்பமான மணப்பற்றுதலுமுள்ளது.

'மற்றவைகளுக்கு மாறுபட்ட' குணம் இதனிடமிருப்பதால், இதுவே சிறப்புற்று மற்றவைகளுக்குச் சளைக்காமல் நிற்கின்றது. மல்லிகை, மோகரா (மல்லிகையில் ஒருவிதம்) மலர்கள் சேர்ந்துள்ள ஆச்சரியகரமானதும், இன்பத்துடனும் கூடிய வாஸனையை ஆட்டோ டில்பஹார் கொடுக்கின்றது. உங்கள் கைக்குட்டையில் சில துளிகளைத் தெளித்துக்கொண்டு, வெகு நாளைக்கு அடங்காதிருக்கும் வாசனையை அனுபவியுங்கள்.

ஆட்டோ டில்பஹாரில் எவ்வித ஸ்பிரிட் அல்லது சாராயக்கலப்பு மில்லை. ஆனால் அதில் புஷ்பங்களின் சத்துக்களே சேர்ந்திருக்கின்றன. ஆகையால் வைதீக காரியங்களுக்கும்கூட இதை உபயோகிக்கலாம். ஸபிரிட்டும், ஜலமும் கலந்துள்ள வாஸனையில் நீங்கள் பணத்தைச் செலவிடக்கூடாது. இவைகளைக் கடைகளில் வாங்கும்போது ஆட்டோ டில்பஹார் வாங்கவேண்டு மென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு கவனித்து வாங்கவும். "சமதை யென்றுள்ள" உபயோகமற்ற போலிச்சரக்குகளை வாங்காதீர்கள்.

சுமார் அரை அவுன்ஸ் புட்டி விலை	ரூபாய்	2	0	0
கால் அவுன்ஸ் ,,		1	4	0
1 டிராம் ,,		0	12	0

வாசனை கார்டு 1 அணு; தபால் பாக்கிங் சார்ஜ் வேறு.
நீங்கள் கொடுக்கும் பணத்திற்குத் தகுந்த அளவு புட்டியை வாங்குங்கள்.

குறிப்பு:—மேற்கண்ட சாமான்களில் உண்மையானதை உங்கள் ஊர் வியாபாரிகளிட மிருந்தும் கடைகளிலிருந்தும் கிடைப்பது கஷ்டமாயிருந்தால், இதைத் தயாரிப்பவர்களுக்கு நேரில் எழுதித் தருவித்துக்கொள்ளவும்.

ஆங்கிலோ இந்தியன் டிரக் & கெமிகல் கம்பெனி,
மானியுபாக்சரிங் கெமிஸ்டுகள் & வாசனை வியாபாரிகள்,
131—155, ஜம்மாமஸ்ஜீத், பம்பாய் 2.

சுதேசியத்திற்கு மதராஸ் பிரசித்திபெற்றது.

கிர்லாஸ்கர் பம்புகள் சுதேசி பம்புகளே.

சுதேசத் தொழிலை ஆதரியுங்கள்.

அந்நிய நாட்டு பம்புகள் எல்லாவற்றையும்விட மேலானதென்று பெயர் வாங்கிவிட்டது என்பதை அறியுங்கள். ஏனென்றால் அவை

1. வேலைக்கு இலேசானது.
2. அமைப்பதற்கு சுலபமானது.
3. பார்வைக்கு அழகானது.
4. அதிக நாள் உழைக்கக்கூடியது.
5. விலையும் சாஸமானது.

குறிப்பு:—பம்பாயிலிருந்து கிர்லாஸ்கர் பம்புகளைத் தருவிப்பது உள்ளூரில் அந்நியநாட்டு பம்புகளை வாங்குவதைவிட மிகவும் மலிவானது.

பூரா விவரங்களுக்கும், சோல் ஏஜண்டுகளுக்கு எழுதவும்:—

K. B. JOSHI & CO.,
321, Hornby Road, P. B. No. 534, Bombay.
Baranches:—KARACHI & CALCUTTA.
Show Room:—KIRTI BUILDINGS,
Forbes Street, Fort, Bombay.

சுதேச பரிபாலினி.

ரங்கூனிலிருந்து வெளியாகும் தமிழ் தினசரிப் பத்திரிகை.

பத்திராதிபர்: P. E. முதலியார்.

பர்மாவில் நடைபெறும் அரசியல் முதலிய சகல விஷயங்களையும் வெளியிட்டுவரும் தினசரி இது ஒன்றே. விளம்பரம் செய்வோருக்குப் பயனளிக்கக்கூடியது இதுவே.

வருஷசந்தா: உள்ளூர்: ரூ.22 வெளியூர்: ரூ. 26

விலாசம்: மானேஜர், சுதேச பரிபாலினி,
31-32, பார்ஸ்டிரீட், ரங்கூன்.

விவேகபாநு.

தென்னாப்பிரிகாவில் வசிக்கும் தமிழ் மக்களின் முன்னேற்றங்கருதி வெளிவரும் தமிழ் வாரப்பத்திரிகை. இதில் அரசியல், மதாசாரம் முதலிய விஷயங்களும் தென்னாப்பிரிகாவில் நடைபெறும் விஷயங்கள் முழுதும் வெளியிடப்படுகின்றன. தூரதேசத்திலிருக்கும் சகோதரர்களின் க்ஷேமலாபங்களை விவரமாகத் தெரிவித்துவரும் விவேகபாநுவை ஒவ்வொரு இந்தியரும் வரவழைத்துப் படித்தல் கடமையாகும். ஒருவருஷ சந்தா 15 ஷில்லிங். இந்தியா, சிலோன், மோரேஷஸ், பினாங்கு, சிங்கப்பூர், ரோடேசியா முதலிய இடங்களுக்கு 17 ஷில்லிங்.

விலாசம்:—
மானேஜர், விவேகபாநு,
86, க்வீன் ஸ்டிரீட், டர்பன், நெட்டால்.

விலை ரூ. 2 —சரோஜனி.— விலை ரூ. 2

தமிழ் உலகமே பிரமித்து வியப்படையும் ஓர் அதியற்புத சிங்காரமான நவரசம் ததும்பும் துப்பறியும் நாவல். வங்காள நகரச் சித்திரக்காரரைக் கொண்டு எழுதின பத்து அழகான சித்திரப் படங்கள் அடங்கியது.

புத்தகத்தைக் கையில் எடுத்து வாசிக்க ஆரம்பித்துவிட்டால் ஒருவித வசியமாக்கப்பட்டு படித்துமுடியுமட்டும் கீழே வைக்க மனம் வராதென்பது நிச்சயம்.

எம். எஸ். ராமுலு அண்ட் கம்பெனி,
புஸ்தகவியாபாரிகள், 64, மன்னார்சாமிகோயில் தெருவு,
இராயபுரம். மதராஸ்.

கைமேற்பலன்! அதை நீங்கள் கட்டாயம அடையவேண்டும்

கீழே காட்டியுள் புத்தகங்களை வாசிப்பதனால் நீங்கள் கைமேற்பலனடைவீர்களென்பது நிச்சயம்!

		ரூ	அ.	பை
1	வியாசக் கொத்து அநேக அரிய வியாஸங்களைக் கொண்டது	2	0	0
2	அதிசயப் பொக்கிஷம் ஒரு சாமானியமனிதன் கோடீச்வரனான விந்தை	1	8	0
3	இன்னுரைக் களஞ்சியம் 40 அருமையான விஷயங்களைக் கொண்டது	1	0	0
4	விஷயாஸமஞ்சரி எழுபது விஷயங்களை விரிவா யுரைப்பது	1	0	0
5	திருவள்ளுவரும் அவரது உபதேசங்களும் புதிய முறையில் வரையப்பட்டது	0	8	0

இன்னும் அநேக புதிய, அரிய, அறிவை வளர்க்கக்கூடிய புத்தகங்கள் எங்களிடம் உண்டு.

நவீன கதா புத்தகசாலை, 122, Montgomery St., இரங்ககூன்.

ஜரிகையில்லாத பட்டுச்சேலைகள்

18 முழம் நீளம் $2\frac{1}{2}$ முழ அகலம். பட்டினால் ருத்திராக்ஷகரை போட்டவை. உடல் மிகவும் அழுத்தமானது. எல்லா நிறங்களிலும் கிடைக்கும். சேலை 1க்கு விலை ரூபா 35.

ஷை மாதிரி சேலைகள் ஜரிகைக் கரைபோட்டது

சேலை 1-க்கு விலை 50 ரூபாய் முதல் 80 ரூபாய் வரை. ரவிக்கைகள் எல்லா நிறங்களிலும், எல்லா மாதிரியிலும் ரவிக்கை 1-க்கு 3 ரூபாய் முதல் 5, 6, 7, 8, 10 வரை.

பெரிய கேட்லாக் "இனம்."

விலாசம்:— மானேஜர், பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

SILK PITAMBER CO., BENARES CITY.

மஹானால் கிடைத்த "அருமையான மூலிகை"

தமிழ்வைத்திய சங்கத்தில் தங்கமெடல் பெற்றவை.

குஷ்டம், க்ஷயம், மூலம், கிராணி, பிரமை, பைத்தியம், இழுப்பு, வலிப்பு, மூத்திர வியாதி முதல் காட்டப்பட்ட சகலவித வியாதிகளும், பார்வை, பில்லி, சூனியம், வைப்பு, ஏவல், விஷவியாதி, செய்வினை எனச் சொல்லப்பட்ட பலவிதக் கஷ்டங்களும் கவலைகளும் உடனே நிவர்த்தியாகும்.

☞ ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்களைக் காணலாம்

புத்திர பாக்கியமில்லாதவர்களுக்கு 48 நாளில் கேர்ப்பம் உண்டாகும்.

பிரபலமான பேப்பர்களிலெல்லாம் பார்த்திருப்பீர்கள். உலகப்பிரசித்திபெற்றவை எதற்காகத் தேவையிருந்தாலும் ஆரம்பமுதல் சரிவர விபரமாக எழுதுங்கள். தங்கள் முழுவிலாசத்துடன் பதிலுக்கு 1 அணா ஸ்டாம்பு அனுப்பினால் சகலவித விபரமும் அனுபந்தமும் கிடைக்கும். ☞ எந்ததேச ஸ்டாம்பும் அனுப்பலாம்.

முக்கியமான காரியங்களுக்கு ஸ்பெஷலாக வேண்டியதைச் செய்தனுப்பக்கூடும்

மானேஜர், பாலசந்திரன் ஆபீஸ், மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா, சவுத் இந்தியா.

தேசபக்தன். ஓர் தேசியத் தமிழ்ப் பத்திரிகை.

பிரதி திங்கள், புதன், வெள்ளி தோறும் கொளும்பிலிருந்து வெளி வருவது.

ஆசிரியர் கோ. நடேசய்யர். சந்தா விவரம்.

கொழும்பில் ஆள் மூலம் வருஷம் 1-க்கு ரூ. 9 0 0 — ஷை ஷை 6-மாதம் ரூ. 5 0 0

பிறவிடங்கள் (தபால் மூலம்) வருஷம் 1 க்கு ரூ. 13 0 0 — பினாங்கு, சிங்கப்பூர் முதலிய விடங்களுக்கு வருஷம் 1 க்கு ரூ. 16 0 0

தனிப்பிரதி 6-சதம்.

சந்தாத்தொகை முன்பணமாகவே கட்டவேண்டும். 6-மாதத்திற்குக்குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விலாசம்:—
மானேஜர், தேசபக்தன் ஆபீஸ், நெ. 43, ரெக்ளமேஷன் ரோடு, கொழும்பு.

(இந்தியன் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் கம்பெனி, லிமிடெட்.)

தலைமையாபீசு : பம்பாய்.

சேர்மன்.

ஸர் ஹார்மஸ்ஜி ஸி. டின்ஷா, Kt., M.V.O., O.B.E.

(இவர் ஏடனிலுள்ள கௌவாசி டின்ஷா அண்டு பிரதர்ஸ் கம்பெனியின் முதலாளியும், பம்பாயில் பிரபல வர்த்தகரும், மைசூரில் பிரபல இஞ்சினீயரும் கிலச்சுமாந்தாரும் ஆவார்.)

ஆலோசனைக் கமிட்டித் தலைவர் :

ஸர் டின்ஷா எடல்ஜி வாச்சா, Kt., J. P.

(இம்பீரியல் பாங்குமத்தியசங்கத்தின்கவர்னர்.)

தொழிலபிவிருத்தி, ஒற்றுமை, உண்மை உழைப்பு, கல்வி, பொது நன்மை இவைகளைப் பிரசாரம் செய்து வரும் நல்லியக்கமெனப் பேர் பெற்ற பல தலைவர்களால் இந்த ஸ்தாபனம் புகழப்பெற்றது. மிகப் பிரசித்திபெற்ற முதலாளிகளுக்குப் பிரதிநிதியாகவிருந்து சுதேசீய இயக்கத்தை பரவச் செய்வது. தென்னிந்தியா பர்மா ஸிலோன் முதலியவிடங்களின் முக்கிய நகரங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

மைசூர் சமஸ்தானத்தின் வியாபாரம், கைத்தொழில் இவைகளின் அபிவிருத்தியை உத்தேசித்து, சில பிரமுகர்களின் வேண்டுகோளுக்கிணக்கி, மேற்படி கம்பெனியார் தங்கள் டைரெக்டர்களில் ஒருவரும், பம்பாயில் பிரபல தொழிலபிமானியுமாகிய A. B. கூடரேஜ், B. A. என்பவரை பெங்களூருக்கழைத்துள்ளார்கள். புதிதாக ஒரு கம்பெனியை ஸ்தாபித்துத் தற்போது மைசூர் கவர்மெண்டின் ஆதாவின்கீழ் இருக்கும் சில கைத்தொழிற்சாலைகளை விலைக்கு வாங்கவோ அல்லது அவைகளின் நிர்வாகவிஷயங்களை மேற்கண்ட கம்பெனியின் மூலமாகவே நடத்திவாவோ, தீவிர ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. மேற்சொல்லியிருக்கும் ஸ்தாபன விஷயத்தில் பல கைத்தொழில் நிபுணர்களும், பாங்கர்களும், பிரபல வியாபாரிகளும், செல்வாக்குடையவர்களும், இந்தியாவிலுமல்லாது ஐரோப்பா, அமெரிக்கா தேசங்களிலும்கூட வைக்கமுடன் கலந்துகொண்டிருப்பதால் கூடியசீக்கிரம் மேற்சொன்னவிஷயம் ஒருவித முடிவிற்கு வாலாமென சகலராலும் எதிர்பார்க்கப்படுகிறது.

விவரம் வேண்டுவோர்

பி. வி. சுப்ப ராவ்,

கௌரவ மானேஜிங் டைரெக்டர்,

இந்தியன் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் கம்பெனி லிமிடெட்,

பெங்களூர் ஸிடி.

ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம்.

ஸநாதன தர்மப் பிரசாரம் செய்யும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை.

வருஷ சந்தா:— உள்நாடு ரூ. 3

வெளிநாடு ரூ. 4

விலாசம்:

மானேஜர், ஸ்ரீராம கிருஷ்ண விஜயம், ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாபூர், சென்னை.

"தமிழ் நேசன்."

பத்திராதிபர் கெ. நரசிம்மய்யங்கார்.

இப்பெயருள்ள தமிழ் வாரப் பத்திரிகை கோலாலம்பூரினின்றும் பிரதி புதன்கிழமை தோறும் வெளிவருவதாகும். மலேயா நாட்டிலுள்ள தொழிலாளர்களின் முன்னேற்றங் கருதி முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பரஸ்பரம் அபிமானத்தையும் ஒற்றுமையையும் விருத்தி செய்யக்கூடிய வழியில் நடைபெறும். இப்பத்திரிகை தமிழரால் ஆதரிக்கக் கூடியதாகும். வருஷ சந்தா இந்தியா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளுக்கு ரூ. 7—0—0. வேண்டுவோர், மானேஜர், 'தமிழ்நேசன்,' 212, பத்துரோட், கோலாலம்பூர் (F. M. S.) என்று எழுதவும்.

மெய்கண்ட மித்திரன்.

சுக்கிர வாரந்தோறும் வெளி வருவது.

கிரவுன் பன்னிரண்டு பக்கம் கொண்டது.

தமிழருக்கு இன்றியமையாத பாஷாபிமானம், தேசாபிமானம், சமயாபிமானம், ஒற்றுமை முதலிய சன்மார்க்கங்களை விளங்க உரைப்பது. நடுவுநிலைமை கோணாது நின்று நியாயம் வழங்கும் இயல்புடையது.

உள் நாட்டுச் சந்தா விகிதம் தென்னாப்பிரிக்காவுக்குத் தபாற் கூலி உள்பட வருஷ சந்தா

பவுன்	1	0	0
ஆறு மாதங்களுக்கு	0	11	6
மூன்று மாதங்களுக்கு	0	6	0
ஒரு மாதத்துக்கு	0	2	0

சந்தாவை முன்பணமாக அனுப்பவதே முறை.

வெளியூர் சந்தா விகிதம் ரோடிஸியா, ஸிலோன், இந்தியா, பர்மா முதலிய இடங்களுக்கு வருட சந்தா தபாற்கூலி உள்பட

பவுன்	1	2	0
ஆறு மாதங்களுக்கு	0	12	6
மூன்று மாதங்களுக்கு	0	7	0

தனிப்பிரதி 4 பென்ஸ்

ஆசிரியர்,

மெய்கண்ட மித்திரன்,

பி. ஓ. பாக்ஸ் 628, பிரிட்டோரியா.

SIDDHA KALPA MAKARADHWAJA
(REGISTERED)

THE WONDERFUL DISCOVERY IN THE MEDICAL WORLD

FOR ALL "ACUTE" & "CHRONIC" DISEASES

ONE PHIAL OF 60 PILLS (for a Complete Cure).

Price Rs. 10. (Rs. TEN). V. P. Extra.

THE MADRAS AYURVEDIC PHARMACY, LTD.

44, Govindappa Naick St., G. T., Madras.

தமிழ் பிரசுரங்கள்.

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. G. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M.A. விலை அணா 10.
   Approved as a Library Book.

2. போஜ சரித்திரம்.—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L., ஸப்ஜட்ஜ், நாகபட்டணம். விலை அணா 10.
   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, **Part I-B, dated 19-5-1925.**

3. ராஜ ராஜ சோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள். R ரங்காசாரியாரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணா 8.
   Approved as a Text-Book suitable for School use.

4. இட்டார்க்கு இட்ட பலன்—ஆசிரியர் மிஸ் J. பொன்னுசாமி ராவ். விலை அணா 10.
   Approved as a suitable Text-Book, vide *Fort St. George Gazette*, **dated 24-7-23.**

5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் (சிந்தாமணி பத்திராதிபர்) எழுதியது. ராவ் ஸாஹெப் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ. 1—4—0.
   Approved as a Library Book.

6. தமிழ் வசன லக்ஷணம்—G. தாமோதர முதலியார், B.A. எழுதியது. விலை அணா 12.
   Approved as a Text-Book for Schools and Colleges, vide *Fort St. George Gazette*, **21st October 1913.**

7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1—6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7—12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.
   Parts I and II are approved as suitable class-books, vide *Fort St. George Gazette*, **Part I-B page 478, dated 3-6-24.**

9. சுகாதாரபோதினி.—(மூன்றாவது பாரத்திற்கு) K. வரதராஜ ராவ் இயற்றியது. விலை அணா 8.
   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, **Part I-B dated 19-5-1925.**

10. மனு சரித்திரம்—சென்னை க்ரிஸ்டியன் காலேஜ் தமிழ் போதகாசிரியராயிருந்த ஆர். இரங்காசாரியார், M.A., L.T. அவர்கள் இயற்றியது. விலை அணா 10.

SRINIVASA VARADACHARI & CO., TRIPLICANE AND MOUNT ROAD, MADRAS.

தமிழ்நாடு ... சென்னை-600 008
207605
Y15m24,N24CM

Some of the Subscribers to Chinthamani.

[illegible]ree Raja Rajeswara Sethupathi Avl., Raja of Ramnad, Ramnad.
[illegible]ri Raja K. Laxmi Prasada Rao Bahadur Garu, Zamindar, Urlam.
[illegible]. Venkatarama Iyer Avl., Dt. Munsiff, Tenkasi.
[illegible]. R. V. Sarma, Esq., Asst. Govt. Auditor, Calcutta.
[illegible]. Ramanatha Iyer Avl., Dt. Munsiff, Vellore.
[illegible]. Sivarama Krishna Iyer Avl., Govt. Pleader, Trichinopoly.
K. Sourirajalu Naidu Avl., Sub-Judge of Ramnad, Ramnad.
Dewan Bahadur T. S. Tyagaraja Iyer Avl., Rtd. Dt. Judge, Mylapore.
Mrs. J. Karunakara Menon, B.A. (Hons.), Madura.
S. Ambravaneswar, Esq., M.A., Asst. Acct.-General, Bombay.
Miss S. Sornaletchumy, Pajam Hospital, Pajam (F.M.S.)
V. Nagalingam Avl., Ry. Telephone Operator, Port Swettenham (F.M.S.)
N. Krishnaswami Naidu Garu, Sentul (F.M.S)
R. Sivaguru, Esq., Central Work Shops, Kuala Lumpur (F.M.S)
The Asst. Secretary, A. O. I. S. D. Library, Simla.
M. A. Somasundaram Pillay Avl., Market Rd., Taiping (F.M,S.)
The President, The Madras Social Club, Calcutta.
The Headmaster, Raja's High School, Sivaganga.
P. R. S. Ramasamy Pillay Avl., Main St., Kajang. (F.M S.)
Rao Saheb R. Krishna Rao Bhonsle Avl., M. R. A. S , Vepery.
R. M. A. L Manickam Pillai Avl., Moskee St., Medan.
W. T. Doraiswamy, Esq., Telegraph Office, Rangoon.
A. V. V. Iyer Avl., Currency Controller, Bombay.
The Secretary, Hindu Social Club, Rangoon.
B. S. Mani Iyer Avl., Dy. Inspector of Tamil Schools, Rangoon.
G. R. Subbarayar Avl., Sub-Judge, Madura.
C. S. Ekambaram Iyer Avl., Advocate, Rangoon.
P. C. Shunmugam Pillay Avl., Advocate, Moulmein.
S. S. Suryanarayanan, Esq., Bar-at-Law, Madura.
Mrs. Gopala Menon, Thallakulam, Madura.
S. Krishnamurthy Iyer Avl., Treasury Dy Collector, Tinnevelly.
L. C. Sami, Esq., Midlands Estate, Klang (F.M.S.)
M. S. Rathnasamy, Esq., Market Rd., Taiping (F.M.S.)
[illegible] L. R. M. Sinniah Chettiar Avl., Sitiawan (F.M.S.)
[illegible] A. Narayanan, Esq., c/o Paterson Simmons & Co., Ltd., Kuala Lumpur (F.M.S.)
[illegible] Thumbithurai Avl., Central Work Shops, Kuala Lumpur (F.M.S.)
[illegible] Thumbu Avl., do do
[illegible] Somasundaram Avl., do do
[illegible] Krishnier Avl., Station Master, do do
[illegible] S. Kandiah Avl., Electrical Dept., do do
[illegible] Somasundaram Avl., Loco Dept., do do
[illegible] Sivaramalingam Avl., Loco Dept., do do
[illegible] Sinnathamby Avl., Ways and Works Dept., do do
[illegible] Annamalai Avl., Loco Dept., do do

Some Select Opinions on "Chinthamani

Dewan Bahadur T. RANGACHARIAR, C. I. E., Dy. President, Indian Legislat Assembly, writes under date, 29th Dec. '25 as follows:—

I have been a regular subscriber to the monthly magazine "*Chinthaman* edited by that talented and well-known lady Sister Balammal and occasionally re it also. My daughters take a copy each and read it regularly. The magazine written in homely and beautiful Tamil. The choice of the subjects is most appropria and well conceived for educating our ladies in worldly knowledge and s evi The magazine is run on advanced conservative lines,—neither too r l n violently reactionary. It is thoroughly readable from page to page. It serv large support at the hands of the Tamil reading public. It will be a ver usef magazine for students of both sexes.

K. A. NARAYAN, Esq., c/o Messrs Paterson Simons & Co., Ltd., Kuala L mpu writes:—

I may say that those who have been regular readers of "Chintama. ' a very appreciative, especially womenfolk are jubilant over some of your pict esqu and telling articles.

Wishing you continued prosperity and rapid increase in subscribe

T. S. SANKARASUBBU, Esq., M.A., B.L., Nagercoil, writes under date 30—12- 25 a follows :—

I had an occasion to go through one of the volumes of your t in valuable and interesting magazine. I am sorry I did not make my acquainta wit it sufficiently early. "Your Chintamani is a beacon-light to Indian woman l."

(ஒரு சகோதரர் எழுதுவது.)

அம்மா !

தமிழகந்தோறும் அவசியம் அலர்ந்திருக்க வேண்டிய தங்கள் "சி ணி நாளுக்கு நாள் நல்வளர்ச்சி யுறுவது கண்டு மகிழ்கிறேன். அதில் தாங்கள் எ குறி தைகளிலே பெண்கள் விசேஷ பிரியங்கொள்ளுகிறார்கள்.

(ஸ்ரீமதி ஆர். சி. நாயுடு, தென்னாப்பிரிகா, எழுதுவது.)

ஸ்ரீமதி சகோதரிக்கு வந்தனம்.

'சிந்தாமணி' யென்னும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகையை யான் வாசி புறுகிறேன். என் போன்ற வெளிநாட்டில் பிறந்த பெண்மக்களுக்கு நமது தாய் வாசிக்கவும் உபாயமாகக் கற்றவர்கள் அதை விருத்தி செய்து கொள்ளத்தக்க செ கிடையாது. ஆதலால் பெரும் பான்மையாய் நம்பாஷையைக் கைவிட்டு இதர பாஷை கொள்ளுகிறார்கள். தாங்கள் மெத்த பிரயாசை யெடுத்து வெளியிடும் "சிந்தாம நாட்டிற்கு அளவு கடந்த நன்மையைச் செய்வதன்றி வெளி நாட்டிலுள்ள எங்களுக்கு பிரயோஜன முள்ளதாகவுமிருக்கிறது.

Printed by Srinivasa Varadachari & Co., 4, Mount Road, Madras.
and Published by Sister V. Balammal, Sullivan's Garden Road, Mylapore, Madras. 2,000—7.1.1926.